
நாத்திகத்திலிருந்து
இஸ்லாத்தை நோக்கி.....

**நாத்திகத்திலிருந்து இஸ்லாத்தை நோக்கி**
**الفرار من الإلحاد إلى الإسلام (الإسلام والإلحاد وجها لوجه) تاميلي**

பக்கம் - 130

شركاء التنفيذ:

دار الإسلام
جمعية الربوة
رواد الترجمة
المحتوى الإسلامي

يتاح طباعة هذا الإصدار ونشره بأي وسيلة مع الالتزام بالإشارة إلى المصدر وعدم التغيير في النص.

Telephone: +966114454900
ceo@rabwah.sa
P.O.BOX: 29465
RIYADH: 11557
www.islamhouse.com

## நாத்திகத்திலிருந்து இஸ்லாத்தை நோக்கி

# கேள்வி – பதில்

அல்லாஹ்வின் பெயர் கூறி ஆரம்பிக்கிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ் வுக்கே உரியது புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும் ஸலாத்தும், ஸலாமும்; அல்லாஹ்வின் தூதர் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும்,அவர்களின் தோழர்கள் மீதும்; அவர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றியோர் மீதும் உண்டாவதாக

'நாத்திகத்திலிருந்து புறப்பட்டு இஸ்லாத்தை நோக்கி என்ற இச்சிறு நூலானது நாத்திகத்;தின் இயல்பு மற்றும் அதன் சிக்கல்கள் குறித்தும், தெளிவான (உடனே அறிந்துகொள்ளத்தக்க) பகுத்தறிவு மற்றும் இயல்புணர்வு ஆகியவற்றுடன் எவ்வாறு முரண்படுகின்றது என்ற தெளிவையும் முன்வைக்கிறது

மேலும் இச்சிறு நூலானது படைப்பாளன் இருப்பை உருதிப்படுத்தும் சில சான்றாதாரங்களை எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே நாம் அல்லாஹ்வை பகுத்தறிவின் துணைகொண்டு அறிந்து கொள்வோம்; அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: "அல்லது இவர்கள் எவருடைய படைப்பும் இல்லாமல் தாமாகவே உண்டாகி விட்டனரா? அல்லது இவர்கள் தம்மைத்தாமே படைத்துக் கொண்டனரா?35 அத்தியாயம்: அத்தூர் (தூர் மலை)

பகுத்தறிவின் மூலம் இவ்வசனத்திற்கு மூன்று கற்பிதங்களை கொள்ளமுடிகிறது. அதற்கு நான்காவதான சாத்தியப்பாடு ஒன்றுகிடையாது. முதலாவது : (எப்பொருளுமின்றி அவர்கள் படைக்கபட்டார்களா? )

என்ற திருவசனம் குறிப்பிடும் சிருஷ்டி கர்த்தா(படைப்பாளன் இன்றி படைக்கபட்டுள்ளோம் என்ற கற்பிதம் இது சாத்தியமில்லாத ஒரு விடயமாகும் எனவே நாம் படைப்பாளன் ஒருவன் இன்றி எப்படி படைக்கப்படுவது ?

இரண்டாவது: நம்மை நாமே படைத்துக்கொள்வது (அல்லது அவர்கள் படைப்பவர்களா?) இதுவும் சாத்தியமற்ற ஒரு விடயமே. ஆக நான் படைக்கப்படுவதற்கு முன் என்னை எப்படி படைத்துக்கொள்வது? என்ற கேள்வி.

எனவே பகுத்தறிவின் அடிப்படையில் மூன்றாவது ஒரு சாத்தியப்பாடு (கற்பிதமே) எஞ்சியுள்ளது அது மிகத் தெளிவானதும் வெளிப்படையானதும் என்பதால் அதுபற்றி அல்குர்ஆன் குறிப்பிடவில்லை .அது என்ன? அதுதான் எங்களைப்படைத்த ஒரு படைப்பாளன் உள்ளான் அவனே எங்களைப்படைத்தான் என்பதாகும். எனவே பகுத்தறிவின் அடிப்படையில் அல்லாஹ்வை நாம் அறிந்து கொள்வோம்.

அதே போன்று அல்லாஹ்வை இயற்கை உள்ளுணர்வின் துணைகொண்டு அறிந்து கொள்வோம்

எமது உள்ளுணர்வின் மூலம், சிலைகளும் இயற்கையும் இப்பிரஞ்சத்தையோ, நுன்கிரிமிகளையோ, மனித உடலில் காணப்படும் செயல்பாடுகளையோ,அணு முதல் பெரும் கோள்களை மிகத் துள்ளியமாக படைக்கும் ஆற்றளைப் பெறவில்லை என்பதை நாம் அறிந்து வைத்துள்ளோம்.

காஃபிர்கள் வணங்கும் சிலைகள் மற்றும் நாத்திகர் விசுவாசிக்கும் இயற்கை ஆகிய இரண்டும் அவற்றின் படைத்தவனின்

பால் தேவையுடையன என்பதே யதார்த்தமாகும்

சிலைகளோ இயற்கையோ அவைகள் இரண்டினும் விவகாரம் சம்பந்தமாக எவ்வித அதிகாரத்தையும் பெற்றிருக்க வில்லை. உங்களுக்குள் வியக்கத்தக்க அளவில் காணப்படும் ஹார்மோன்களை; அவைகளால் கட்டுப்படுத்தவும் முடியாது, ஒவ்வொரு உயிரணுவிற்கும் மில்லியன் கணக்கான தகவல்களைக் கொண்ட மரபணு குறியீட்டை அவைகளால் வைக்க முடியாது, எந்த ஒன்றையும் உருவாக்கவோ அதாவது தங்களையே உருவாக்கிக்கிக்கொள்வதற்கான எவ்வித வல்லமையும் கிடையாது.

ஆகவே இவ்வாறான அதிசயங்கள் நிறைந்த இவ்வுலகைப்படைத்தவன் உண்மையில் மகத்தானவன் யாவற்றையும் அறிந்தவன் வல்லமை பொருந்தியவன் ஞானமிக்கவன் துதிக்குரியவன் என்பது தெளிவாகிறது.
பின்னர் இச்சிறு புத்தகம் நாத்திகர்களின் சந்தேகங்கள் மற்றும் படைப்பாளனின் இருப்புக் குறித்த பகுத்தறிவு மற்றும் உள்ளார்ந்த ஆதாரங்களை பிழையான வழிமுறைகளின் மூலம் அழிப்பதற்கான அவர்களின் முயற்சிகள் பற்றி விவாதிக்கிறது

அவர்களின் உலரல்களில் மிகவும் பிரபல்யமான ஒரு விடயம்தான் ‘ இப்பிரபஞ்சம் தற்செயலாகத் தோன்றியது’ என்பதாகும்.இது கற்பிதங்களின்(சாத்தியக்கூறுகளின் தோற்றத்தை) அடிப்படை பற்றிய அவர்களின் தெளிவின்மை மற்றும்; சரியான விளக்கமின்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்பட்டதாகும். காரணம் தற்செயலாக நிகழும் ஒரு விடயத்திற்கு மிகவும் இன்றியமையாத இரண்டு நிபந்தனைகள் உள்ளன. அவைகள் காலமும் இடமுமாகும்.

தற்செயல் நிகழ்விற்கு அதன் தாக்கத்தை ஏற்படுத்தும் நேரம் அடிப்படையான நிபந்தனையாகவும் உள்ளது.

அதேபோல் தற்செயல் நிகழ்வின் பிரதிபளிப்பு ஏற்படவும் சடரீதியான ஒரு இடம் இருப்பது நிபந்தனையாகக் கொள்ளப்படுகிறது

எனவே எமக்கு இப்பிரபஞ்ச உருவாக்கமானது தற்செயல் நிகழ்வு என எவ்வாறு குறிப்பிடமுடியும். அந்தவகையில் எமது இப்பிரபஞ்சமானது காலமோ இடமோ இல்லாது உருவானது எனக் குறிப்பிடுவதாயின் இப்பிரபஞ்சமானது தற்செயலாகவும் நிகழவில்லை என்பதே புரிதலுக்கு உட்பட்ட விடயமாகும்!

தொடர்ந்தும் இச்சிறு நூலானது மார்க்கத்தின் இருப்பு இன்றியமையாத ஒன்று எனவும் மார்க்கத்தின் அவசியம் குறித்தும்,உலக மக்கள் யாவரும் அல்லாஹ்வுக்கு கட்டுபட்டு நடப்பது மிக அவசியம் என்பது பற்றியும் இந்நூல் பேசுகிறது அல்லாஹ்வுக்கு வணக்கத்தின் மூலம் கட்டுப்பட்டு அடிபணிந்து நடப்பதுவே உண்மையான மார்க்கமாகும். எனவே நீ அல்லாஹ்வுக்கு அடிபணிகிறாய் மேலும் உம்மைப் படைத்தவனும் வாழ்வாதாரத்தை அளித்தவனும் எல்லா வகை அருளையும் நேர்வழி காட்டியவனையும் நீ வணங்கி வழிடுகிறாய்

ஆகவே வணக்கம் என்பது அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமையாகும்.ஏனெனில் அவன்தான் எம்மைப்படைத்து உயிர் வாழச்செய்து வாழ்வதற்கான வசதிகளையும் ஒழுங்கு செய்து தந்துள்ளான்.மேலும் எங்களில் செயல்களால் நம்மில் யார் மிகவும் சிறந்தோர் என்பதை சோதிப்பதற்காக அவனுடைய தூதர்களையும் எங்களிடம் அனுப்பி வைத்தான் . ஆகவே வணக்கம் என்பது அல்லாஹ் எம்மீதாக விதித்திருக்கும் கடமையாகும். ( உங்களில் அழகிய செயலையுடையவர் யார் என உங்களைச் சோதிப்பதற்காக அவனே வாழ்வையும் மரணத்தையும் படைத்தான் அவன் யாவற்றையும்

மிகைத்தவன் மிக்க மன்னிப்பவன்.) (2) அத்தியாயம்: அல் முல்க் (ஆட்சி) தொடர்ந்தும்;

இச்சிறு நூலானது இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்பதற்கான சில ஆதாரங்களையும்,அல்லாஹ் இஸ்லாம் அல்லாத வேறு எந்த மார்க்கத்தையும் ஏற்றுக் கொள்ளமாட்டான் என்பதன் யாதார்த்தம் குறித்த தெளிவையும் முன்வைக்கிறது.அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான் (இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்")(85) ஸூறா ஆலி இம்ரான்

எனவே இஸ்லாம் மர்க்கமே அனைத்து நபிமார்கள் மற்றும்,இறைதூதர்கள் மூலம் அல்லாஹ்வால் அனுப்பட்ட உண்மை மார்க்கமாகும்.

இஸ்லாத்தின் அடிப்படை அடையாளம் என்பதினுள் அல்லாஹ்வுக்கு; முழுமையாக கட்டுப்பட்டு அவனுக்கு மாத்திரம் வணக்கவழிபாடுகளை செய்வது உள்ளடங்கியுள்ளது

இஸ்லாம் என்பது ஒரு பரிபூரணமான சட்டதிட்டமாகும் அது மனிதனை அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்கவேண்டும் எனத் தூண்டுகிறது.

அல்லாஹ்வை ஏகனாக ஏற்று வாழ்வதற்கு அழைக்கும் ஒரே மார்க்கம் இதுவாகும். இந்தத் தவ்ஹீத் கொள்கையையே (ஏகத்துவக் கொள்கையையே) அனைத்து தீர்க்கதரிசிகளும் போதித்தனர்.

நபிமார்களான தீர்க்கதரிசிகள் தாம் கொண்டுவந்த மார்க்க

சட்டதிட்டங்கள் வித்தியாசப்பட்டாலும் அவர்கள் அனைவரும்; ஒரே ஏகத்துவக் கோட்பாட்டின் மீதே இருந்தனர்

அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுறான் (நிச்சயமாக, என்னைத் தவிர (உண்மையாக) வணங்கப்படத்தகுதியானவன் வேறுயாருமில்லை. எனவே என்னையே வணங்குங்கள் என நபியே நாம் உமக்கு முன்னர் எந்தத் தூதருக்கும் வஹி அறிவிக்காமல் அவரை நாம் அனுப்பியதில்லை)(25) அத்தியாயம்: அல் அன்பியா (நபிமார்கள்)

இன்று இப்புவியில் (தவ்ஹீத்) ஏகத்துவக் கொள்கையின் மீது (இவ்வுலகில்) இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர வேறு எந்தக் கொள்கையும் எஞ்சியிருக்கவில்லை.அதே வேளை ஏனைய கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டோர் குறைந்த அளவிளோ அல்லது கூடிய அளவிளோ இணைத்வைத்தல் என்ற விடயத்தை ஏற்றோராகவே காணப்படுகின்றனர். நபிமார்களின் (தீர்க்கதரிசிகளின்) மரணத்தின் பின் மக்கள் உண்மையான ஏகத்துவக் கொள்கையை விட்டுவிட்டு காலவோட்டத்தில் இணைவைப்புக் கொள்கைகளை பின்பற்றலானார்கள். இந்த வகைiயில் இன்றைய காலகட்டத்தில் நபிமார்கள் கொண்டுவந்த தூய ஏகத்துவக்கொள்கையை கொண்ட ஒரே மார்க்கமாக இஸ்லாம் மாத்திரமே திகழ்கிறது

இறுதியாக, இந்த புத்தகம் ஒரு மனிதன்; எவ்வாறு இறைவனுக்கு கட்டுப்பட்ட முஸ்லிமாக மாறுவது பற்றிய விளக்கத்தை தருவதுடன்;, இஸ்லாத்தின் பொருள் மற்றும் இஸ்லாத்தின் அவசியம் குறித்த தெளிவுபடுத்தல்களுடன் நிறைவடைகிறது.

நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் ஏன் இந்த உலகில் இருக்கிறோம்? நாம் இறுதியாக எங்கு போகவுள்ளோம் எனும் ஒவ்வொரு மனிதனின் மனதிலும் தோன்றும் இருத்தலியல் சார் கேள்விகள் அனைத்திற்கும் இஸ்லாம் பதிலளிக்கிறது.

இந்த கேள்விகளுக்கான பதிலை இஸ்லாம் அல்குர்ஆனில் ஒரே வசனத்தில் பதிலளிக்கிறது,. எமது இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் . (என்னைப் படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்) அத்தியாயம்: யாஸீன்

நான் எங்கிருந்து வந்தேன்?; என்ற கேள்விக்கு அல்லாஹ் என்னைப் படைத்தான் என்பதே இதற்குரிய பதிலாகும். இதனை அல் குர்ஆன் (அல்லதீ பதரனீ) அவன் என்னைப் படைத்தவன் என்று குறிப்பிடுகிறது

நான் எங்கு செல்லவிருக்கிறேன்? என்பதற்கான பதில்: எனது செயல்பாடுகள் குறித்த விசாரணைக்காக அல்லாஹ்விடம் செல்லவுள்ளேன். இதனை அல்குர்ஆன் ( வஇலைஹி துர்ஜஊன்) அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்)என்று குறிப்பிடுகிறது.
இவ்வுலகிற்கு எதற்காக வந்தேன்? அல்லாஹ்வை வணங்கவும் நான் பரீட்சிக்கக்கப்படுவதற்குமாகும்.

ஏன் நான் அல்லாஹ்வை வணங்க வேண்டும்? என்னைப்படைத்தவனான அல்லாஹ்வை வணங்குவதே இயல்பான விடயமாகும் இதுதான் அடியானுக்கும் இரட்சனுக்குமிடையிலான இயல்பான தொடர்பாகும். எனவே அடியான் தனது இரட்சகனும் படைப்பாளனுமாகிய அல்லாஹ்வை வணங்கவேண்டும். (என்னைப் படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்) மனிதர்ளை தினர வைக்கும் மூன்று கேள்விகளுக்குமான பதிலை ஒரு வசனமே உள்ளடக்கியுள்ளது! (என்னைப் படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்) அத்தியாயம்: யாஸீன்

ஆகவே இஸ்லாம் உலகத்திற்கான அல்லாஹ்வின் சட்டதிட்டமாகும்.

இஸ்லாம் என்பது ஒரு அடியான் தன்னை அல்லாஹ்விற்கு முழுமையாக அடிபணியச் செய்வதைக் குறிக்கும்.ஆகவே அவன் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வணக்க வழிபாடுகள் மூலம் கட்டுப்பட்டு நடப்பான்.மேலும் தன்னைப் படைத்தவனும் பொறுப்பாளனுமாகிய அல்லாஹ்வுக்கே அனைத்தையும் சமர்ப்பிப்பான்.

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் (எவர் நன்மை செய்த நிலையில் அல்லாஹ்வின் பால் தனது முகத்தை; முழுமையாக அடிபணியச்செய்கின்றாரோ அவர் பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டார்.) .(22) ஸூறது லுக்மான் முதாலாவது : உனது வாழ்வின் சிறிய பெரிய காரியங்கள் அனைத்திலும் அல்லாஹ்வுக்கு அடிமைப்பட்டடிருப்பது (கட்டுப்படுவது) (எனது தொழுகை, எனது வணக்க வழிபாடுகள், எனது வாழ்வு,எனது மரணம் ஆகியவை அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது என நபியே நீர் கூறுவீராக) (162) அவனுக்கு எவ்வித இணையுமில்லை.இதனைக்கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன்.நான் கட்டுப்பட்டோரில் முதன்மையானவன் ஆவேன்) (163) ஸூறதுல் அன்ஆம்

'எனது தொழுகை, எனது வணக்க வழிபாடுகள்,எனது வாழ்வு, எனது மரணம் ஆகியவை அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது' என்ற திருவசனத்தின் கருத்தாவது அனைத்து விடயங்களையும் அல்லாஹவுக்காகவே புரிகிறேன் என்பதாகும்.அதாவது நான் தொழுவதும் எனது பெற்றோருக்கு அடிபணிந்து நடப்பதும்,மக்கள் பயனடைவதற்காக நான் கற்பதும், மறுதினம் எனது இரட்சகனின் கட்டளைகளை ஏற்று நடப்பதற்கான சக்தியை பெற்றுக்கொள்வதற்காக தூங்குவதையும் அல்லாஹ்வுக்காகவே செய்கிறேன்.

இதுவே எல்லாக்காரியங்களிலும் அல்லாஹ்விற்கு அடிமைத்தனத்தை நிரூபிப்பது என்பதாகும் .அத்துடன் இதுதான் அல்லாஹ்விற்கு கட்டுப்படுதலின் அடயாளங்களின் ஒன்றாகவும் முக்கிய வெளிப்பாடுகளில் ஒன்றாகவும் காணப்படுகிறது

அறிவுத்தாகம் என்பது எமக்கு மிகத்தேவையானதை அறிந்துகொள்வதற்கான வேற்கையே.அது இஸ்லாத்தின் மூலமே தவிர நிறைவடைவதில்லை.

அதே வேளை நாத்திகமானது மனிதன் மரணிப்பதற்காகவே பிறந்தான் என்று அறிந்த மனிதனின் தேவையை நிறைவு செய்யும் ஒன்றாக காணப்படவில்லை

இச்சிறு நூலானது நாத்திக வாதம் குறித்த சிக்கல்களை பகுத்தறிவுரீதியாகவும் அறிவியல் ஆய்வுக்குட்படுத்தி இஸ்லாமிய மார்க்கத்தின் உண்மைதன்மை குறித்த ஆதாரங்களை பிரதிபளிக்கிறது. இந்நூல் கேள்வி பதில் அடிப்படையில் அமையப்பெற்றிருக்கிறது

வாருங்கள் நாம் அல்லாஹ்வின் அருள் கொண்டு பின்வரும் விடயங்களை ஆரம்பிப்போம்.

## 1- நாத்திகம் என்பதன் கருத்து யாது?

பதில் : நாத்திகம் ((Atheism)) என்பது எந்த அமானுஷ்ய(மனிதப் புலன்களுக்கு அப்பாற்பட்ட, மனித சக்திக்கு மீறிய) சக்திகளை நம்ப மறுப்பதாகும்.

ஆகவே, நாத்திகன் கடவுள் மற்றும் இறைதீர்க்கதரிசனங்கள்,மரணத்தின் பின் மீண்டும் உயிர்பெருதல் போன்றவற்றை மறுக்கிறான்.

## 2- நாத்திகத்தில் எதனை நீங்கள் குறைகூறுகிறீர்கள்?

பதில்: அதாவது மத நம்பிக்கையை விட நாத்திகத்திற்கு மிக உயர்ந்த நம்பிக்கை தேவைப்படுகிறது

ஆனால் நாத்திக சித்தாந்தமானது உள்ளார்ந்த மற்றும் உறுதியான ஆதாரங்கள் பகுத்தறிவுரீதியான அடிப்பகைள்,சட்ட ஆதாரங்களின் மீது அமையப்பெற்ற மதநம்பிக்கைக்கு மாற்றமாக போலியான அனுமானங்கள் மற்றும் தவறான கற்பனைகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு நம்பிக்கை என்பதை நாம் கண்கூடாகக் காணுகிறோம். நாத்திகராக மாற நீங்கள் பின்வருவனவற்றை கற்பனை செய்ய வேண்டும்: அ- இல்லாமையும், இல்லாமையும் ஒன்று சேர்ந்து அது பிரமான்டமான ஒரு பொருளாக மாறியது அதுதான் இந்த அற்புதமும் மிகத்துல்லியமான பிரமாணங்களும் முக்கிய வரம்புகளும் கொண்ட இப்பிரபஞ்சம் என்கின்றனர் ஆ.இப்பிரபஞ்சம் கொண்டு வந்த முக்கியமான வரம்புகள் மற்றும் உறுதியான பௌதீகவியல் அடிப்படைகள் ஆகியவற்றை தற்செயல் நிகழ்வே உருவாக்கியது.அதேசமயம் தற்செயல் நிகழ்வு நிகழ இரண்டு நிபந்தனைகள் உள்ளன அவைதான்; இடம் மற்றும் நேரம் என்பவையாகும். இப்பிரபஞ்சாமானது காலம் மற்றும் இடம்

இன்றி தோன்றியது என்று வைத்துக்கொண்டால் அது தற்செயலாகவும் நிகழ முடியாது என்பதே உண்மையாகும். இ-; தற்செயல் நிகழ்வும் இப்புவியின் ஆரம்ப சூழலும் உயிர் வாழ்வையும் பாக்டீரியாவையும் மனிதர்களையும் உருவாக்கியது என்று நாத்திகம் கூறுகிறது இக்கருத்தின் படி தற்சமயம் மனித அறிவானது அதன் வலிமையின் உச்சத்தில் இருக்கும் இக்காலத்தில் மனிதன் எளிமையான வாழ்வொழுங்கை உருவாக்க முடியாதவனாக உள்ளான் என்பதே உண்மையாகும்.ஈ- நாம் சரியானதாக ஏற்றுக்கொள்ளும் அனைத்து தார்மீக பெருமானங்களில், பெரும்பாலானவை முற்றிலும் சடவாதத்திற்கு எதிரான திசையில் செல்கின்றன – அடிப்படை அறநெறிகள் உலக நலன்கள் அடிப்படையில் சடரீதியாக பெரும் சுமையாகவும் இழப்பாகவும் கருதப்படுகிறது – அவை சடப்பொருள் அதன் உற்பத்திகளின் விளைவு என்பதை நீங்கள் நாத்திகராக மாறவேண்டுமெனில் இந்த சாத்தியமற்ற மன நிலை களை நீங்கள் நம்ப வேண்டும்.

;உ : இவ்வுலக மக்களை முழுமையான அழிவிலிருந்து தடுப்பதற்கான பகுத்தறிவுரீயான சடரீதியான எவ்வித அடிப்படையும் நாத்திக வாதத்தில் காணப்படவில்லை

சடவாத உலகமானது சரியானதையோ பிழையானதையோ அறியமாட்டாது?

எனவே இப்பூமியில் உள்ளோர் அனைவரையும் பூண்டோடு அழிப்பது அவர்களை நாத்திகத்தால் உயிர் வாழ வைப்பதற்கு சமமாகும். மேலும் நாத்திகம் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது ஆனால் அறிவு, ஆதாரம்;, பகுத்தறிவு அல்லது குணம்-பண்பாடு- ஆகிய எந்த அடிப்படையும்; இல்லாத ஒரு நம்பிக்கையாகும்.

## 3- படைப்பாளன் உண்டு என்பதற்கான ஆதாரம் என்ன?

பதில் : இதற்கான ஆதாரங்கள் அதிகம் உள்ளன. அவற்றுள் இரண்டை மாத்திரம் குறிப்பிடுகிறோம்

1-(முன்மாதிரி ஏதுமின்றி) படைத்தல்
2- செயல் திறன் மற்றும் அவதானம்

படைத்தல் -உருவாக்குதல் என்பதன் அர்த்தம் என்ன?

படைத்தல் என்பதன் கருத்து யாதெனில்

இவ்வுலகில் உள்ள அனைத்தும் இல்லாமல் இருந்து புதிதாக படைக்கப்பட்டவைகளாகும். அந்த வகையில் இவற்றைப் படைத்தவன் -உருவாக்கியன் ஒருவன் இருப்பது அவசியமாகும்.

இதனடிப்படையல் எங்களிடம் படைப்பாளன் ஒருவன் உள்ளான் என்பதற்கு வரையறையற்ற ஆதாரங்கள் நிறைய உள்ளன.

ஆகவே இப்பிரபஞ்சத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு அணுவும் படைத்தல் என்பதற்கான ஆதாரமாகும்.அதாவது இவைகள் அனைத்தும் படைக்கப்பட்டு இவ்வுலகில் வெளிப்பட்டுள்ளன என்பது இதன் கருத்தாகும். இதுவே படைப்பாளன் ஒருவன் உள்ளான் என்பதற்கான ஆதாரமாகும்.

இவ்வுலகை சற்று அவதானித்துப்பார்த்தால் இவ்வுலகில் காணப்படுபவை தற்காலிகமானது மற்றும் மாறக்கூடியது என்பதையும் நிரந்தமானதோ நித்தியமானதோ இல்லை என்பதையும் அவை தன்னிறைவு கொண்டதுமில்லை என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இவை அனைத்தும் இவைகளை படைத்தவன் ஒருவன் உள்ளான் என்பதை உமது மனதில் உறுதிப்படுத்துவதோடு மாத்திரமன்றி வெறுமனே இவ்வுலகத்தை இரு கண்களாலும் நோக்குமிடத்துஇவ்வுலகத்தை படைத்த(உருவாக்கிய) ஒரு இறைவன் இருக்கிறான் என்பது தெளிவாகும். இதன் காரணமாக அல் குர்ஆன் வசனங்களில் அதிகமானவை எம்மை சூழவுள்ள இவ்வுலகைப் பற்றியும் அதில் உள்ளவற்றைப் பற்றியும் அவதானம் செலுத்துமாறு பணிக்கிறது. (நபியே! அவர்களை நோக்கி) "வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை (சிறிது) கவனித்துப் பாருங்கள்" எனக் கூறுவீராக. எனினும், நம்பிக்கை கொள்ளாத மக்களுக்கு நம் வசனங்களும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும் ஒரு பயனுமளிக்காது. ஸூறா யூனுஸ் மேலும் அல்லாஹ் கூறுகிறான் (வானங்கள் பூமி மற்றும் அவையிரண்டிற்குமிடைப்பட்டவற்றை உண்மையான முறையிலும்,குறித்த தவணைக்காகவுமேயன்றி அல்லாஹ் படைக்கவில்லை என்பதை அவர்கள் தமக்குள் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா? நிச்சயமாக மனிதர்களில் அதிகமானோர் தமது இரட்சகனின் சந்திப்பை நிராகரிப்பவர்களாக இருக்கின்றனர்.) ஸூறதுர் ரூம் (99) மேலும் அல்லாஹ் கூறுகிறான் (வானங்கள் மற்றும் பூமியின் அதிகாரங்களையும்,அல்லாஹ் படைத்துள்ள ஏனைய வற்றையும் அவர்கள் பார்க்கவில்லையா?) (185) ஸூறதுல் அஃராப்

ஆக ஒவ்வொரு பொருளும் படைக்கப்பட்டவையே(புதிதாக உருவானவைகளே). இது படைப்பாளன் ஒருவன் உள்ளான் என்பதற்கான நேரடி ஆதாரமாகும்!

### 5--செயல் திறன் மற்றும் அவதானம் என்பதற்கான ஆதாரத்தின் அர்த்தம் யாது?

செயல் திறன் மற்றும் அவதானம் என்பதற்கான ஆதாரத்தின் அர்த்தம் யாதெனில்

பொதுவாக (quarks) (அனுக்கட்டமைப்பில் காணப்படுகின்ற அணுக்கூறுகள்) முதல் மிகப்பெரும் விண்மீன்கள் வரை செயல்பாட்டு ரீதியில் சிக்கல் நிறைந்த தொழிற்பாடுகளை கொண்டுள்ளன.
அதாவது அவைகள் வரையறுக்கப்பட்ட முக்கியமான அதற்கே உரித்தான தொழிட்பாட்டை நிறைவேற்றுகின்றன.

இயற்கையில் ஒவ்வொரு சிக்கல் நிறைந்த தொழிற்பாடுகளும் வெறுமனே இவ்வுலகின் இருப்பிற்கான மேலதிகமான படிநிலையாகும்;. ஆகவே படைப்பு(இருக்கும் பொருள்) ஓர் படி நிலையாகும்

அந்த வகையில்மேலும் இருக்கும் பொருளுக்குள் இருக்கும் சிக்கலானது, அதனுள் காணப்படுகின்ற ஆக்க மூலப்பொருட்கள் மற்றும் தொழிற்பாடுகளுடன் அமையப்பெற்றிருப்பின் தொழிற்பாடுகளற்ற வெறும் ஒரு பொருளை விடவும் படிநிலையில் கூடியது எனலாம்
அதாவது உன்னை சூழ காணப்படுகின்ற ஒவ்வொரு பொருளும் ஒரு குறிப்பிட்ட தொழிற்பாட்டை –கடமையை- செய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆக உம்மை சூழக் காணப்படுகின்ற ஒவ்வொன்றும் ஆக்க மூலப்பொருட்களுடன் கூடிய இயங்கத்தகு அம்சங்களைக் கொண்ட இருக்கமானசிக்கலான கட்டமைப்பை சுமந்து நிற்கிறது

ஒருபொருளில் காணப்படுகின்ற சிக்கலான இருக்கமான பிண்ணிப்பினைந்த கட்டமைப்புத் தொழிற்பாடானது அவை படைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றாதாரமாகும். அவ்வடிப்படையில் (படைப்பாளான்),உருவாக்கியவன் ஒருவன் இருப்பது அவசியம் என்பது தெளிவாகிறது.

உதாரணத்திற்கு விளக்கை எடுத்துக்கொள்வோம்; அதிலும்

இருக்கமான சிக்கலான பிண்ணிப்பினைந்த கட்டமைப்புத் தொழிற்பாடு காணப்டுகின்றது

ஆக மின் விளக்கானது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது
1-விளக்குத் திரி
2-திரிக்கு மின்சாரத்தை செலுத்தும் உலோகத்திலான கம்பி
3-திரியை பாதுகாக்கும் நிலையான வாய்வு – வாய்வுடனோ மின்சாரத்துடனோ எவ்வித்திலும் தொடர்புபடாது.
4- காற்று அல்லது நிலையான வாய்வை தடுக்கும் கண்ணாடி. இல்லாவிட்டால் திரி கருகிவிடும்
5-விளக்கை தாங்கி நிற்கும் தளம்: பீடத்துடன் விளக்கை இணைத்து மற்றும் மின்னோட்டத்திற்கான பாதையை உருவாக்குகிறது

இங்கு இந்த மின்சார விளக்கு ஒரு இருக்கமானசிக்கலான ஒன்றோடு ஒன்று இணைந்த ஒழுங்கு முறையை கொண்டிருக்கிறது இதனை பிரிக்கமுடியாது அத்துடன் இந்த விளக்கானது மிகக் கட்சிதமான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையான பகுத்தறிவுரீதியான செய்தியைக் குறிப்பிடுகிறது

மின்விளக்கின் கட்சிதமான உருவாக்கத்தை –படைப்பை- மறுக்கும் ஒருவர் அல்லது அது தற்செயலாகத் தோன்றியது என்று கருதும் -ஒருவர்; இதற்கான ஆதாரத்தை முன்வைக்கவேண்டும்!

விளக்கை உருவாக்கியவர் மின்சாரத்தின் ;பொருள், அதன் பாதைகள், விளக்கின் பயன் மற்றும் திரியின் உணர்திறன் ஆகியவற்றை அறிந்திருக்கிறார். எனவே விளக்கின் இருப்பானது அது ஒரு திறமையான தயாரிப்பாளரைக் கொண்டிருக்கிறது என்பதற்கான நேரடி அறிகுறியாகும்.மேலும் அங்கு காணப்படுகின்ற முற்றிலும் வித்தியாசமான பல விளக்குகள் தற்செயலானது என்று கூற முடியது

என்பதே யதார்த்தமாகும்!

இதே நிலையில் பகுத்தறிவு ரீதியாக ஆதாரம் கொள்வதற்கு மனிதனை எடுத்துக்கொள்ள முடியும் இங்கும் ஒரு இருக்கமான பிண்ணிப்பினைந்த ஒழுங்கு முறையொன்று இருப்பதை கண்டு கொள்ள முடியும். அதாவது அவனை படைத்து உருவாக்கிய ஒருவன் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

மின்விளக்கொன்று ஐந்து ஆக்கக் கூறுகளை கொண்டுள்ளது அதே வேளை மனிதப் படைப்பில் ஒவ்வொரு உயிரணுவிலும் நான்கு பில்லியன் ஆக்கக் கூறுகள் உள்ளடங்கியுள்ளது

4 பில்லியன் (கூறு) ஆக்கக் கூறுகள் ஒரு உயிரினத்தின் செயல்பாடுகளை உருவாக்குகின்றன, அவை: மரபணு குறியீடு, மரபணு அல்லது டிஎன்ஏ, ஆகிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. மேலும் இந்த(கூறுகள்) உமது உயிரணு ஒவ்வொன்றின் கரு மூலத்திலும்; அமைந்துள்ளன.

விளக்கின் 5 விஷேடமான கூறுகளுக்கு ஒரு தயாரிப்பாளர் உறுதியாக இருப்பதாக நீ என்னும்போது, உம்மை சீராகக் கட்டமைத்து படைத்த ஒருவன் கிடையாது என்று நீ நினைத்தால், இது உன் பிரச்சனைத் தவிர வேறில்லை

அல்லது இவர்கள் எவருடைய படைப்பும் இல்லாமல் தாமாகவே உண்டாகி விட்டனரா? அல்லது இவர்கள் தம்மைத்தாமே படைத்துக் கொண்டனரா?35 அத்தியாயம்: அத்தூர் (தூர் மலை)

உன்னைச்சூழ உள்ளவை அனைத்தும் முறையான இயங்கத்தகு சிக்கலான ஆக்க மூலப்பொருட்களை உள்ளடக்கியுள்ளது.

இயற்கையிலோ, அணுவிலோ, கோளங்களிலோ அல்லது உனது உடலிலோ, ஓரளவு செயல்பாட்டு சிக்கலானது இல்லாமல் எதுவும் கி;டையாது.

எனவே பொருட்களில் காணப்படும் செயல்பாடு சிக்கலானது ஒவ்வெரு அணு மற்றும் பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றிலும் காணப்படுகிறது உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் (வானங்கள் மற்றும் பூமியைப் படைத்ததிலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும,; மனிதர்களுக்குப் பயன் தருபவற்றை கடலில் கொண்டு செல்லும் கப்பல்களிலும், வானத்திலிருந்து அல்லாஹ் மழையை இறக்கி பூமி இறந்த பின் அதனை அவன் இதன் மூலம் உயிர்ப்பிப்பதிலும் எல்லாவிதமான உயிரினங்களை அவன் பரவச்செய்திருப்பதிலும்,காற்றுகளை சுழலச்செய்வதிலும்,வானம் பூமிக்கிடையில் வசப்படுத்தப்பட்டுள்ள மேகத்திலும் விளங்கிக் கொள்ளும் சமூகத்திற்கு பலஅ த்தாட்சிகள் உள்ளன.) (164) ஸூறதுல் பகரா

இக்கருத்தைப் பிரதிபளிக்கும் அல்குர்ஆனிய வசனங்கள் அதிகம் காணப்படுகின்றன.

பகுத்தறிவைப் பயன்படுத்தி சிந்திப்போர் தவிர வேறுயாரும் இது குறித்து நல்லுபதேசம் பெறமாட்டார்;. ((சிந்தனையுடையோர் தவிர மற்றவர்கள் நல்லுபதேசம் பெறமாட்டார்கள் ) (7) ஸூறா ஆலி இம்ரான்

எவர் தனது புத்தியைப் பயன்படுத்தி, படைப்பை அவதானித்தால் (படைத்தலுக்கான சான்றையும்).அதே போல் அப்படைப்புகளின்; நேர்த்தி மற்றும் செயல்பாடுகளை அவதானித்தால் (அவதானம் மற்றும் செயல்திறனுக்கான சான்றையும் அறிந்து கொள்வார் இதன் மூலமாக படைப்பாளன் ஒருவன் இருக்கிறான் என்பற்தகான ஆதாரம் உண்மையானது என்பதனை பகுத்தறிவு ரீதியாவே புரிந்து கொள்வார்!

## மனிதர்களும் மற்றும் பிற உயிரினங்களும்;; மிகவும் சாதாரனமான முன்னோடி உயிரினங்களிலிருந்து உருவாகாதது ஏன்?

பதில் : இங்கு இரண்டு பிரச்சினைகள் -சிக்கல்கள் காணப்படுகின்றன.

முதலாவது பிரச்சினை: மனிதன் ஆரம்ப உயிரினங்களிலிருந்து படைக்கப்பட்டான் என்ற கற்பனை ஒருபுறம் இருக்கட்டும்.ஆனால் ஒரு வகை உயிரினம் மற்றொரு இனத்திற்கு நகர்கிறது என்பதற்கான எவ்வித ஆய்வாதாரமும் கிடையாது.

ஆகவே மார்க்க மற்றும் பகுத்தறிவுரீதியான ஆதாரமுள்ள விடயத்தை மறுத்து, நேரடியான எவ்வித ஆதாரமுமில்லாத இந்த அனுமானத்தை (கற்பனையை) நாத்திகன் எவ்வாறு நம்புகிறான்! ஆச்சரியமான விடயம்!

இரண்டாவது பிரச்சினை : குறைந்தபட்ச மரபணு தொகுப்பின் (Minimum gene set concept ) கருத்தின் அடிப்படையில், ஒரு உயிரினம், அது எவ்வளவு எளிமையானதாக இருந்தாலும், 200க்கும் குறைவான மரபணுக்களைக் கொண்டிருக்க முடியாது.

மேலும் மரபணுக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை என்பது : எந்த ஒரு உயிரினமும் உயிர்வாழ முடியாத குறைந்தபட்ச அளவு மரபணுக்களைக் குறிக்கிறது.

மரபணுக்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையை விட ஒன்று குறைவாக இருந்தாலும் எந்த உயிரினமும் தோன்றியிருக்காது.

மரபணு என்பது தகவல்களை குறியாக்கம் செய்யும் அதிக எண்ணிக்கையிலான மரபணு குறியீடுகளைக் கொண்ட ஒரு தகவல்

நாடா ஆகும்.

வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச மரபணுக்கள் உள்ளன: அந்த வகையில் மரபணுக்களின் ஒரு தொகுதி (திறன்) ஆற்றலுக்கான குறியீடாக அமையப்பெற்றுள்ளது- ஏனெனில் ஆற்றல் இன்றி உயிரினத்திற்கு வாழ்வு கிடையாது - மற்றும் மரபணுக்களின் மற்றும் ஒரு தொகுதி உணவுக்கான குறியீடாகும். ஏனைய மரபணுக்கள் இனப்பெருக்கத்திற்கான குறியீடாகவும்; வாழ்க்கையின் அடிப்படை செயல்பாடுகளுக்கான குறியீடாகவும் காணப்படுகின்றது.இவ்வாறே ஏனை மரபணுக்களின் நிலையும்!

விஞ்ஞானிகள் வாழ்க்கைக்குத் தேவையான குறைந்தபட்ச மரபணுக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டதில்; அது இருநூறு மரபணுக்களுக்கு குறைவாக இருக்க முடியாது எனத் தீர்மானித்துள்ளனர். 'கிரெய்க் வென்டர்'; Craig Vente நிறுவனமானது குறைந்தபட்ச எண்ணிக்கையிலான மரபணுக்கள் முந்நூற்று எண்பத்தி இரண்டை விடக் குறையாது என்று முடிவு செய்துள்ளது(1)

மேலும் இப்புவியில் வாழும் மிகத் துல்லியமான உயிரினமான மைக்கோபிளாஸ்மாவில் 468 மரபணுக்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது வெறும் பருப்பொருள்(சடப்பொருள்) சார் விடயம் உலகம் வெறுமனே ஒரு பருப்பொருள்(சடப்பொருள்) சார் அமைப்பு என்றால், நாம் ஐதரசனை மனிதனுக்கு அனுப்ப வேண்டுமெனில், பூஜ்ஜியத்திலிருந்தே தொடங்க வேண்டும்!

ஆனால் பூஜ்ஜிய மரபணு, ஒரு மரபணு அல்லது நூறு மரபணுக்கள் என்று குறிப்பிடத்தக்க எதுவும் கிடையாது என அறிவியல் குறிப்பிடுகிறது. மேலும் எமக்கு குறைந்தபட்சம் ஒரு மாபெரும் தகவல்

தொகுதி தேவை என்றும் அவை இல்லையெனில் உயிரினம் ஆரம்பத்தில் இருந்தே தோன்றியிருக்காது என விஞ்ஞானம் கூறுகிறது.

இயற்கையில் தொன்மையானது எதுவும் இல்லை.ஆனால் ஒவ்வொரு அமைப்பும் ((system) ) ஒரு சுயாதீனமான பிரமிக்கத்தக்க கவர்ச்சியுடன் தொடங்கியது!

திகைப்பூட்டும் இந்நிலையானது உயிர்கள் தோன்றுவதற்கு முன்பே அவற்றை குறியாக்கம் செய்யும் தகவல் அமைப்பில் (முறைமையில்)இருந்துள்ளது.இந்த திகைப்பூட்டும் நிலையானது நாத்திகத்திகம் மற்றும், தெய்வீக படைப்பை மறுப்பவர்களின் முன் பெரும் தடைக்கல்லாக இருக்கும்!

துல்லியமான முக்கிய தொழிற்பாடுகளை உருவாக்கவல்ல 4 பில்லியன் பிரத்தியேகத் தகவல்களை நீ பெற்றுள்ளாய்- அந்தத் தகவல்கள் யா வும் ஒவ்வொரு கலங்களிலுமுள்ள உட்கருவில் உள்ள தகவல்களாகும்
நாத்திகவாதி மரபணு ஏதுமின்றி உயிரிணங்கள் தோன்றியதாக கற்பனை செய்துகொண்டிருந்தனர்;. ஆனால் இந்த கனவை அகற்ற குறைந்தபட்ச மரபணுக் கோட்பாடு வந்தது.

உயிரினங்கள் ஆரம்பகாலமுதலே செயல்பாட்டு ரீதியாக சிக்கலானதாக தோன்றின, இல்லையெனில் அவை ஆரம்பமாக தோன்றியிருக்காது

### 7- செயல் திறனுடன் செய்தல் மற்றும் கரிசனை என்பதற்கான எடுத்துக்காட்டுகள்; யாவை?

பதில் :இதற்கான எடுத்துக்காட்டுகள் மிக அதிகமானவை. வரையறுத்துக் குறிப்பிட முடியாது.

இப்புவியில் உள்ள பதிவேடுகள் கூடப் போதாது.
(பூமியில் உள்ள மரங்கள் அனைத்தும் எழுதுகோல்களாக இருந்து,இக்கடலும் அதனுடன் சேர்ந்து,இன்னும் ஏழு கடல்களும் மையாக இருந்தாலும் கூட அல்லாஹ்வின் வார்த்தைகள் எழுதி முடிந்து விடாது. நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனும் நுண்ணறிவாளனுமாவான்;) . ஸூறது லுக்மான்

ஆகவே பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு அணுவும் எமது அறிவின் ;அவதானத்திற்கான ஆதாரமாகும;; இதன் யதார்த்தம் பற்றி நாளை நாம் அறிந்து கொள்வோம்

அ- இன்சுலின் - குளுக்கோஸ்-செரிமான ஹார்மோன் - நீங்கள் சாப்பிட்ட அதே அளவு சக்கரையை கணையத்தால் சுரக்கச் செய்கிறது.
ஆ- இதயம் இரத்தைத்தைத் பாய்ச்சும் சக்கதியானது ஒவ்வொரு தசைகளும் அவைளின் தொழிற்பாட்டுக்கு செலவிடும் சக்தியுடன் சமமாகச் செல்கிறது.

இ- உமது வயிற்றில் உள்ள குழாய்கள் சாப்பிட்ட உணவு மீண்டு வாய்க்குள் வந்து தொந்தரவு படுத்தப்படாது இருக்கும் நிலையில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஈ-கழிவுகளை வெளியேற்றும் குழாய்கள் -துளைகள்- எல்லா நேரத்தில் உனது ஆடையில் பட்டு பாதிப்படையாத முறையில் உருவாக்கப்பட்டுள்ளது

- நீ பிறக்கும் போது உமது தாயின் வயிற்றில் இருந்து பாதுகாப்பாகவும் எளிதாகவும் வெளிவருவதற்கு உனது மண்டை ஓட்டின் எலும்புகள் -தின்மமானதாக -இருக்கமானதாக இருந்ததில்லை, ஏனென்றால் அவை இருக்கமானதாக இருந்திருப்பின், அவை உன்;

தாயின் வயிற்றில் இருந்து உடைந்த பிறகே வந்திருக்கும். மேலும் உன் மூளை முழுமையாக வளர்ச்சியடையும் வரையில் மண்டையோடும் வளர்ச்சியடைந்து முழுமைப்பெற்றிருக்காது.

ஊ- மின் சமிக்ஞை சிதறாது, வீணாகாது அல்லது பாதிப்பை ஏற்படுத்தாமலிருப்பதற்காக இப்போது நாம் பயண்படுத்தும் மின்சார கம்பிகளுக்கு –செய்திருப்பது போன்று .மின் சமிக்ஞைகளை கடத்தும் உன் நரம்புகளின் அனைத்து மைய்யப்பகுதிகளும் அதனை பாதுகாக்க மேற்படையால் (insulating layer)) மூடப்பட்டிருக்கும்

எ- எதிர்மின்னி அல்லது இலத்திரன், (electron அணுக்கருவை நொடிக்கு ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் சுற்றுகிறது. இல்லையெனில் நேர்மறையான அணுக்கருவுடன் ஈர்ப்பு விசையின் காரணமாக அணுக்கருவிற்குள் விழுந்து, பிரபஞ்சம் தொடங்க முன்பே சரிந்துவிழுந்திருக்கும். இதுவே அணுவின் உருவாக்கத்தின் சிறந்த வேகம் ஆகும்.குறிப்பு : எதிர்மின்னி அல்லது இலத்திரன், (electron என்பது அணுக்களின் உள்ளே உள்ள மிக நுண்ணிய ஒர் அடிப்படைத் துகள். நாம் காணும் திண்ம, நீர்ம, வளிமப் பொருள்கள் எல்லாம் அணுக்களால் ஆனவை. ஒவ்வோர் அணுவின் நடுவேயும் ஓர் அணுக்கருவும், அந்த அணுக்கருவைச் சுற்றி பல்வேறு சுற்றுப் பாதைகளை மிக நுண்ணிய எதிர்மின்மத் தன்மை உடைய சிறு துகள்களான எதிர்மின்னிகளும் சுழன்று வருவதை அறிவியல் அறிஞர்கள் கண்டுள்ளனர்.

ஏ- ஐதரசனின் (நீரியம் அல்லது (Hydrogen, ஹைட்ரஜன்) இரு அணுக்கள் இணையும் போது, ஐதரசனின் நிறை 0.007% சக்தியாக மாறும். மேலும் இந்த நிறை 0.007% க்கு பதிலாக 0.006%ஆக இருந்தால், புரோட்டன் நியூட்ரனுடன் இணையாது. அத்துடன் பிரபஞ்சம் வெறுமனே ஐதரசன் மாத்திரம் கொண்ட ஒற்றை அணு தனிமத்தைப் பெற்றதாக இருக்கும். மீதமுள்ள ஏனைய தனிமங்கள் தோன்றும் போது, நிறை

0.007% க்கு பதிலாக நிறை 0.008% இப்பின் ஒருங்கிணைப்பு மிக வேகமாக இருக்கும் அவ்வாறு நிகழும் பட்சத்தில் பிரபஞ்சத்தில் இருந்து ஹைட்ரஜன் உடனடியாக மறைந்துவிடும. இதனால் உயிர் வாழ்க்கை சாத்தியமற்றதாகிவிடும்.இதனால் ஐதரசனின் நிறையான எண் 0.006% மற்றும் 0.008% இடையே இருப்பது அவசியமாகும்.

உ- எலக்ட்ரான் (Electron mass) நிறை நியூட்ரான் (Neutron mass) 0.2% ஐக் குறிக்கிறது, மேலும் இதுவே அணுவை உருவாக்குவதற்கான நிலையான நிறை ஆகும்.

ஊ- முளைத்த பிறகு,முளைகள் (மொட்டுகள்) (குளிரானது) நேரடியாக ஒளி மூலத்தை நோக்கி செல்கின்றன. மற்றும் வேர்கள் கீழ்நோக்கிச் செல்கின்றன. இது மொட்டுகள் ஒளியை நோக்கிச் செல்வதற்கான அதி உணர்திறன் கொண்டவை என்பதைக் காட்டுகிறது. அது மாத்திரமின்றி தாவரமானது அவை செய்ய வேண்டிய அனைத்து தகவல்களும் விதைக்குள் மரபணுக்களாக குறியிடப்படுகின்றன என்பதையும் தாவரத்தின் பக்கவாட்டு வளர்ச்சி,மேல் நோக்கிய வளர்ச்சி மற்றும் வேர்களை நோக்கிய வளர்ச்சி, ஆகியவற்றை கட்டுப்படுத்தும் ஹார்மோன்கள் உள்ளன. மற்றும் இவை அனைத்தும் விதைக்குள் மறபனுக்களாக குறியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நீ சுவையான பழமொன்றை சாப்பிட்டுவிட்டு, பின்னர் உலர்ந்த, சுவையற்ற விதையை தூர எறிந்து விடுகிறாய். இதன் மூலம் நீ சாப்பிட்ட அந்த பழம் பெற்றிருக்கும்; மரபணுக்களை கடந்து செல்ல அனுமதியளித்துள்ளீர் அதாவது அந்தப் பழம் அதன் மரபணுக்களை -அதன் வாழ்க்கையின் தோற்றத்தை–வரண்ட வழுவழுப்பான கவர்சியற்ற ஒரு வித்தின் மீது மறைக்கும் போது உங்களுக்கு சுவையை அளிக்கிறது. சாப்பிட்ட பின் அவ்விதையை நிலத்தில் போடும் பட் சத்தில் அதற்குரிய பொறுத்தமான சூழல் அமையும் போது, கிளைகள் மற்றும் வேர்களுடன்

கூடிய ஒரு பழ மரத்தை உருவாக்கத் தொடங்கும். இவை அனைத்தும் எதையும் அறியாத தாவரங்களில் நடக்கும் விவகாரமாகும்!

ஆக பேசமுடியாத காது கேளாத அந்தப் பழத்துக்குள் தகவல் அமைத்து, அதில் உள்ள சர்க்கரையின் அளவை உங்கள் விருப்பப்படி சரிசெய்து தந்தவர் யார்?

அத்துடன்: நீர் சாப்பிட்ட பழத்தின் விதையைப் பொருட்படுத்தாது தூக்கி எறியும் வகையில் விதையை ஏற்றுக்கொள்ள முடியாததாகவும், விரும்பத்தகாததாகவும் ஆக்கியது யார்?

மேலும்: ஒரு புதிய தாவரத்தை அதன் அனைத்து விவரங்கள் மற்றும் செயல்பாடுகளுடன் உருவாக்கப் போதுமான மரபணுத் தகவல்களை விதையில் நிரப்பியது யார்?

நாம் சமீபத்தில் அறிந்து கொண்ட விடயம்தான் : நாம் ஆனந்தத்தில் வாழும் சடத்துவம் என்பது ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் விளைவாகும்.குறிப்பு : நிலைமம் அல்லது சடத்துவம் (ஜநெசவயை) என்பது ஒரு துணிக்கையின் இயக்க நிலையில் நேரும் மாற்றங்களுக்கு எதிராக அப்பொருள் கொண்டுள்ள உள்ளீடான தடுப்பாற்றல் எனக்கொள்ளலாம்.'ஒரு பொருள் அதன் இயக்க நிலையை மாற்ற விரும்பாத பண்பிற்கு சடத்துவம் என்று பெயர்'

'அல் குஸூருத்தாதி' சடத்துவம் அல்லது நிலைமம் என்பதன் கருத்து என்ன?

நீங்கள் ஒரு காரில் சென்று கொண்டிருக்கும் போது, திடீரென்று கார் நின்றுவிட்டால் என்ன நடக்கும்?

தானாக முன்னோக்கிச் செல்லுமல்லவா!அப்படித்தானே!?

இதனையே -மந்த நிலை- நிலைமம் என்பதனால் குறிக்கப்படுகிறது

நமது உலகின் மந்தநிலை-நிலைமம்- இப்போது இருப்பதை விட குறைவாக இருந்தால், மிகச்சாதாரன காற்றுக் கூட பாறைகளை நகர்த்தக்கூடும், மேலும் இதுபோன்றே உலகில் நாம் தொடர்ந்து எல்லா வகையான பொருட்களாலும் தாக்குதலுக்கு ஆளாக்கப்படுவோம்;!

இப்போது இருப்பதை விட மந்தநிலை அதிகமாக இருந்தால், நம் விரல்களை அசைக்கக்கூட முடியாது.(2)

செயலற்ற விசை அல்லது மந்தநிலை ஒன்றின் நிறையில் தங்கியுள்ளது.

பௌதீகவியல் விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்திய விஷயம் நமது சூரிய குடும்பத்தை உள்ளடக்கிய பால்வீதியின் நிறையில் 0.1 மில்லியன் மட்டுமே மந்தநிலையைக் கட்டுப்படுத்துகிறது.அதே நேரத்தில் பூமியின் நிறை 0.001 மில்லியன் மட்டுமே மந்தநிலையைக் கட்டுப்படுத்துகிறது.

நாம் வாழும் இப்பூமியில் உள்ள சீரான நிலைமம், மற்றும் அதன் மூலம் மேற்கொள்ளும் நமது அனைத்து செயற்பாடுகளும் ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் மொத்த ஆற்றலின்; விளைபொருளாகும்.

வானங்களையும் பூமியையும் இவற்றுக்கு மத்தியில் உள்ளவற்றையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை. இது (வீணென்பது) நிராகரிப்பவர்களின் எண்ணமே ஆகும். நிராகரிக்கும் இவர்களுக்குக் கேடுதான்; இவர்களுக்கு நரகமே கிடைக்கும்.)(27) ஸூறா ஸாத்

அறிவியல் விரிவடையும் போது ஞானத்தின் அற்புதங்களும்

படைப்பின் நுனுக்கங்களும் வெளிப்படும் (3)

பின்னர் நாம் எல்லோருக்கும் உள்ள கண்பற்றி சிந்திப்போமானால்

விளைபேச முடியாத அளவிற்கு மிகப்பெரும் அருளாக உள்ளதை காணமுடியும். (பார்க்கக்கூடிய) இரு கண்களையும், நாம் அவனுக்குக் கொடுக்கவில்லையா? (அவ்வாறிருந்தும் உண்மையை அவன் கண்டுகொள்ளவில்லை.) (8) ஸூறதுல் பலத்.

இருகண்ணின் தெளிவுத்திறன் ஐந்நூற்று எழுபத்தாறு மெகா பிக்சல்களுக்கு சமமானது.

கண் உலகில் மிகத் தெளிவான ஒளித்திரைகளை (லென்ஸ்களை) உள்ளடக்கியுள்ளது.

விழித்திரையில் உள்ள ஒளிச்சேர்க்கையின் அளவு அரை சதுர மில்லிமீட்டருக்கு அப்பால் கடந்து செல்லாது. மேலும் இது பல்வேறு பரிமாணங்களின் உள்ள பத்து மில்லியன் நிறங்களை வேறு படுத்தும் ஆற்றலைப்பெற்றுள்ளது.இது ஒரு அதிசயமான மற்றும் திகைப்பூட்டும் தெய்வீக படைப்பாகும்.

மேலும் உனக்கு முன்னால் உள்ள ஒன்றைப் பார்க்கும் வேளையில்;, விழித்திரையில் ஒளி விழுந்து,அந் நேரத்தில் பல சிக்கலான இரசாயன செயல்முறைகள் நடைபெறுகின்றன, அவை இறுதியில் மின்னோட்டத்தை உருவாக்குகின்றன. இந்த மின்னோட்டம் உன் கண்ணின் விழித்திரையில் இருந்து நரம்புக் கம்பிகள் மூலம் உன் மூளைக்கு அனுப்பப்படுகிறது. இங்கு மூளையானது இந்த மின்னோட்டத்தின் அதிர்வெண் ஒரு பார்வையாகும் என்பதை

விளக்குகிறது. மூளையில் முன்கூட்டியே ஒருங்கிணைந்த அகராதி வைத்தாற் போல், அதை அடைந்த மின்சாரத்தை உங்கள் முன்னால் இருப்பதைப் பற்றிய பார்வையாக மாற்றிவிடுகிறது.

நீங்கள் சற்று சிந்தீப்பீர்களாயின் இது ஓர் ஆச்சரியமான விடயமாகும்.

இந்த மூளை ஓர் இருண்ட எலும்பு பெட்டிக்குள் உள்ளது - இருண்ட பெட்டி என்பது மண்டை ஓடு என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

மின்சார மின்னோட்டம் மட்டுமே உமது மூளையை அடையும். அந்த மின்னோட்டம் பார்வை என்பதை மூளை எவ்வாறு விவரிக்கிறது? அந்த உள்ளுணர்வை ஏற்படுத்தியவன் யார்?!

உனக்கு அந்தப் பார்வையை எப்படி வழங்கினான்? சற்று சிந்தீப்பீராக!

உனது கண்ணைத்திறந்து பார்த்த மாத்திரத்திலேயே ஏற்படுகிறதல்லவா!

இதே நிலைதான் செவிப்புலனுக்கும் காணப்படுகிறது.

ஒலி அலைகள் உங்கள் செவிப்பறைக்குள் நுழையும் போது செவிப்பறை அவ்வலைகளை இயந்திர இயக்கமாக மாற்றுகிறது. பின்னர் இந்த இயந்திர இயக்கம் நடுத்தர காதுக்குள் உள்ள மூன்று மிகச் சிறிய எலும்புகள் வழியாக உள் காதுக்கு பயணித்து மின்னோட்டமாக மாற்றுகிறது.

இந்த மின்னோட்டமானது உற்புறக்; காதில் இருந்து மூளைக்கு

செல்கிறது. மின்அலைகளை மூலையானது ஒலிகளாக வேறுபடுத்தத் தொடங்குகிறது. அப்போது நீங்கள் ஒலியைக் கேட்கமுடிகிறது! நுனுக்கமான திட்டமும் ஒழுங்கும் வினைத்திறனும் மிக்க இச்செயற்பாட்டை தற்செயல் நிகழ்வு என எப்படிக் கூற முடிகிறது?!

செவிப்புலன் ஒலியை உணர்ந்து வேறுபடுத்தும் இச்செயன்முறையானது ஒரு கணப்பொழுதை விட மிகக் குறைந்த நேரத்தில் நடந்து முடிகிறது. இச்செய்திறனை சாதாரண படைப்பிடமிருந்தோ இல்லாமையிருந்தோ பெற முடியாது. ( நீங்கள் எதையும் அறியாத நிலையில் இருந்த நிலையில் உங்கள் தாய்மார்களின் வயிற்றிலிருந்து அல்லாஹ்வே வெளியேற்றினான். மேலும் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு உங்களுக்கு செவிப்புலனையும் பார்வைகளையும்,உள்ளங்களையும் அவனே அளித்தான்)(78) ஸூறதுன் நஹ்ல்

மூளையானது ஒவ்வொரு கணமும் கண்கள், காதுகள், தொடுதல், சுவை, நுகர்தல் என உடலின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான மின் சமிக்ஞைகளைப் பெற்று மிகத்துல்லியமாகவும் ஆச்சரியப்படத்தக்கவகையிலும் அவற்றை வேறுபடுத்தித் தருவது குறித்து சிறிது கற்பனை செய்து பாருங்களேன் ! (இது அல்லாஹ்வின் படைப்பாகும் அவனல்லாதோர் எதைப் படைத்தார்கள்;? என்பதை எனக்குக் காட்டுங்கள் எனினும் அநியாயகாரர்கள் தெளிவான வழி கேட்டிலேயே உள்ளனர்) (11) ஸூறது லுக்மான் (அனைத்துப்பொருட்களையும் மிக நுட்பமானதாக்கிய அல்லாஹ்வின் செயலாகும்.நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவன்) (88) ஸூறதுன் நம்ல்

அல்லாஹ்வின் அருள்களின் ஒன்றையாவது கணக்கிடுபவர் யார்தான் உள்ளார்?

ஆகவே உனது உடலில் உள்ள ஒவ்வொரு மூட்டுக்கள் மற்றும் தேவையான அசைவை தரும் ஒவ்வொரு எழும்புகள் பற்றி சிறிது சிந்திப்பீராக!

உடலியக்கத்தை உனக்கு பெற்றுத்தரும்; எலும்பிற்கு இடையே உராய்வின்றி தேய்ந்து போகாத மிருதுவான மூட்டுகள் பற்றியும் அந்த மூட்டுகளில் உள்ளே வைக்கப்பட்டுள்ள கிரீஸ் போன்ற திரவத்தை குறித்தும் கொஞ்சம் சிந்தித்துப்பார்!

அல்லாஹ்வின் அருள்களைப்பற்றி சிந்தித்து நன்றியுள்ள ஒருவனாக இருக்க அவனது அருள்கள் குறித்து சற்று சிந்தியுங்கள்

அல்லாஹ்வின் அருள்கள் கணக்கிடமுடியாததாகும் (மனிதர்களே!) வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கிறான் என்பதையும், அவன் தன் அருட் கொடைகளை மறைவாகவும் வெளிப்படையாகவும் உங்கள் மீது நிறைவாகவே சொரிந்திருக்கிறான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா? அல்லாஹ்வின் விடயத்தில் எவ்வித அறிவோ, வழிகாட்டலோ, ஒளி பொருந்திய வேதமோ இன்றி தர்க்கிப்போரும் மனிதர்களில் உள்ளனர்)(20). ஸூறது லுக்மான்

**8- சில நாத்திகர்கள் கரிசனை குறித்து குறிப்பிடப்படும் ஆதாரத்தை விமர்சித்து நோய்கள் மற்றும நிலஅதிர்வுகள் -நடுக்கம் - போன்ற நிலையற்ற விடயங்கள் காணப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.?**

பதில் : நாத்திகவாதியின் கூற்றின் படி பிரபஞ்சத்தில் நுணுக்கமான எந்த பொருட்களும் இல்லை என்பது, நுணுக்கமும் சீர்மையும் பெற்ற பொருட்கள் உள்ளன என்பதை எவ்விதத்திலும் மறுக்காது.

இதன் மூலம் இப்பிரபஞ்சத்தில் நுணுக்கமும் சீர்மையுமுள்ள அம்சங்கள் உள்ளன என்பதை நாத்திகவாதி உறுதிப்படுத்துகிறான்.

ஆக அடிப்படையில் நுணுக்கமும் நேர்த்தியுமுடைய அம்சங்கள் எதுவும் இல்லையென்றிருந்தால் நாத்திகவாதிக்கு நுணுக்கமும் நேர்த்தியும் இல்லாதவைகளை அறிய வாய்ப்பில்லை.

ஆக அடிப்படையில் நுணுக்கமும் நேர்த்தியுமுடைய அம்சங்கள் எதுவும் இல்லையென்றிருந்தால் நாத்திகவாதி நுணுக்கமும் நேர்த்தியும் இல்லாதவைகளை அறிய வாய்ப்பில்லை.

இப்பிரபஞ்சத்தில் உள்ளவை நுணுக்கமோ நேர்தியோ அற்றவை என அவர்கள் விவரிக்கும் விடயத்தை பொறுத்தவரை,இது அவர்களின் குறை அறிவையும்,இப்பிரபஞ்சத்தில் காணப்படும் பொருட்களின் நுணுக்கம் பற்றிய அறிவீனத்தையும் காட்டுகிறது.

பிரபஞ்சம் நேர்த்தியானது என்றோ அதனால் அதில் எந்த பேரழிவும் ஏற்படாது என்றோ விசுவாசிகள் கூறவில்லை. மாறாக, பிரபஞ்சம் நேர்த்தியானது , எந்த நோக்கமும் இல்லாமல் அதில் எதுவும் நிகழாது என அவர்கள் கூறுகிறார்கள்.

விண்கலத்தில் அதிக அளவு பெட்ரோலியப் பொருட்கள் இருப்பதால், எந்த நேரத்திலும்அது வெடித்துச் சிதறக்கூடும் என்று சொல்லும், அதில் நேர்த்தியிருப்பதை மறுப்பவர்களைப் போலவே நாத்திகரின் நிலையும் உள்ளது

இவ்வுலகம் நிரந்தரமாக இருப்பதற்கு படைக்கப்படவில்லை அதே போல் நாமும் கடவுள்களாக மாற வேண்டும் என்பதற்காகவும் படைக்கப்படவில்லை?

மாறாக நாம் அழகாக வடிவமைக்கப்பட்டு படைக்கப்பட்டதன் நோக்கம் நன்மை தீமை மூலம் சோதிக்கப்படுவதற்கேயாகும்.(மாறாக நாம் அழகாக வடிவமைக்கப்பட்டு படைக்கப்பட்டதன் நோக்கம் நன்மை தீமை மூலம் சோதிக்கப்படுவதற்கேயாகும்.) (35) அத்தியாயம்: அல் அன்பியா (நபிமார்கள்)

நன்மையும் தீமையும் மற்றும் ஒவ்வொரு சோதனையும் இறை சித்தம் மற்றும் இறைஞானத்தை மையமாகக் கொண்டே நடைபெறுகிறது.

## 9- பிரபஞ்சத்தை உருவாக்கிய ஒரு பௌதீக காரணி இருப்பதில் என்ன தடை இருக்கிறது? இதற்கான உதாரணமாக: இன்னொரு நாகரிகம் அல்லது வேறு ஏதாவது? குறிப்பாக ஏன் நித்திய கடவுள் இருக்க வேண்டும் ?

பதில்: ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாமிய அறிஞர்களால் நிறுவப்பட்ட ஒரு விதி உள்ளது. அந்த விதி பின்வருமாறு கூறுகிறது: 'படைப்பாளர்; பலர் இருப்பது செயல்கள் நிகழாமைக்கு வழிவகுக்கும்'(5)

'படைப்பாளர் பலர் இருப்பது| என்பதன் கருத்து அதிகமான படைப்பாளர் இருப்பது என்பது பொருள் அதாவது கேள்வியில் குறிப்பிடப்பட்டது போன்று எங்களிடம் குறித்த நாகரீகம் இருந்தது அது இதனை உருவாக்கியது அதற்கு முந்திய நாகரீகம் இருந்தது அந்நாகரீகம் இதனை சாதித்தது என்பது படைத்தோர் தொடர் ஒன்றை காட்டுகிறது

அதாவது பிரபஞ்ச உருவாக்கத்தில் இவ்வாறான தொடரிகள் எந்த செயல்களும் நிகழாமைக்கு காரணமாய் அமையும்.

இங்கு குறிப்பிடப்பட்ட செயல்கள் நிகழாமை என்பது பிரபஞ்சம்

மனிதன் அவை அல்லாதவை தோன்றியிருக்காது என்பதாகும்

படைப்பாளர்கள் பலர் தொடராக இருப்பது பிரபஞ்சமும் படைப்பும் தோன்றாமைக்கு வழிவகுத்திருக்கும்.

ஒரு நாகரீகம் அதை உருவாக்கிய மற்றொரு நாகரீகத்தின் மீதும்;, மற்ற நாகரீகம் அதற்கு முந்தி உருவாக்கப்பட்ட நாகரீகத்தின் மீதும் தங்கியிருந்தால்; முடிவற்ற தொடரை சார்ந்துள்ளது எனலாம்;.அதாவது இந்த நாகரிகமோ அல்லது அதற்கு முந்தைய நாகரீகமோ அல்லது அதற்கு முந்தைய நாகரீகமோ தோன்றவில்லை என்பது அர்த்தமாகும் அதாவது படைப்பினமோ வேறு எந்த ஒன்றும் தோன்றவே இல்லை என்பதாகும்

காரணம் ஒவ்வொரு நாகரீகமும் தோன்றுவதற்கு அதற்கு முந்திய நாகரீமொன்றின் மீதே தங்கியிருந்துள்ளது என்றால் அப்போது எந்த நாகரீகமோ பொருளோ தோன்றவுமில்லை என்பதாகும்

எதுவாக இருந்தாலும் எல்லாவற்றையும் படைத்த நித்தியமான முதல் படைப்பாளன் ஒருவன் இருப்பது அவசியமாகும்!

முடிவுரா தொடரி ஒன்று இருப்பதும் ஒவ்வொன்றும் அதற்கு முன்னுள்ள இன்னொரு வட்டத்தில் தங்கியிருப்பதானது எந்த உயிரினத்தையோ, எந்த உருவாக்கத்தையோ படைத்திருக்கமாட்டாது .ஏனென்றால் ஒன்றை உருவாக்கியவர்; அதற்கு முந்தைய ஒருவரை சார்ந்து இருப்பார், அவர்கள் இருவரும் அவர்களுக்கு முந்தியவரை சார்ந்திருப்பார்கள் இவ்வாறு தொடரி ஒன்றையும் படைக்கவில்லை என்பதை குறிப்பிடும்.

ஆகவே இந்தத் தொடரி ஒரு எல்லையில் நின்றுவிடவேண்டும்.

அவ்வாறு ஒரு எல்லையில் நிற்கும் போது முதல் படைப்பாளன் ஒருவன் இருப்பதை உறுதிப்படுத்துவதுடன் அவனுக்கு முன் எதுவும் இருக்கவில்லை என்பதை வலியுறுத்துகிறோம்!

### 10- பிரபஞ்சத்தை ஆளும் விதிகளைப் பற்றி நாம் அறிந்துள்ளோம் அத்துடன் நிலநடுக்கங்களுக்கான காரணத்தை நாம் நன்கு அறிவோம்.இவ்விதிகள் குறித்து நாம் அறிவோமானால்; நமக்கு படைப்பாளன்; தேவைப்படுவது ஏன்?

பதில்: பிரபஞ்சத்தையும் அதன் தோற்றத்தையும் உருவாக்க விதிகள் போதுமானவை என்று நாத்திகர் கருதுகிறார், மேலும் சில நாத்திகர்கள் 'ஈர்ப்பு விதி' என்ற கருத்தை நம்பியுள்ளதோடு. இப்பிரபஞ்சம் தோன்றுவதற்கு இதுவொன்றே போதுமானது எனகின்றனர். இந்தக் கருத்துப்பிழையானது என்பது ஒரு புறமிருக்க புவியீர்ப்பு விதியின் மூலத்தைப் பற்றி சிந்திப்பதன் மூலமும் இவ்விதியை உருவாக்கியது யார்? இப்பிரபஞ்ச உருவாக்கத்தில் தலையீடு செய்து தாக்கம் விளைவிப்பதற்கான பண்பை கொடுத்தவர் யார்? மேலும் சிந்திப்போமானால் இக்கருத்து பிழையானது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்!

ஆரம்ப அடிப்படைகளைப் பற்றி பொருட்படுத்தாது, ஈர்ப்பு விசை மாத்திரம் பிலியட் பந்தை உருலச்செய்வதற்கு வழிவகுக்காது என்பதே உண்மையாகும்!

எந்தப் பொருளும் உருவாகமால் (தோன்றாமல்) விதி (கோட்பாடு) மாத்திரம் இருந்து எந்தப் பயனும் கிடையாது
' புவி ஈர்ப்பு விசை' பிலியட் பந்தை உருவாக்கவில்லை.ஆனால் பிலியட் பந்தை பிலியட் தடியால் அடிக்கும் போது மாத்திரமே ஈர்ப்பு விதி என்பது செயற்படுகிறது.

ஈர்ப்பு விசை என்பது ஒரு சுயாதீனமான விடயம் அல்ல, மாறாக அது ஒரு இயற்கை நிகழ்விற்கான விளக்கமாகும்.

மேலும் புவியீர்ப்பு விதி (விசை) பில்லியர்ட் தடியை அழுத்தி நகர்த்தும் விசை இல்லாமல் பில்லியர்ட் பந்தை நகர்த்த முடியாது. அவ்வாறு செய்யும் போது மட்டுமே பில்லியர்ட் பந்து நகர்ந்து ஈர்ப்பு விதியின் (விசையின்) விளைவும் தோன்றும்.

ஆனால் நாத்திகனோ ஈர்ப்பு விசையின் இருப்பு மாத்திரம் பிலியட் பந்தையும் பிலியட் தடியையும் பந்து உருலுவதையும் படைக்க முடியும் என கற்பனை செய்து கொண்டிருக்கிறான்!

இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்ததில் பகுத்தறிவுக்கும் தர்க்கத்துக்கும் நெருக்கமானது எது? சிருஷ்டி கர்த்தாவா ?அல்லது (ஈர்ப்பு) விதியா?

எடுத்துக்காட்டுக்காக கூறுவதென்றால், கார் எஞ்சினில் காணப்படுகினற் உள் எரிப்பு விதிகள் கார் எஞ்சினை ஒரு போதும் உருவாக்காது.

கார் மோட்டாரில் எரிப்பு விதிகளை மாத்திரம் சேர்த்தால், மோட்டார் ஒரு போதும் இயங்கமாட்டாது. எனவே சக்தியை பிரவாகிக்கும் பெட்ரோல் இருக்க வேண்டும், அத்துடன் அவசியம் எரிபொறி இருக்க வேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மோட்டார் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே உள் எரிப்பு விதிகள் தோன்றி மோட்டாரும் இயங்கும்(குறிப்பு : உள் எரி பொறி ((internal combustion engine)) என்பது ஒரு வெப்பப் பொறியாகும். இதில் எரிபொருள் காற்றுடன் கலந்து ஓர் உருளை வடிவ எரியறைக்குள் எரிந்து பொறி இயங்கும் ஆற்றலைத் தருகிறது. இதில் உயர் வெப்பநிலை, உயரழுத்த வளிமங்கள் எரிவதால்

விரிவடைந்து ஏற்படும் விசையை பொறியின் ஓர் உறுப்புக்கு அளிக்கும். வழக்கமாக இவ்விசை உலக்கை அல்லது சுழலி அலகுகள் அல்லது சுற்றகம் அல்லது முற்செலுத்த கூம்பு குழலுக்கு தரப்படுகிறது. இந்த விசை அந்த உறுப்பை சிறிது தொலைவுக்கு நகர்த்தும். எனவே இதில் வேதி ஆற்றல் பயனுள்ள இயக்க ஆற்றலாக மாறுகிறது)

உள் எரிப்பு விதிகள் மாத்திரம் மோட்டார், எரிபொறி, பெட்ரோல், ஓட்டுநர் மற்றும் பாதை ஆகியவற்றை உருவாக்க போதுமானது என்று கருதுவது எவ்விதத்திலும் பகுத்தறிவு சார் விடயமல்ல!

பிரபஞ்சம் தோன்றியதை விவரிப்பதற்கு ஈர்ப்பு விதி மாத்திரம் போதுமானது என்ற கருத்தனாது எந்தவிதத்திலும் பகுத்தறிவு சார்ந்தது அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், இந்த ஈர்ப்பு விதி குறித்த கருத்தை நாம் சிறிது கற்பனை செய்தால்;, அது படைப்பாளர் தொடரி என்ற விடயத்தினுள் எம்மை நுழைத்துவிடும். இது குறித்த முன்னைய கேள்வியின் பதிலில் விளக்கியுள்ளோம். அதாவது படைப்பாளர் தொடரி என்பதுடன் இன்னொரு விதியும் செயற்படுகிறது என்று வைத்துக் கொண்டால் அங்கே எந்த உயிரினமோ எந்த விதியோ இல்லை என்ற முடிவுக்கே வரமுடியும்.

## II-இப்பிரபஞ்ச உருவாக்கத்தின் அடிப்படை தற்செயல் நிகழ்வு என்று கூறுவதில் என்னதான் பிழை –தடை- உள்ளது ?

பதில் : தற்செயல் நிகழ்வு என்பது சாத்தியப்பாடுகளின் அடிப்படைகள் குறித்த மடமைத்தனமும் அறிவீனமுமாகும்;.ஏனெனில் தற்செயலாக ;நிகழ்வொன்று நிகழ்வதற்கு ஒன்றிணைந்த பிரிக்க முடியாக இரு நிபந்தனைகள் உள்ளன.

அவைகள் காலமும் இடமுமாகும்

தற்செயல் நிகழ்விற்கு அதன் தாக்கத்தை ஏற்படுத்தும் நேரம் அடிப்படையான நிபந்தனையாகவும் உள்ளது.

அதேபோல் தற்செயல் நிகழ்வின் பிரதிபளிப்பு ஏற்படவும் சடரீதியான ஒரு இடம் இருப்பது நிபந்தனையாகக் கொள்ளப்படுகிறது

எனவே எமக்கு இப்பிரபஞ்ச உருவாக்கமானது தற்செயல் நிகழ்வு என எவ்வாறு குறிப்பிடமுடியும். அந்தவகையில் எமது இப்பிரபஞ்சமானது காலமோ இடமோ இல்லாது உருவானது எனக் குறிப்பிடுவதாயின் இப்பிரபஞ்சமானது தற்செயலாகவும் நிகழவில்லை என்பதே புரிதலுக்கு உட்பட்ட விடயமாகும்!

தற்செயல் நிகழ்வு சுயமாகவே தோன்ற முடியாது என்ற நிலையில் அதன் தாக்கம் எவ்வாறு வெளிப்படுகிறது?! என்று கூற முடியும்!

காலமும் நேரமும் ஒரு தற்செயல் நிகழ்வுக்கு அடிப்படை நிபந்தனையாக இருக்கும் நிலையில் தற்செயல் நிகழ்வின் இருப்புக்கு முன்னறே அதற்கு தாக்கம் இருக்கிறது என எவ்வாறு குறிப்பிட முடியும்?

## 12- பிரபஞ்சம் (முடிவில்லாதது) நித்தியமானது என்று கூறும் நாத்திகனுக்கு பதிலளிப்பது எப்படி?

பதில் வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியின்படி, Second Law of Thermodynamic பிரபஞ்சம் நித்தியமாக இருப்பது சாத்தியமற்றது(குறிப்பு வெப்ப இயக்கவியல் (Thermodynamics) என்பது வெப்பம், அதன் தன்மை, வெப்ப ஆற்றலுக்குப் பிற ஆற்றல் வடிவங்களுடான தொடர்பு போன்ற

விடயங்களை ஆயும் இயல். இயற்பியலின் ஒரு கிளைத் துறையான இது, இயற்பியல் முறைமைகளில், வெப்பநிலை, அழுத்தம், கனவளவு ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களின் விளைவுகளை ஆய்வு செய்கிறது. மேற்படி விளைவுகளைப் பெருநோக்கு (macroscopic) அடிப்படையில் துகள்களின் மொத்த இயக்கங்களையும், புள்ளியியல் முறைகளைப் பயன்படுத்தி இது ஆய்வு செய்கின்றது)

இவ்விதி குறித்து இலகுவாக விளக்குவதற்கு பின்வரும் உதாரணத்தை நாங்கள் தருகிறோம்: அறையில் ஒரு கோப்பை சூடான நீர் இருக்கிறது என வைத்துக்கொள்வோம் அவ்அறையின் வெப்பநிலை கோப்பையின் வெப்பநிலைக்கு சமமாக இருக்கும் அளவுக்கு வெப்பமானது சூடான நீரிலிருந்து அறையின் மேற்பரப்பை நோக்கி நகர்ந்து செல்லும். இதுவே வெப்ப இயக்கவியலின் இரண்டாவது விதி எனப்படுகிறது. இங்கு சக்தியானது காலம் முழுதும் மேலிருந்து கீழ்நோக்கிச் செல்கிறது.

இவ்விதியானது பிரபஞ்சம் தோன்றியது முதல், ஒவ்வொரு கணமும் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருட்களிலும் பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றிலும் வெப்பம் சமமாக இருக்க நடைபெறுகிறது. இவ்வாறு பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றினதும் வெப்பமானது சமநிலையை அடையும் வேளை (Thermal Death of Univers) வெப்ப மரணம் என்ற பெயரால் அழைக்கப்படும் ஒரு நிகழ்வு நடைபெறுகிறது. பிரபஞ்சம் நித்தியமாக இருந்திருந்தால், இது தற்போது இடைநிறுத்தப்பட்டிருக்கும் அதாவது வெப்பத்தால்; மரணம் ஏற்பட்டிருக்கும். ஆனால் உண்மையில் பிரபஞ்சம் இப்போது அதிகபட்ச என்ட்ரோபியை விட குறைவான நிலையில் உள்ளது. மேலும் அது இன்னும் வெப்ப மரணத்தை அடையவில்லை. எனவே அது நித்தியமானதும் அல்ல. மாறாக அதற்கே உரிய உறுதியான ஆரம்பம் உண்டு அதனுடன் சேர்ந்து காலமும்; இடமும் தோன்றியது.

இந்த பிரபஞ்சம் குறைந்தபட்ச எந்திரோப்பி(entropy) தொடங்கியது என்று அதே விதியின் படி நிரூபிக்கப்பட்டுள்ளது.அதாவது இதன் பொருள் முன்னுதாரணம் ஏதுமின்றி படைக்கப்பட்டுள்ளது என்பதாகும்(குறிப்பு எந்திரோப்பி என்பது : சிதறம் அல்லது உலைதி என்பது வெப்ப இயக்கவியல் செயல்முறையில் பயன்படும் வேலையாக மாற்ற முடியாத ஆற்றலைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் வெப்பவியக்கவியல் பண்பு ஆகும்).

இவ்வறிவியல் கோட்பாடு ஒரு புறமிக்க அதே வேளை நாஸ்திகவாதமானது இதற்கு முழுமையாக வேறுபட்டு மறு புறத்தில் இருக்கிறது

### 13- வினை விளைவுக் கோட்பாடு படைப்பாளனுக்கு ஏன் பொருந்துவதில்லை? அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால்: படைப்பாளனைப்; படைத்தது யார்? (குறிப்பு :.ஒரு நிகழ்வு நேரடியாக மற்றொரு நிகழ்வுக்கு மூலமாக இருக்கும் என இரு நிகழ்வுகளுக்கிடையிலுள்ள தொடர்பைப்பற்றி விளக்குவது வினை விளைவுக் கோட்பாடு)

பதில் : படைப்பினங்களின் விதிகள் ஏதும் படைப்பாளனுக்கு பொருந்தாது என்பது வெளிப்படையான உடன் அறிந்து கொள்ளக்கூடிய விடயமாகும்.

அவ்வாறு இல்லாதிருந்தால், நாம் சமையல்காரரை சமைத்தது யார்?என்றுகேட்டிருப்போம்

மற்றும் வண்ணபூச்சியை பூசியவரை பூசியது யாரென? கேட்டிருப்போம்

படைப்பாளன், காலத்தையும் இடத்தையும் படைத்தவன் என்பதால் அவனுக்கு எந்தச் சட்டமும் -கோட்பாடும்- பொருந்தாது, ஏனெனில் அவனே தான் படைத்ததை நிரூபித்துக்கொண்டிருக்கிறான்!

இரண்டாவது: நடக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் அதனை நிகழ்த்தியவன் ஒருவன் உள்ளான் என்பதே உண்மையாகும், ஆனால் படைப்பளனைப் பொருத்தவரை அவனைப் போன்று எதுவுமில்லை) (11) ஸூறதுஸ்ஷூறா

மூன்றாவது: படைப்பாளன் என்பது ஒரு நிகழ்வல்ல மாறாக அவன் நித்தியமானவன் -தொன்று தொட்டே இருந்தவன் அவனுக்கு முந்தியது ஏதுமில்லை- என்று கூறும் போது அவ்வாரானவனை படைத்தவன் யார் என்று எப்படிக் கூற முடியும்?

நான்காவது: படைப்பாளன் நித்தியமானவனாகவும்,தன்னிலே சுயமானவனாகவும் இருப்பது அவசியமாகும்,இல்லையெனில் ஒருவிடயத்தை செய்வோரின் தொடரி என்பது, அச்சசெயல்கள் நிகழாமைக்கு வழிவகுக்கும்;' என்ற சர்ச்சைக்குள் புகுந்து விடுவோம் அதனால் நித்தியமான தன்னிலே சுயமானவனாக இருக்கும் படைப்பாளன் ஒருவன் இருப்பது அவசியமாகும்.

## 14- பிரபஞ்சம் மிகப்பிரமாண்டமானது. சிறிய அளவில் இருக்கும் நாம் இந்த மாபெரும் பிரபஞ்சத்தின் மையமாக எப்படி இருக்க முடியும்?

பதில்: நாத்திகன் ஒரு தந்திரமான அனுமானத்தை உருவாக்குகிறார். அதுதான் பிரபஞ்சம் மிகப்பெரியது என்பதால், இந்த பிரபஞ்சத்தில் மனிதன் ஒரு மையம் அல்ல! என்பதாகும்.

இந்த அனுமானம் ஒரு விடயத்தை அடிப்படையாகக் கொண்டது:

அதாவது விவசாய நிலம் விசாலமானது அதன் உரிமையாளர் அந்த நிலத்துடன் ஒப்பிடுகையில் சிறியவர் என்பதால்: அவர் உரிமையாளர் அல்ல! என்பதினாலாகும்.

பொதுவாக இந்த விடயம் அளவைப் பற்றியது அல்ல.

பொருள் அளவு இல்லாத பண்பாடுகள்-ஒழுக்கங்கள்- தான் மிக உயர்ந்த மனிதருக்கும் மிகவும் தாழ்ந்த மனிதருக்கும் மத்தியில் வித்தியாசப்படுத்தும் மிகப்பெரிய அளவுகோலாகும்

ஆகவே மனிதர்கள் தங்களின் பண்பாடுகள் மூலமே அளவிடப்படுகிறார்கள். (எடை போடப்படுகிறார்கள்)

அளவுகள் எனும் விடயம் எதனையும் தீர்மானிப்பதற்கான அளவு கோலல்ல!

இதற்கு ஓர் உதாரணத்தைக் குறிப்பிட முடியும். அதாவது எங்களிடம் ஓர் அரசர் இருக்கிறார் அவர் தனது மகனுக்கு சில உபதேங்களையும், அறிவுரைகளையும் கூறி அதனை ஒரு புத்தகத்திலும் எழுதிக்கொடுக்கிறார் என்று வைத்து கொள்வோம். இதனை ஆட்சேபனை செய்யும் ஒருவர் வந்து பல மில்லியன் கணக்கான ஏக்கர்கர்களையும் நிலபுலங்களையும் சொந்தமாக வைத்திருக்கும் இவர் அவரிடம் உள்ள மில்லியன் கணக்கான ஏக்கர்கள் மற்றும் நிலங்களை விடவும் அளவிலும் நிறையிலும் குறைந்த அவரின் மகனின் மீது ஏன் கரிசனை காட்டுகிறார்? என்று கேட்டால் அது அளவோடு சம்பந்தப்பட்ட விடயமல்ல என்பது புரியும்

இவ்விடயத்தில் உயர் முன்மாதிரி இறைவனுக்கு (அல்லாஹ்வுக்கு) மாத்திரமே உண்டு

இது நியாயமான ஆட்சேபனையா?

ஆக இந்த விவகாரம் அளவிளோ நிறையிலோ கிடையாது

அப்படியானால், உலகில் உள்ள அனைத்து பௌதிகவியலாளர்கள் முடிவு செய்தது போல், இந்த பிரபஞ்சம் ஒரு ஊசி முனையை விட பல பில்லியன் கணக்கான மடங்கு சிறிய புள்ளியில் இருந்து தொடங்குகிறது அல்லவா?

ஆகவே அளவு என்பது ஒப்பீட்;டு ரீதீயானது

அப்படியானால் கடவுள் தான் விரும்பியதை தான் விரும்பியவாறு படைத்தால் நாத்திகனுக்கு என்ன -பாதிப்பு-நஷ்;டம்- ஏற்படுகிறது ?

தேவைக்கேட்ப செலவு செய்ய இறைவன் ஏதும் வளப்பற்றாக்குறையால் சிரமப்படுகிறானா?

அல்லாஹ் இக்குறையை விட்டும் தூய்மையானவன்.
உண்மையில் நாம் இப்பிரபஞ்சத்தின் மையப் புள்ளியாய் உள்ளோமா?
ஆம் மனிதா தெய்வீகக் கட்டளைகள்; (பொறுப்புசாட்டல்கள்) மூலம் நீ இப்பிரபஞ்சத்தின் மையப்புள்ளியாய் (பிரதானியாய்) உள்ளாய்.

தெய்வீகக் கட்டளைகளே (பொறுப்புச்சாட்டல்கள்) மார்க்கமாகும்.

மார்க்கம் என்பது நீ சுமந்திருக்கும் அமானிதமாகும். மேலும் நீ நிறைவேற்ற வேண்டும் என்று வேண்டப்பட்டிருக்கும் மிகப்பெரும் பரீட்சையுமாகும்.

எனவே மனிதா நீ அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு வணங்குமாறு

வேண்டப்பட்டுள்ளீர். இதன் மூலம் இப்பிரபஞ்சத்தின் மையயப்புள்ளியாய் இருப்பீர்.உனது அளவினாளோ,பலத்தினாலோ உனது திறமையினாலோ அல்ல. மாறாக இறை பொறுப்புச்சாட்டல்களினால் மாத்திரமே அது கிடைக்கும்

நீ நன்மை செய்யவும் தீமையை விட்டுவிடவும் விசுவாசிப்பதற்கும் நிராகரிப்பதற்கும் சக்திபெற்றவனாய் உள்ளாய்

நாம் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ நாம் எல்லோரும் பொறுப்புச்சாட்ப்பட்டுள்ளோம் என்பதை அறிவோம்.

நாத்திகன்; விசுவாசி மற்றும் அஞ்ஞானவாதி ஆகிய அனைவரும் தாம் பொறுப்புச்சாட்டப்பட்டவர் (ஆணையிடப்பட்டவர்) என்பதை அறிவதுடன் தெய்வீக ஆணையை உணர்வதுடன் , தார்மீக மனசாட்சியின் உருத்தலையும் அவன் எதிர் கொள்கிறான். மேலும் அவன் தனக்குள் இந்தக் காரியத்தைச்; செய், இந்தக் காரியத்தை செய்யாதே நன்மையை செய், தீமையை செய்யாதே, ஆகிய விடயங்களை அறிந்து கொள்கிறான். இவை அனைத்தும் பொறுப்புக்களையும் ஆணைகளையும் நிறைவேற்றுவதற்கு வேண்டப்பட்டோர் என்பதை நடைமுறையில் அறிந்து கொள்கிறோமல்லவா!

எனவே நாம் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டதின் அடிப்படையில் இப்பிரபஞ்சத்தில் மையப் புள்ளியாகத் திகழ்கிறோம்.

மேலும், நாம் இந்த பிரபஞ்சத்தின் மையத்தில் புலனுணர்வும் அறிவாற்றலும் பெற்றவர்களாக உள்ளோம். அந்தவகையில் நாம் எமது இருப்பினதும் எம்மை சுற்றியுள்ள பிரபஞ்சத்தினதும் யதார்த்தங்களை அறிந்து கொள்கிறோம் மேலும் உணர்வதோடு மட்டுமன்றி புரிந்து விளங்கியும் கொள்கிறோம். மேலும் எமது இருப்பின் அர்த்தத்தை நன்கு

புரிந்துகொள்கிறோம்.

ஆகவே இவ்வாறான நிலையில் இருக்கும் நாம் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டப்பட்டோராகவும், பொறுப் புச்சாட்டப்பட்டோராகவும்,பொறுப்புக்கூறக்கூடியவர்களாகவும்,குற்றம் சுமத்தப்படக்கூடியவர்களாகவும், விசாரணைக்குட்படுத்தப்படக்கூடியவர்க ளாகவும் உள்ளோம்!

எனவே நாம் கரிசனை மூலம் வடிவமைப்பின் ;பேரழகையும் சிறப்பையும் புரிந்துகொண்டோரும், மேலும் படைப்பினங்கள் நேர்த்தியாகவும் மிகவும் திறன்படவும் படைக்கபட்டுள்ளது என்பதை அறிந்து புரிந்து கொண்டோரும் என்ற அடிப்படையில் நாம்; பொறுப்புச்சாட்டப்பட்டவற்றை செயல்படுத்தவும் அல்லது அதனை நம்பாது மறுப்பதற்குமான ஆற்றல் கொண்டவர்களாக உள்ளோம். அந்தவகையில் தேர்வு செய்தில் முழு உரிமை எமக்கு உள்ளது அந்த வகையில் விசுவாசம் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான ஆற்றலைப் பெற்றுள்ளளோம்.( இவ்வுரிமையைப் பெற்றுள்ள நாம் சரியானதை அறிவுபூர்மானதை தெரிவு செய்வதில்தான் வெற்றியுள்ளது என்பதை விளங்க வேண்டும்).

ஆகவே நாம் இப்பிரபஞ்சத்தில் மைய்யத்தில் – உயிரினமாக- உள்ளோம். (நிச்சயமாக "(நாம்) பொறுப்பைச் சுமந்து கொள்வீர்களா?" என்று நாம் வானங்கள், பூமி, மலைகள் ஆகியவற்றிடம் நாம் எடுத்துக்காட்டினோம். அதற்கு அவை அதைப் பற்றிப் பயந்து, அதைச் சுமந்து கொள்ளாது விலகிவிட்டன. அத்தகைய பொறுப்பைத்தான் மனிதன் சுமந்துகொண்டான்.(ஆகவே) நிச்சயமாக அவன் அறியாதவனாக தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டவனாக இருக்கிறான்.) (72) ஸூறதுல் அஹ்ஸாப்

## 15- பல கிரகங்கள் உள்ளன, எனவே, நிகழ்தகவு கோட்பாட்டின் படி (Probability theory15), வாழ்க்கைக்கு ஏற்ற கிரகம் இருப்பது இயற்கையானது இந்த அனுமானம் சரிதானா? என சில நாத்திகர்கள் கேட்கிறார்கள்

பதில் பல கிரகங்களின் இருப்புக்கும் தேர்ச்சிக்கான ஆதாரம் பற்றிய விமர்சனத்திற்கும் என்ன தொடர்பு உள்ளது?

பிரச்சினை செயற்கை பொருட்களை உருவாக்கத் தேவைப்படும் (அடிப்படை) மூலப் பொருளில் கிடையாது.

அனைத்து காய்கறிகளும் பழங்களும் விலங்குகளும் நிறைந்த காட்டில் இருக்கிறேன் என்றால் காட்டின் நடுவில் சுவையான சமைத்த உணவுப் பாத்திரம் திடீரென்று என் முன் தோன்றும் என்று அர்த்தமல்ல பிரச்சினை மூலப்பொருட்கள் அல்ல! மாற்றமாக அதனை ஒழுங்குபடுத்தி நிகழ்த்துபவன் உள்ளான் என்பதுவே அதன் கருத்தாகும்.

மேலும் உலகில்; உள்ள பாலைவனங்களில் மணல் இருக்கிறது என்பதை நாம் அறிவோம் அந்த மணலால் செய்யப்டும் டிஜிட்டல் செயலிகள் மற்றும் eSIM(Subscriber Identity Module) இலத்திரணியல் சிம்கள்அதிலிருந்து எந்த முயற்சியும் செயற்பாடும் இன்றி பெற்றுக்கொள்ள முடியும் என்பது அதன் அர்த்தமல்ல!

இங்கு பிரச்சினை மூலப்பொருளிலல்ல. மாற்றமாக அதனை உருவாக்குவதிலும் திறன்பட செய்வதிலுமே தங்கியுள்ளது.

பூமியைப் போல இவ்வளவு நேர்த்தியுடனும்; வினைத்திறனுடனும் உருவாக்கப்பட்ட பல கோல்களுக்கு மத்தியில் வெறுமனே கோல்களின்; தொகுதி இருந்தால் மட்டும் போதாது.

இங்கு குறிப்பிட்ட உருவாக்கத்திற்கு வினைதிறன்; வடிவமைத்தல் மற்றும் படைத்தல் ஆகிய விடயங்கள் அத்;தியாவசியமாக உள்ளது. (அனைத்துப் பொருட்களனைத்தையும் மிக நுட்பமானதாக்கிய அல்லாஹ்வின் செயலாகும்) (88) ஸூறதுன் நம்ல்

அதிகமான கோள்கள் இருப்பது இப்புவிக்கோளில் உயிர் வாழ்வு –உயிரினம்- இருப்பதை எவ்விதத்திலும் நியாயப்படுத்தாது.

ஏனைய கிரகங்களின் இருப்பானது,உன்னை நீயே படைத்துக்கொள்வதற்கு முன் உமது செயல்பாடுகள், உறுப்புகள் மற்றும் ஹார்மோன்கள் அனைத்தையும் பிரமிக்கத்தக்கவகையில் கட்டுப்படுத்துகின்ற உமக்குள் காணப்படுகின்ற நான்கு பில்லியன்; மரபணுக் குறியீட்டை நியாயப்படுத்தாது

எனவே உயிர் என்பது ஒரு தகவல் அது பருப்பொருள் அல்ல. நானும் நாத்திகர்களில் ஒருவரும் கோள்களில் ஒன்றின் மீது ஏறி, மிகவும் பிரமிக்கத்தக்கவகையில் இயங்கும் சிக்கலான சாதனத்தைக் கண்பிடித்துவிடுகிறோம் என வைத்துக்கொள்வோம். அதன் செயற்பாடுகளை நாம் இன்னும் புரிந்து கொள்ளாவிட்டாலும் கூட, நாம் இருக்கும் பிரமாண்டமான கோளின் அளவை வைத்து இந்த சாதனத்தை உருவாக்கியவனை மறுக்க முடியுமா?

இந்தச் சாதனத்தைப் பார்க்கும் போது என்னையும் நாத்திகனையும் உருவாக்கியவன்; திறமைவாய்ந்தவன் என்று கூற தெளிவான மன உள்ளுணர்வு எம்மைத் தூண்டுகிறது

படைப்பாளன் ஒருவன் உள்ளான் என்ற தெளிவான மனஉணர்வை (பகுத்தறிவு சார் உணர்வை) யார் மறுக்கிறானோ அவன்தான் ஆதாரத்தை கொண்டுவர வேண்டுமே தவிர அதனை

உறுதிப்படுத்துபவன் அல்ல!

நேர்த்தியும் வியப்புமிக்க இப்பிரபஞ்சத்தில் வாழும் நாத்திகன்தான் ஆதாரத்தை கொண்டுவர வேண்டுமே தவிர விசுவாசியல்ல!

அஞ்ஞான நாத்திகர் 'கார்ல் சாகன்'; ஒருமுறை 'தொடர்பு' Contact' என்ற நாவலை எழுதினார், அதில் விஞ்ஞானிகள் வேற்று கிரக நுண்ணறிவை எவ்வாறு அவர்கள் தேடுகிறார்கள் என்பதை அவர் கூறுகிறார்

அந்தக் கற்பனை நாவலில், விண்வெளிக்கு அப்பால் இருந்து வரும் நீண்ட எண்களின வரிசையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இந்த ஆரம்ப வரிசையானது ஒரு குறிப்பிட்ட கணித பெருமானத்தை காட்டுகிறது.ஒரு வகை பெருமானத்தை காட்டுவதால் இந்தச் செய்தி வேறொரு நாகரீகத்திலிருந்து நம்முடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கிறது என்று முடிவு செய்ய போதுமான பகுத்தறிவுசார் ஆதாரமாக உள்ளது என்கிறார்!

நகைச்சுவை என்னவென்றால், ஒரு பிரபலயமான அஞ்ஞானவாதியான கார்ல் சாகன் ஒரு சிறிய நூலில் படைப்புக்களில் காணப்படுகின்ற சிக்கலான( Complexity விடயங்கள் மற்றும் அமைப்பொழுங்கு குறித்தும் அவரது பகுத்தறிவு ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு பொருளின் உருவாக்கம் மற்றும் வினை திறனை ஏற்றுக்கொண்டதற்கான ஆதாரமாக அமைகிறது!

பிரதான எண்களின் தொடர் ஒரு மாபெரும் நாகரிகத்தின் இருப்பை உறுதிப்படுத்துகிறது என ஆணித்தரமாக கூறுகிறீர்.ஆனால் உமது உடலில் காணப்படுகின்ற ஒவ்வொரு உயிரணுவிற்குள்ளும்

உள்ள நான்கு பில்லியன் அனுக்கூறுகளைப் பற்றி என்ன கூறப்போகிறீர்?அவற்றில் ஒரு அனுக்கூறில் கோளாறு ஏற்பட்டால் மிகப்பெரும் பேரழிவு ஏற்பட்டிருக்கும்? இந்த வினைத்திறன் குறித்து பகுத்தறிவற்ற தர்க்கரீதியற்ற நாத்திக வினோதங்களின் மூலம் எதைத்தான் கூற வருகிறீர்கள்?

படைப்பாளன் குறித்த கருத்தியல் கட்டமைப்பு வெளிப்பாட்டின் விளக்கத்தை தடுக்க ஏய்ப்புகளை நாடுவது புத்திக்கு –பகுத்தறிவுக்கு- பொருந்துவதாக இல்லை. (நபியே! அவர்களை நோக்கி) "வானங்களிலும் பூமியிலும் உள்ளவற்றை (சிறிது) கவனித்துப் பாருங்கள்" எனக் கூறுவீராக. எனினும், நம்பிக்கை கொள்ளாத மக்களுக்கு நம் வசனங்களும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும் ஒரு பயனுமளிக்காது. ஸூறா யூனுஸ்

## 16- தொன்றுதொட்டே உள்ள (ஆதியோ அந்தமோ இல்லாத)ஒரு கடவுளை விடவும் அதிக கடவுளர்கள் ஏன் இருக்க கூடாது?

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் (வானம் பூமி ஆகிய) இவ்விரண்டிலும்; அல்லாஹ்வைத்தவிர வேறு கடவுள்கள் இருந்திருப்பின் அவையிரண்டும் சீர் குலைந்திருக்கும்) (22) அத்தியாயம்: அல் அன்பியா (நபிமார்கள்)

அல்லாஹ்வுடன் இன்னொரு கடவுள் இருப்பது பன்மைத்துவத்தை வேண்டிநிற்கும்.பன்மைத்துவம் எப்போதும் தேவையை வலியுறுத்தும்.
தேவைப்பாடு என்ற குறையிலிருந்து படைப்பாளனான அல்லாஹ் பரிசுத்தமானவனாக உள்ளான். காரணம் தேவைப்பாடானது இப்பிரபஞ்சத்தின் பாதுகாப்பின்மையையும்,சீர் குலைவையையும் ஏற்படுத்திவிடும்.

தேவையுள்ள கடவுள் இருக்கு போது இப்பிரபஞ்ச இருப்புக்கான எந்த உத்தரவாதமும் இருக்கமாட்டாது!

(வானம் பூமி ஆகிய) இவ்விரண்டிலும் அல்லாஹ்வைத்தவிர வேறு கடவுள்கள் இருந்திருப்பின் இவையிரண்டும் சீர் குலைந்திருக்கும் அர்ஷுடைய இரட்சகனாகிய அல்லாஹ் அவர்கள் வர்ணிப்பதை விட்டும் தூய்மையானவன்)(22) அல் அன்பியா (நபிமார்கள்)

படைப்பாளனான அல்லாஹ் தேவை மற்றும் பற்றாக்குறை போன்றவற்றிலிருந்து பரிசுத்தமானவனாக உள்ளான். எனவே அவன் எவ்விதத் தேவையுமற்றவன் நிலைத்திருப்பவன் புனிதமிக்கவன்

முன் குறிப்பிட்டவைகளுடன் இன்னொன்றையும் குறிப்பிடுகிறேன். அதாவது இரு ஒரே அதிகாரம் பெற்ற கடவுள்கள் இருப்பது அவர்களுக்கு மத்தியில் பரஸ்பர இணக்கப்பாடு ஏற்படுவதை விட முரண்பாடே ஏற்படும் என்பதே மிக சாதாரண பகுத்தறிவிற்கு புரியும் விடயமாகும். அது மாத்திரமின்றி பல கடவுள்கள் இருப்பது என்பது பல நாட்டங்களும் விருப்பங்களும் இருப்பதை காட்டும். பல விருப்பங்கள் என்பதன் அர்த்தம் ஒவ்வொருவரும் மற்றவரின் தேவையில் சார்ந்துள்ளார் என்பதாகும். ஆகவே இதன் விளைவாக வானங்களில் மற்றும் பூமியில் சீர் குழைவு ஏற்படும.

மனிதனின் உள்ளுணர்வு அல்லாஹ் -இறைவன் ஒருவன் என்பதை உறுதிப்படுத்தும்.ஒரு பௌதிகவியலாளர் அல்லது பௌதிகவியாளர் அல்லாதவரோ இப்பிரபஞ்சத்தை மிக நுணுக்கமாக அவதானித்தால் அவர் கூட ஒரு படைப்பாளனைத்தான் கற்பணை செய்வார். காரணம் இது ஒரு உள்ளுணர்வு.

## 17-மார்க்கம் எதற்காக?

மிகக்கொடிய ஒரு நாத்திகன் பொய்யை விட உண்மை மிகவும் சிறந்தது என நம்புகிறான்? அல்லவா!?
மிகக்கொடிய ஒரு நாத்திகன் நேர்மை என்பது மோசடி செய்வதை விட மிகவும் சிறந்தது என நம்புகிறான் அல்லவா?

இக்கலைச்சொற்கள் இவ்வுலகிற்குரியதல்ல.மேலும் இந்த பௌதிக உலகில் இதன் கருத்தையோ தேவையோ நியாயப்படுத்தத்தக்க எதுவுமில்லை.

அவ்வாறாயின் உண்மையென்பதன் கருத்து யாது?
நேர்மை என்பதன் கருத்து யாது?

அணுவின் ஆழத்ததை பகுப்பாய்வு செய்து பார்த்தால் உண்மை மற்றும் பொய் ஆகியவற்றின்; கருத்துக்களை உற்று நோக்க முடியும்.?

விண்மீன்களில் உள்ள திரள்களில் காணப்படுபடுகின்ற பௌதிகவியல் சார்ந்த விடயங்கள் அல்லது ஹோமோன்களில் காணப்படுகின்ற இரசாயன மாற்றங்களையும் கூர்ந்து அவதானித்தால் நேர்மை மற்றும் துரோகம் பற்றிய பண்புகளை அவதானிக்க முடியும்.?

இக்கலைச்சொற்கள்- மரபுச் சொற்கள்- எவையும் இப்பௌதீக உலகை சார்ந்தவை அல்ல என்பதை புலப்படுத்தும்.

ஆனால் யதார்த்தமான மரபுச் சொற்களாகும்
மாறாக இது விடயங்களிலே மிகப்பிரதானமானது.

ஒரு மனிதனின் மதிப்பு (பெருமானம்) அவனது ஒழுக்கத்தை

அடிப்படையாகக் கொண்டது. அவனது உடல் அளவிற்கோ, அல்லது அவனில் காணப்படும் அணுக்களின் எண்ணிக்கைக்கோ அல்லது அவன் பெற்றிருக்கும் செல்களின் திறனிலோ கிடையாது.

ஒரு மனிதனின் மதிப்பு இறை ஆணையை அவனுள்ளே கடைப்பிடித்து ஒழுகுவதில்தான் தங்கியுள்ளது.

இம் மதிப்பில்(பெருமானமானத்தில்) இச்சட உலகில் காணப்படுகின்ற எதுவாக இருந்தாலும் மனிதருடன் கூட்டுச்சேர மாட்டாது

இவ்வுலகில் நல்ல மனிதர் கெட்ட மனிதர் ஆகியோர் உள்ளனர் ஆனால் நல்ல கல் மலை, தீய –மோசமான கல் மலை என்று எதுவும் கிடையாது.

நேர்மையான கோள் -கிரகம்- என்றோ துரோகம் செய்யும் கோள் என்றோ நாம் அவதானித்ததில்லை.

ஆகவே மதிப்புக்கும், இலக்காக கொள்ளப்படுவதற்கும் இருப்புக்கும் உரியவனாக மனிதன் மாத்திரமே காணப்படுகிறான்

மனித ஜின் இனங்கள் மாத்திரமே தாம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டோர் என்பதை உணர்ந்தவர்கள்.

பண்பாடு பற்றிய உணர்வென்பது எமக்குள் ளே காணப்படும் இறை ஆணையின் இயல்பான உள்ளுணர்வின் ஒரு பகுதியே தவிர வேறில்லை

மனிதனைப் புரிந்து கொள்ள மார்க்கம் இன்றியமையாத ஒரு விடயமாகத் திகழ்கிறது.

பண்பாடுகளின் கருத்தை நியாயப்படுத்தி வலியுறுத்தும் ஒரே விடயம் மார்க்கமாகும். ஏன் அது இருக்க வேண்டும்.அதை கடைப்பிடித்து ஒழுகுவது இன்றியமையாத ஒரு விடயம் என்பதை ஏன் நாம் உணர்கிறோம் ?

காரணம்-பண்பாடுகளுக்குறிய வடிவை தரக்கூடிய ஒன்று இருக்கும் என்று இருந்தால் அது மார்க்கம் தான்

எனவே பண்பாடுகளை -ஒழுக்கத்தை- இறை ஆணையின் வட்டத்தின் ஊடாக மாத்திரமே புரிந்து கொள்ள முடியும்.

மனித இனத்தில் அது அடிப்படையானது என்பதை மார்க்கத்தின் மூலமே அறிந்து கொள்ள முடியும்.

மார்க்கத்தின் ஊடாக மாத்திரமே இவ்வுலக இருப்பின் நோக்கத்தையும் நாம் கட்டாயம் கடைப்பிடித்தொழுகவேண்டியது அவசியம் என்று உணரும் ஒழுக்கம் பற்றியும் அதை கடைப்பிடித்து ஒழுகாது இருந்தாலும் அது இறைபொறுப்புச்சாட்டல்களில் ஒரு பகுதி என்பதை அறிந்து கொள்கிறோம்.

மார்க்கம் ஒரு கட்டாய மனிதத் தேவையாகும். மதத்தினூடாகத்தான் நாம் இங்கு எதற்காக வந்துள்ளோம் என்பதை அறிகிறோம்?

மேலும் மரணத்தின் பின் என்ன நடக்கும் என்பதையும் அறிகிறோம்

மேலும் இருப்பின் அர்தத்தையும் அறிந்து கொள்கிறோம் அத்துடன் இவ்வுலகில் எம்மிடம் வேண்டப்பட்ட விடயங்ளை அறிந்து கொள்கிறோம்

ஆகவே மனிதனை ஈடுபடுத்திடக் கூடிய மிக முக்கயமான வற்றை அறிந்து கொள்வதற்கு தவிர்க்க முடியாத ஒன்றாக மதம் விளங்குகிறது.

எனவே, மதம் இல்லாமல்,முழு உலகமும் முழுமையான குருட்டுத்தன்மை வாய்ந்ததாகவும் முழுமையான –நீலிசமாக – ஒன்றுமில்லை என்ற நிலைக்கு மாறும்

'இம்மை மறுமையயின் வெற்றி மற்றும் மகிழ்ச்சிக்குரிய வழி இறை தூதர்களின் மூலமேயன்றி கிடைக்கப்பெறமாட்டாது. அதே போல் அவர்களின் மூலமே தவிர நன்மை தீமை பற்றி விரிவாக அறிந்து கொள்ள வேறு வழி கிடையாது. அதே போன்று இறைவனின் திருப்பொருத்தத்தை அவர்களின் ஊடாக மாத்திரமே அடைந்து கொள்ள முடியும்' என இப்னுல் கையிம்; ரஹிமஹுல்லாஹ் (அல்லாஹ் அவர்மீது அருள் புரிவானாக!) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (6)

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா ஹிமஹுல்லாஹ் (அல்லாஹ் அவர்மீது அருள் புரிவானாக!)குறிப்பிடுவது போல் மார்க்கமென்ற சூரியனும் தூதுத்துவமென்ற சூரியனும் உதிக்க வில்லையெனில் இவ்வுலகம் இருளும் சாபமும் நிறைந்தாக காணப்படும் என்று குறிப்பிடுகிறார்கள். (7)

மார்க்கமின்றி படைப்பின் இலக்கு பற்றியோ நன்மையின் அர்த்தத்தையோ அதன் மதிப்பையோ அறிந்து கொள்ள முடியாது.

இறைத் தூதுத்துவம் இன்றி இவ்வுலகானது பயங்கராமான அபத்தவாதம்(வீணான குழப்பம்) நிறைந்ததாக மாறிவிடும்(குறிப்பு: அபத்தவாதம் என்பது பொதுவாக வாழ்க்கை அபத்தமானது என்ற தத்துவக் கோட்பாடு. இந்த உலகம் அர்த்தம் அல்லது உயர்ந்த நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை மற்றும் பகுத்தறிவினால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது என்பதை இது குறிக்கிறது).

மார்க்கம் மறைந்து மக்கள் தீர்கதரிசிகளின் தூதுத்துவங்களை மறுத்துவிட்டால், கார்ல் சாகன் சொல்வது போல் மனிதன் நட்சத்திரக் கழிவுகளாகவும், சார்த்தர் சொல்வது போல் பூச்சிகளாகவும் மாறிவிடுவார்கள்.(8)

ஸ்டீபன் ஹாக்கிங் சொல்வது போல் மனிதன் உண்மையில் இரசாயனக் கழிவாகவோ அல்லது இன்னும் துல்லியமாக கூறுவதாயின் இரசாயன குப்பையாகவோ மாறிவிடுவான்.(9)

இறைதீர்க்கதரிசனம் ஒன்றே இவ்வுலக இருப்பின் நாடித்துடிப்பாகும். மேலும் இறைதீர்க்கதரிசனத்தின் வழிகாட்டுதல்கள் இன்றி மிக அற்புதமான கண்டுபிடிப்புகளும்; மிகவும் உன்னதமான ஆசைகள் -விருப்பங்களும் பயங்கரமானவைகளாக மாறிவிடும்!

மார்க்கம இல்லாமல், உலகின் மொத்த அழகும் பயங்கரமான பிசாசுகளாக மாறும்.

நாம் இவ்வுலகில் எதற்காக இருக்கிறோம்? மரணத்தின் பின் என்ன நிகழும் ? போன்ற இருத்தலியல் பற்றிய கேள்விகளில் ஏதாவது ஒன்றை எந்த நாத்திகவாதியிடத்தில் கேட்டால்

ஒன்றில் உனது கேள்வியை பிழையாக்கி பொய்யான கருத்துகளை கூறி வாதிடுவான் அல்லது முற்றிலும் அமைதிகாப்பான்

எனவே மார்க்கம் என்பது மனிதனின் புரிதலுக்கும், தார்மீக விழுமியங்களின் அவசியத்தைப் புரிந்துகொள்வதற்குமான இயற்கைத் தேவையாகும். மேலும் இருத்தலின் அர்த்தத்தையும் படைப்பின் நோக்கத்தையும், வெற்றியை எய்து கொள்ளவும் தேவையான ஒன்றுமாகும். மேலும் அல்லாஹ்வுக்கு அடிமைத்தனத்தை நிரூபித்து

அதன் மூலம் வெற்றியை பெற்றுக் கொள்வதுமாகும்.

மேலும் அற நெறி –ஒழுக்கமானது மூளையின் அல்லது சமூகத்தின் விளைவாக இருப்பதில் என்ன தடை உள்ளது?

உண்மையில் மூளையானது சட உலகில் காணப்படுகின்ற ஒரே மாதிரியான பௌதிக கட்டமைப்புக்களையே உள்ளடக்கியுள்ளது.
மூளை எவ்வளவு சிக்கலானதாக இருந்தாலும் அல்லது சடரீதியான உடல் வடிவமைப்பு சிக்கலானதாக இருந்தாலும், பூஜ்ஜியங்களின் கூட்டுத்தொகை பூஜ்ஜியத்தை மட்டுமே உருவாக்கும்.

சடப்பொருள் நன்மையை தீமையை அறியாதிருந்தால், மூளையும் அது போலத்தான் இருக்குமல்லவா!

இங்கு நாம் நாஸ்திகர் இடத்தில் கேட்போம்:முழு பௌதிக உலகும் தார்மீக ரீதியாக நடுநிலையாக இருக்குமேயானால்;, நல்லது கெட்டது பற்றிய கருத்து எவ்வாறு தோன்றியது? எனவே அதற்கு நல்லது அல்லது கெட்டது எதுவுமே தெரியாது?

இரண்டாவது கேள்வி: பூமியில் உள்ள அனைத்து மக்களையும் அழிப்பதிலிருந்து காப்பாற்றும் மூளை தடுப்பான் எது?
விலங்குக் கூண்டுக்குள் தாழ்த்தப்பட்ட மனித இனங்களை நுழைவிப்பதை விட்டும் தடுப்பது எது?

நாஸிஸ்ட் –4 ம் நடவடிக்கைத்திட்டம் - மூலம் நடத்தப்பட்ட இயற்கைத் தேர்வுத் திட்டத்தில் நடந்தது போல், நோயுற்றோர், ஊனமுற்றோர், இயலாதோர்- வயது முதிர்ந்தோர்- மற்றும் தாழ்த்தப்பட்ட இனங்களை அழிப்பதில் இருந்து மூளையைத் தடுப்பது எது? (10)

சடரீதியான மூளையானது இந்தக் கேள்விகளுக்கான பதிலை தவறோ சரியோ எனக் கூறுவதற்கான ஆற்றலைப் பெற்றிருக்கமாட்டாது

மூளையானது ஒழுக்கரீதியாக பக்கசார்பின்றி காணப்படும்.காரணம் அதுவும் இந்தப்பூமியின் அணுக்களிலிருந்து கட்டமைக்கப்பட்டுள்ளது.

எனவே மூளைக்கும் ஒழுக்கத்திற்கும் மத்தியில் அருகிலிருந்தோ தூரத்திலிருந்தோ எவ்விதத் தொடர்பும் கிடையாது.

சமூகம், ஒழுக்கத்தின் தோற்றுவாய் என்ற கருத்தைப் பொறுத்தவரை, அது ஒரு விசித்திரமான கருத்தாகும்;. ஏனென்றால் ஒழுக்கம் என்பது மனிதனை ஒரு மனிதனாகக் கருதுகிறது. சமூகத்தை அல்ல.

மேலும், சமூகம் என்பதும் அதே பொருற் கூறுகளினால் ஆக்கப்பட்ட ஒன்றாகும். எனவே பூஜ்ஜியங்களின் கூட்டுத்தொகை மூலம் பூஜ்ஜியத்தை மட்டுமே உருவாக்கலாம். எனவே அடிப்படையில் சட உலகத்திற்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத ஒழுக்கத்தை சமூகம் எவ்வாறு உருவாக்கிக் கொண்டது?

அதாவது இக்கருத்து உண்மையாக இருந்தால், ஒழுக்கத்தை சமூகத்தின் ஒரு விளைபொருளாக நாம் கருதியிருப்போம். நாஸிஸ்ட்கள் செய்தது சரியானது என்று சமூகம் கருதுவதன் காரணமாக நஸிஸ்ட்கள் மற்றவர்களை அழித்ததும் சரியானது –நியாயமனாது- என்ற நிலைக்கு மாறியிருக்கும்;

நாஸிஸ்டுக்களை விசாரிப்பதற்கு உலகம் தீர்மானித்த போது பொதுவாக அவர்களின் ஒழுக்கத்தின் அடிப்படையில் விசாரித்ததே

தவிர அது சமூகத்தின் -விளைபொருளாக -முடிவாக அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.அவ்வாறில்லையெனில் நாஸிஸ்ட்களை விசாரணைக்குட்படுத்தியிருக்கவோ, அவர்கள் ஆரம்பத்தில் செய்தது தவறு என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவோ முடியாதிருந்திருக்கும். ஏனெனில் ஒழுக்கம் என்பது சமூகத்தில் இருந்து வேறுபட்ட தனித்துவமான ஒரு விடயமாகும். ஆகவே சரியான விடயம் என்பது நல்ல சமுதாயத்திலும், தீய சமுதாயத்திலும் ஒன்றாகவே உள்ளது.

பிழையான – தவறான- விடயம் என்பது நல்ல சமுதாயத்திலும், தீய சமுதாயத்திலும் ஒன்றாகவே உள்ளது.

எனவே ஒழுக்கமானது மூளை மற்றும் சமூகத்திற்கு அப்பாற்பட்ட- (சமூகத்தைத் தாண்டிய) ஒரு கருத்தை கொண்டிருக்கிறது. என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

## 19-உலக நாகரீகத்தில் அதிக கடவுளர்கள் இருக்கிறார்கள். அவ்வாறாயின் ஏன் குறிப்பாக அல்லாஹ்வை மாத்திரம் விசுவாசிக்க வேண்டும் எனக் கூறுகிறோம்?

பதில் : அனைத்து மதங்களிலும் அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படக்கூடிய எந்த கடவுளும் இருக்க வில்லை.

ஏனைய மதங்களுடனான எமக்குள்ள வேறுபாடு என்னவென்றால் அந்த மதங்களை ஏற்றோர் அல்லாஹ்வுடன் சேர்த்து சிறிய கடவுள்களை எடுத்துக்கொண்டனர் உதாரணத்திற்கு குறிப்பிடுவதாயின் கிறிஸ்து மதத்தில் அல்லாஹ்வுக்கு நிகராக யஸூஃ மற்றும் பரிசுத்த ஆவியும், இந்து மதத்தில் விஷ்னு, சிவா, மற்றும் பிரம்மா போன்ற கடவுள்களை எடுத்துக்கொண்டுள்ளமையைக் குறிப்பிட முடியும். இது போன்றே ஏனைய மதங்களில் காண முடிகிறது.

ஆகவே அனைத்து மதங்களும் ஏகனான ஒரே அல்லாஹ்வை விசுவாசம் கொள்வதுடன் -நம்புவதுடன் -இப்பிரபஞ்சத்தையும் உயிர்களையும் படைத்தவன் அவனே என்றும் ஏற்றுக்கொள்கிறது.

என்றாலும் அவர்கள் அல்லாஹ்வுடன் வேறு சில கடவுள்களை ஏற்படுத்திக்கொண்டிருப்பதுதான் தவறான விடயமாகும்

மேலும் பலதெய்வக் கொள்கையுடையோர் அவர்களின் சிலைகள் கூட உண்மை தெய்வங்களாக எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக அவர்கள் அல்லாஹ்வை படைப்பாளனாக ஏற்றுக்கொள்கின்றனர். அவர்களின் வழிபடும் தெய்வங்களை அல்லாஹ்வுக்கும் தமக்குமிடையான இடைத்தரகர்களாக ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இந்த உண்மையை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது (வானங்களை பூமியையும் படைத்தவனும்,சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தி வைத்திருப்பவனும்; யார்? என (நபியே) நீர்; அவர்களிடம் கேட்டால் 'அல்லாஹ்தான் ' என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள். அவ்வாறெனில் இவர்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள்?)(61) ஸூறதுல் அன்கபூத்.

ஷைஹுல் இஸ்லாம் இப்னுதைமியா(ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் சிலைகள் உலகைப் படைத்துள்ளாதகவும், மழையை பொழியச்செய்வதாகவும்,தவரங்களை முளைக்கச் செய்வதாகவும் மிருகங்களைப் படைப்பதாகவும், இவையல்லாதவற்றை செய்வதாகவும் சிலை வணங்கிகள் நம்புகிறார்கள் என ஒருவர் நினைத்தால்,அவர்கள் பற்றிய அவரின் அறிவீனத்தையே அது காட்டுகிறது.மாறாக, சிலை வழிபாட்டாளர்களின் நோக்கமும் கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்டோர் பற்றிய இணைவைப்பாளர்களின் நோக்கமும் ஒன்றுதான் என்பதை விளங்கிக்கொள்ள வேண் டும் என்கிறார்.(11)

' வெல் தியோரன்த் என்பவர் விக்கிரக கொள்கையைக் கொண்ட இந்து மதத்தின் அடிப்படை இறுதியில் ஏகனான ஒரே இறைவனான அல்லாஹ்வை விசுவாசிக்க வேண்டும் நிலைப்பாட்டிற்கே இட்டுச்செல்கிறது. என்கிறார் அவர் இந்துமதக் கடவுள்களைப்பற்றிக் குறிப்பிடுகையில்; கிறிஸ்துவ தேவாலயங்கள் ஆயிரக்கணக்கான பக்தர்களைப் புனிதப்படுத்துவதைப் போலவே இந்த ஆயிரக்கணக்கான கடவுள்களும் ஒரே மாதிரியானவை. இந்த அடிப்படையில் எல்லையற்ற இந்த தெய்வங்களுக்கு இறைமை –உயர் அதிகாரம்- உள்ளது என ஒரு இந்துவின் மனதில் ஒரு கனம் கூட ஏற்பட்டிருக்காது . '(12) என்று குறிப்பிடுகிறார்.

இந்தியா பிரித்தானியாவின் காலணித்துவத்தில் இருக்கும் போது இந்தியாவில் உள்ள பிரித்தானிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: 'அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் ஆராய்ச்சியின் பொதுவான முடிவுகளின் படி, பெரும்பான்மையான இந்துக்கள் ஓர் உயர் அதிகாரமிக்க கடவுள் மீது உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளனர்.'(13)

எனவே இவ்வுலகில் காணப்படுகின்ற அனைத்து மதங்களிலும் அல்லாஹ் -இறைவன்- ஒருவன் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. (எங்களினதும் உங்களினதும் இறைவன் ஒருவனே) 46) ஸூறதுல் அன்கபூத். ஆகையால் சிலைகளும் மனிதக் கடவுள்களும் இறைவனை –அல்லாஹ்வை- நிராகரிக்கும் தரகர்களே தவிர வேறில்லை (எவர்கள் அவனையன்றி பாதுகாவலர்களாக எடுத்துக்கொண்டார்களோ அவர்கள் அல்லாஹ்விடம் எமக்கு மிகவும் நெருக்கத்தை ஏற்படுத்திவைப்பதற்காகவே நாம் இவர்களை வணங்குகிறோம் (எனக் கூறுகின்றனர்) ஸூறதுஸ் ஸுமர்.

## 20- தனக்குத் தேவையில்லாத ஒன்றை ஒருவன் செய்தால் அது வீணான விடயம்; என்போம். அல்லாஹ்வுக்கு- நம்மில் எது விதத் தேவையுமில்லை என்றால் அவன் ஏன் நம்மைப் படைத்திருக்க வேண்டும்?

பதில்: தேவை என்பதற்கு எதிரானது வீண் செயல்; எனும் கருத்தானது ஒரு அறிவீனமான கருத்தாகும்!

எனவே தேவை என்பதற்கு எதிரானது ஆழமான அறிவு என்பதே தவிர வீணானது அல்ல.

உதாரணத்திற்கு மிகவும் வசதிபடைத்த புகழ் பூத்த ஒரு வைத்தியர் உள்ளார் என்று வைத்துக்கொள்வோம். அவர் மக்களின் நலனுக்காக எதுவித எதிர்பார்ப்புமின்றி சிகிச்சை செய்கிறார் என்றால் அவரின் செயலை ஒரு போதும் வீண் செயல் என்று கூறமாட்டோமல்லவா! அதே போன்றுதான் இறைவனும் எங்களின் நலனுக்காகத்தான் அனைத்தையும் படைத்து வழிகாட்டியுள்ளான்.

செயலுக்குப் பின்னால் உள்ள பெரிய நோக்கமும், ஞானமும், தேவை மற்றும் வீண் என்ற வட்டத்தினுள் சுழலவில்லை! என்பதை புரிந்து கொள்வது அவசியமாகும்.

நீச்சல் வீரர் ஒருவர் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு சிறுவனை அவனின் மீதுள்ள இரக்கத்தின் காரணமாக அவனை க் காப்பாற்றிவிட்டு சிறுவனின் குடும்பத்தினரின் எவ்விதப் பாராட்டையும் எதிர்பார்க்காது அவனை விட்டுச் சென்றுவிடுகிறார்.இந்தச்செயலானது ஒரு தேவையின் நிமித்தம் செய்யப்பட்டது என்றோ வீணான விடயமென்றோ குறிப்பிடப்படுவதில்லை. மாறாக சிறந்த காரியம் என்றும் உயர் குணம் என்றும் நன்நடத்தை என்றுமே குறிப்பிடப்படும்.

எனவே தேவைக்கும் வீணான செயலுக்கும்; எவ்வித நெருக்கமான தொடர்பும் கிடையாது. (14)

ஹதீஸ் குத்ஸியில்' அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான் 'என் அடியார்களே! உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் உங்களில் மிகவும் இறையச்சமுடைய ஒரு மனிதரைப் போன்று மாறிவிட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் அதிகமாக்கி விடுவதில்லை. என் அடியார்களே! உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் மிகவும் தீய மனிதர் ஒருவரைப் போன்று மாறிவிட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் குறைத்துவிடப்போவதில்லை. (என் அடியார்களே!உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து ஒரே திறந்த வெளியில் நின்று என்னிடத்தில் (தத்தம் தேவைகளைக்) கோரினாலும் ஒவ்வொரு மனிதருக்கும் அவர் கேட்பதை நான் கொடுப்பேன். அது என்னிடத்தில் இருப்பவற்றில் எதையும் குறைத்துவிடுவதில்லை கடலில் நுழை(த்து எடு)க்கப்பட்ட ஊசி (தண்ணீரைக்) குறைப்பதைப் போன்றே தவிர (குறைக்காது)) என் அடியார்களே! நீங்கள் செய்துவரும் நல்லறங்களை நான் உங்களுக்காக எண்ணிக் கணக்கிடுகிறேன். பிறகு அதன் நற்பலன்களை நான் முழுமையாக வழங்குவேன். நல்லதைக் கண்டுகொண்டவர்; அல்லாஹ்வைப் போற்றிப் புகழட்டும். அது அல்லாததைக் கண்டவர் தம்மையே நொந்துகொள்ளட்டும்! (15)

அல்லாஹ் உலகத்தாரைவிட்டும் தேவையற்றவனாக உள்ளான்.

நமது முயற்சியும் உழைப்பும் செயலும் எமக்காக மட்டுமே என்பதை புரிந்து கொள்ள வேண்டும். (எவர் நல்வழியில் முயற்சிக்கின்றாரோ,அவர் தனக்காவே முயற்சிக்கிறார்.நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட்டும் தேவையற்றவன்) (6) ஸூறதுல் அன்கபூத்.

நாம் அறியா விட்டாலும் அல்லாஹ்வின் படைப்புகள் அனைத்திலும்; அவனுடைய ஞானம்-நுட்பம்- இருப்பதை நாம் அறிவோம். நோயாளி மருத்துவரின் ஞானத்தை- அறிவை அறியாதது மருத்துவரின் முடிவுகள் அபத்தமானது –பிழையானது- என்று அர்த்தமல்ல.

இறை ஞானம் பற்றிய அறிவைப்பொறுத்தவரை அதன் எல்லாப் பரிணாமங்களையும் அறிந்துகொள்ள வேண்டும் என்பது கட்டாயமல்ல. மாறாக அதன் சில பகுதிகளை மாத்திரம் புரிந்து கொண்டாலே போதுமாகும்.

ஆகவே அல்லாஹ்வை வணங்கி வழிபடவே நாம் பொறுப்புச்சாட்டப்பட்டுள்ளோம் என்பதையும், அதில் அல்லாஹ்வின் ஞானமும் நுட்பமும் உளடங்கியுள்ளது என்பதை மாத்திரம் அறிந்து கொள்வது போதுமானது. இதுவே பொதுவாக எமக்குத் தேவையான விடயமாகும். இல்லாவிட்டால் நமக்கு புரியாத அனைத்தையும் நிராகரிக்கும் மனிதர்கள் போன்று மாறிவிடுவோம் அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான்.((மாறாக அவர்கள் அல்குர்ஆனாகிய) அதன் அறிவைப் பற்றி அறிந்து கொள்ளாததினாலும் அதன் விளக்கம் அவர்களிடம் வராததினாலும் பொய்ப்பித்தனர்) (39) ஸூறா யூனுஸ்

எனவே அல்லாஹ் ஞானமிக்கவன் எம்மை ஏதோ நோக்கத்திற்காக படைத்துளளான்.

அல்லாஹ் ஒருவன் மாத்திரமே வணங்கி வழிபடுவதற்கு தகுதியானவன்

எனவே அல்லாஹ்வைத் தவிர வணங்கி வழிபடுவதற்கு தகுதியானவன் அவனைத் தவிர வேறு யாரும் இல்லை அவனே எம்மை இல்லாமையிலிருந்து உருவாக்கிய படைப்பாளன் ஆவான். அல்லாஹ் இது

குறித்து (மனிதர்களே! நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடக்கும் பொருட்டு உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இரட்சகனையே வணங்குங்கள்) (21) ஸூறதுல் பகரா அவனே எங்களுக்கு நேரான பாதையைக் காட்டினான் மேலும் அவனேதான் சட்டதிட்டங்களை வகுத்தளித்து அதற்குரிய அளவுகோள்களை நிர்ணயித்து பின்பற்றி ஒழுக வேண்டி கட்டளைகளையும், விலகி நடக்க வேண்டியவற்றையும் அறிவித்துத் தந்தான் ((படைத்தலும் கட்டளையிடுதலும் அவனுக்கே உரியது என்பதை அறிந்து கொள்ளுங்கள்) (54) ஸூறதுல் அஃராப்

அல்லாஹ்வுக்கு படைத்தல் என்ற பண்பு மாத்திரம் கிடையாது கட்டளைப் பிரப்பித்தல் என்ற அதிகாரமும் அவனுக்கு உள்ளது. எனவே அவனது கட்டளைகளை பின்பற்றி நடக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

ஆகவே வணக்கம் என்பது அடியார்கள் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமையாகும்.ஏனெனில் அவன்தான் எம்மைப்படைத்து உயிர் வாழச்செய்து வாழ்வதற்கான வசதிகளையும் ஒழுங்கு செய்து தந்துள்ளான்.மேலும் எங்களில் செயல்களால் மிகவும் சிறந்தோர் என்பதை சோதிப்பதற்காக அவனுடைய தூதர்களையும் எங்களிடம் அனுப்பி வைத்தான் . ஆகவே வணக்கமான அல்லாஹ் எம்மீதாக விதித்திருக்கும் கடமையாகும். ( உங்களில் அழகிய செயலையுடையவர் யார் என உங்களைச் சோதிப்பதற்காக அவனே வாழ்வையும் மரணத்தையும் படைத்தான் அவன் யாவற்றையும் மிகைத்தவன் மிக்க மன்னிப்பவன்.) (2) அத்தியாயம்: அல் முல்க் (ஆட்சி) எமது இம்மை வாழ்வும், மறுமை வாழ்வும் வணக்கத்தின் மூலமேயன்றி நிலை பெற மாட்டாது. அதுபோல் எமது ஒழுக்கமும் வணக்கமின்றி சீரடையமாட்டாது.ஏனெனில் வணக்கம் மா னக்கேடானவற்றையும்,வெறுக்கத்தக்கவற்றையும் தடுக்கிறது மேலும் அதன்மூலமே மனிதர்களின் உலக வாழ்வு சீர்பெறுகிறது. எமது இரட்சகன் பின்வருமாறு குறிப்பிடுகிறான்; (தொழுகையை நிலைநிறுத்துவாயாக! நிச்சயமாக தொழுகை மானக்கேடானவற்றையும்,வெறுக்கத்தக்கவற்றை

யும் தடுக்கிறது.) (45) ஸூறதுல் அன்கபூத்.

நாம் வணக்கத்தின் மூலமேயன்றி சுவர்க்கத்தை வெல்ல முடியாது அதுவே மறுமையின் மோட்சத்திற்கும் -வெற்றிக்கும் - உலகின் பேரின்பத்திற்கும் காரணமாக உள்ளது.

ஆக வணக்கம் எமக்குரியது எங்களின் நலனுக்கானது. அதனால் அந்த வணக்கம் அல்லாஹ்வுக்கு நாம் செலுத்த வேண்டிய கட்டாயக் கடமையாகும் காரணம் அவனே எம்மைப் படைத்தவன். இதனால் கிடைக்கும் நன்மை- பயன்-எமக்கு மாத்திரமே உரியது. இதில் கவனக் குறைவாக நடந்து கொள்வதனால் ஏற்படும் விளைவும் எமக்கு மாத்திரமே உரியது.

சுவர்க்கம் மிகவும் பெருமதிமிக்கது.யார் சுவர்க்கத்தை அடைய விரும்புகிறாரோ அவர் அதற்காக உழைத்து செயல்பட வேண்டும். நாம் எல்லோரும் அல்லாஹ்வின் பால் தேவையுடையோர்கள். அவனுக்கு வணக்கம் செலுத்தவும் தேவையுடையவர்கள். ஆனால் அல்லாஹ் எம்மையும் அனைத்து படைப்பினங்களை விட்டும் எவ்விதத் தேவையுமற்றவன்.

நாம் அல்லாஹ்வை அறிந்து கொள்வது எவ்வாறு?

பதில்: அல்லாஹ்வை அதிகமான வழிகளினால் அறிந்து கொள்ள முடியும் என்றாலும் அவற்றுள் நாம் நான்கு வழிகளை குறிப்பிடுகிறோம்.

முதலாம் வழி : அல்லாஹ்வை சீரிய உள்ளுணர்வின் மூலம் அறிந்து கொள்கிறோம்.

மனிதன் தனது இயற்கை இயல்பின் மூலம் தன்னைப் படைத்தவன் ஒருவன் உள்ளான் என்பதை அறிகிறான்.எனவே உனது உள்ளுணர்வின் மூலம் உன்னை இவ்வாறான தோற்றத்துடனும் உடலுறுப்புக்களுடனும் படை கோலத்துடனும் உருவத்துடனும், அதிசயிக்கத்தக்க நேர்த்தியுடனும் ; படைத்தவன் ஒருவன் உள்ளான் என்பதை நீ அறிவாய்.

மேலும் மனிதன் தனது உள்ளுணர்வின் -இயல்புணர்வின் மூலமாக வணக்கவழிபாட்டின் மூலமாக தன்னைப் படைத்தவனிடம் புகழிடம் தேடிச் செல்ல வேண்டும் என்பதை நன்கறிவான்.மேலும் தனது இயல்புணர்வின் மூலம் தன்னைப் படைத்தவனிடம் தேவையுடையவன் என்பதையும் எல்லா நேரங்களிலும் அவனிடம் தேவையுள்ளேன்; என்பதை அவன் நன்கறிவான்.மேலும் அல்லாஹ்விடம் தேவை காணும் என்ற உணர்வு நெருக்கடிகளின் போது மென்மேலும் அதிகரிக்கிறது.

ஆகவே அல்லாஹ்வை அறிவதற்கான இயல்புணர்வின் மீதே எல்லா மனிதர்களும் படைக்கப்பட்டுள்ளனர். உயர்தோனாகிய அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறான். "(நபியே!) நேரான மார்க்கத்தை நோக்கி நீர் உமது முகத்தை உறுதியான ஓர்மைப்பாட்டுடன் திருப்புவீராக. (அதுவே) மனிதர்களுக்காக அல்லாஹ் ஏற்படுத்திய இயற்கை மார்க்கமாகும். அவன் படைத்த (மார்க்கத்)தை (எவராலும்) மாற்றிவிட முடியாது. இதுதான் நிலையான (நேர்மையான) மார்க்கம். எனினும், மனிதரில் பெரும்பாலானவர்கள் (இதை) அறிந்துகொள்ளவே மாட்டார்கள்")(30) ஸூறதுர் ரூம் (99) மேலும் அல்லாஹ் கூறுகிறான் : (உமது இரட்சகன் ஆதமுடைய மக்களின் முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை வெளிப்படுத்தி அவர்களையே அவர்களுக்கு சாட்சிகளாக்கி நான் உங்கள் இரட்சகன் இல்லையா? என்று கேட்டதற்கு , ஆம் நாம் சாட்சி கூறுகிறோம் என்று அவர்கள் கூறியதை எண்ணிப்பாருங்கள்.நிச்சயமாக இது குறித்து நாம் கவனயீனமாக இருந்து விட்டோம் என்று மறுமை நாளில்

நீங்கள் கூறாதிருக்கவே இவ்வாறு செய்தோம்) (172) ஸூறதுல் அஃராப் நாம் படைக்கப்பட முன்னரே அல்லாஹ்வை அறிந்துகொள்ளவும் அவனை வணங்கி வழிபடுவதற்கான இயல்பூக்கத்தையும் -உள்ளுணர்வையும் பெற்றிருந்தோம் என்பதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. (அவர்களையே அவர்களுக்கு சாட்சகளாக்கி நான் உங்கள் இரட்சகன் இல்லையா என்று கேட்டதற்கு,ஆம் நாம் சாட்சி கூறினோம்) நபி (ஸல்) அவர்களின் மூலம் அறிவிக்கப்பட்ட ஆதாரபூர்வமான ஹதீஸில் பின்வரும் செய்தி இடம்பெற்றுள்ளது. (பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் தூய இயற்கை மார்க்கம் இஸ்லாத்தில் பிறக்கின்றன) (16)

எனவே இந்த இயற்கையான உள்ளுணர்வின் மீது கட்டமைக்கப்பட்ட மார்க்கத்தின் மீது நாம் அனைவரும் பிறந்துள்ளோம். சத்தியத்தை விரும்புகின்ற எல்லா மனிதர்களுக்கும் சத்தியத்தை ஊகித்துக்கொள்வதற்கும்,இந்த உண்மை எப்போது ஒருவருக்கு தெரிய வருகிறதோ அதற்கு கட்டுப்பட்டு நடப்பதற்கும் இதுவொன்றே போதுமாகும். இறைநிராகரிப்பில் உச்சத்தில் இருப்வனும் குறிப்பாக மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இந்த இயற்கை உள்ளுணர்வை நிராகரித்திட முடியாது. அதாவது நெருக்கடியும்,கடினமும் நிறைந்த நேரங்களில் அல்லாஹ்விடமே அவர்கள் புகழிடம் தேடுவார்கள் அவர்கள் இணைவைத்து வழிபடுபவற்றை மறந்து விடுவார்கள் என்பதே உண்மையான விடயமாகும். (உங்களுக்கு கடலில் ஒரு தீங்கேற்படும் சமயத்தில், அல்லாஹ்வைத் தவிர நீங்கள் (இறைவனென) அழைத்துக் கொண்டிருந்த அனைத்தும் மறைந்து விடுகின்றன. (இறைவன் ஒருவன்தான் உங்கள் கண் முன் இருப்பவன்.) அவன் உங்களைக் கரையில் சேர்த்து பாதுகாத்துக் கொண்டாலோ (அவனை) நீங்கள் புறக்கணித்து விடுகிறீர்கள். மனிதன் மகா நன்றி கெட்டவனாக இருக்கிறான்.)(67) ஸூறதுல் இஸ்ராஉ

ஒரு மனிதனுக்கு; கடும் துயர் ஏற்பட்டு அதன் மூலம் மரணம் வருவதை உணர்ந்தால், அவன் தன் பல தெய்வ வழிபாடுகளை மறந்து, உண்மையான கடவுள் அல்லாஹ்வை மட்டுமே அழைப்பான். இக்கட்டான சமயங்களில் அல்லாஹ்விடம் மிகத்தூய்மையாகவும் இதயசுத்தியோடும் கேட்கும் பிரார்த்தனை,ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் சீரியஉள்ளுணர்வின் தூண்டுதலாகவே உள்ளது.

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கப் கடற் படையின் தளபதியாக இருந்த அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவரான - ஐசன்ஹோவர்,என்பர் பெரும் ஆபத்து நேரத்தில் படைகள் எவ்வாறு உள்ளுணர்வின் பால் திரும்புகின்றன என்பதை நேரில் பார்த்த பிறகு 'அகழிகளில் நாத்திகர்கள் இல்லை.' எனக் கூறினார். (17)

போரின் போது அகழியில் கடவுளை மறுப்பவர் எவரும் இல்லை, அனைவரும் அல்லாஹ்விடமே மீண்டு செல்கின்றனர். இதுதான் மிகநெருக்கடியும் ஆபத்துமிக்க நேரத்தில் எல்லா மனிதர்களும் ஏற்றுக்கொள்ளும் உள்ளுணர்வின் யதார்த்தமாகும்.

அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்கான இரண்டாம் வழி பகுத்தறிவாகும். எனவே நாம் அல்லாஹ்வை பகுத்தறிவின் மூலம அறிந்து கொள்வோம்.
உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் எப்பொருளுமின்றி அவர்கள் படைக்கப்பட்டனரா? அல்லது அவர்களே படைக்கின்றவர்களா? (அல்லது வானங்களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா? மாறாக அவர்கள் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்). அத்தியாயம்: அத்தூர் (தூர் மலை)

பகுத்தறிவின் மூலம் இவ்வசனத்திற்கு மூன்று கற்பிதங்களை கொள்ளமுடிகிறது. அதற்கு நான்காவதான சாத்தியப்பாடு ஒன்றுகிடையாது. முதலாவது : (எப்பொருளுமின்றி அவர்கள் படைக்கபட்டார்களா? )

என்ற திருவசனம் குறிப்பிடும் சிருஷ்டி கர்த்தா(படைப்பாளன் இன்றி படைக்கபட்டுள்ளோம் என்ற கற்பிதம் இது சாத்தியமில்லாத ஒரு விடயமாகும் எனவே நாம் படைப்பாளன் ஒருவன் இன்றி எப்படி படைக்கப்படுவது ?

இரண்டாவது: நம்மை நாமே படைத்துக்கொள்வது (அல்லது அவர்கள் படைப்பவர்களா?) இதுவும் சாத்தியமற்ற ஒரு விடயமே. ஆக நான் படைக்கப்படுவதற்கு முன் என்னை எப்படி படைத்துக்கொள்வது? என்ற கேள்வி.

எனவே பகுத்தறிவின் அடிப்படையில் மூன்றாவது ஒரு சாத்தியப்பாடு (கற்பிதமே) எஞ்சியுள்ளது அது மிகத் தெளிவானதும் வெளிப்படையானதும் என்பதால் அதுபற்றி அல்குர்ஆன் குறிப்பிடவில்லை .அது என்ன? அதுதான் எங்களைப்படைத்த ஒரு படைப்பாளன் உள்ளான் அவனே எங்களைப்படைத்தான் என்பதாகும்.

எனவே பகுத்தறிவின் அடிப்படையில் அல்லாஹ்வை நாம் அறிந்து கொள்வோம்.

அல்லாஹ்வை பற்றி அறிந்து கொள்வதற்கான மூன்றாம் வழி: அல்லாஹ்வின் படைப்பினங்களை அவதானித்தல் மற்றும் சிந்தித்தல். அல்லாஹ்வின் படைப்பை அவதானிப்பது, எங்களை அல்லாஹ்வின் மகத்துவத்தின் முன்னால் வைத்து விடும். 517(வானங்களிலும் பூமியிலும் என்ன உள்ளது என்பதை நீங்கள் கவனியுங்கள்.) (101) ஸூறா யூனுஸ்

அல்லாஹ்வி;ன்-இறைவனின்- படைப்பின் நுணுக்கங்களையும், பரிபூரணத்தன்மையின் அதிசயத்தையும் எவ்வளவு அதிகமாகப் பார்க்கின்றோமோ( அவதானிக்கின்றோமோ), அவ்வளவு அதிகமாக நாம் இறைவனை-(அல்லாஹ்வை) அறிந்து கொள்ள முடியும்.

இதைத்தான் உயிர் உருவாக்கத்தில் நடைபெறுகின்ற படைத்தல் பராமரித்தல் திறன்பட செய் தல் போன்றவற்றிற்கான சான்றுகளிலும் குறிப்பிட்டோம்.

அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்கான நான்காவது வழி : இறைத்தூதர்கள்

அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்கான மிகவும் சிறந்த வழியாக அவனது தூதர்களும் தீர்க்கதரிசிகளும் காணப்படுகின்றார்கள். இறைத்தூதர்கள் அல்லாஹ்வைப்பற்றியும் அவனின் பண்புகள் மற்றும் அவனின் மெய்ப்பொருள் பற்றியும் அறிவித்தனர்.மேலும் அவர்கள் மூலமே அல்லாஹ்வின் பெயர்களை அறிந்து கொண்டதோடு, அவனை எவ்வாறு வணங்கி வழிபடுவது, எவ்வாறு நெருங்குவது போன்றறையும் தெரிந்து கொண்டோம் மேலும் அவர்களின் ஊடாகவே மறுமையில் அல்லாஹ்வின் தண்டடைனியிலிருந்து தப்பிப்பதற்கான விளங்கங்களையும் அறிந்து கொண்டோம்.அந்த வகையில் நபிமார்களான இறைதீர்க்கதரிசிகள் மனிதர்களை இறைவனை-அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்கு இன்னொரு வார்த்தையில் கூறினால் மனிதர்கள் இயல்பில் கட்டமைக்கப்பட்ட இயற்கை மார்க்கத்தை நோக்கியும் அவன் கட்டளையிட்டதன் பிரகாரம் அவனை வணங்கி வழிபடவும் அவர்களை அழைத்தார்கள்

ஆக இறைத்தூதர்கள் மக்களை சத்தியம் வெற்றி; மற்றும் விடிவை –நோக்கி வழிகாட்டினார்கள் (தூதர்களுக்குப் பின்னரும் அல்லாஹ்வுக்கு எதிதராக குற்றம் பிடிப்பதற்கு மனிதர்களுக்கு எவ்வித ஆதாரமும் இருக்கக் கூடாது என்பதற்காக (மேலும் பல) தூதர்களை நன்மாரயம் கூறுவோராகவும்,எச்சரிப்போர்களாகவும்,அனுப்பி வைத்தோம். அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனாகவும் ஞானமிக்கவனாகவும் இருக்கிறான்) (165) அத்தியாயம் : அந்நிஸா (பெண்கள்) 160.

தீர்க்கதரிசிகளும், இறைதூதர்களும் அல்லாஹ்வைப்பற்றி அறியத்தந்தமை,மற்றும் அவர்களை அல்லாஹ் அற்புதங்களின் மூலம் பலப்படுத்தியமை போன்ற விடயங்களில் மறுமையில் எவரும் எந்தவகையிலும் அல்லாஹ்வை குற்றம் சுமத்திட முடியாது

.ஏனெனில் உன்னைப் படைத்தவனை அறிய அல்லாஹ் இயல்புணர்வை தந்தான்.மேலும் அவனின் படைப்புகளை அவதானித்து அவனைப் பற்றி அறிந்து கொள்வதற்காக பகுத்தறிவை தந்தது மட்டுமன்றி இறைவழிகாட்டல்களை உமக்குஅறிவித்துத் தர இறைத்தூதர்களை அனுப்பி வைத்தான் இவ்வாறான விடயங்களை உனக்கு வழங்கியிருக்கும் போது அல்லாஹ்விடம் நியாயம் கோரவோ சாக்குப்போக்குச் செல்லவோ உனக்கு எந்த உரிமையும் கிடையாது.

## 22- இங்கு அதிகமான மதங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு இருக்கும் போது ஏன் இஸ்லாத்தை ஏற்க வேண்டும்?

பதில் : இஸ்லாம் என்பது ஏனைய மதங்களைப் போன்ற ஒரு மதமல்ல.

மேலும் இஸ்லாத்தின் நம்பிக்கை கோட்பாடானது முன்னைய தீர்க்கதரிசிகளின் நம்பிக்கை கோட்பாட்டுடன் ஒத்துச் செல்கிறது.

எனவே இஸ்லாம் சரியான பாதையை விட்டு தடம்புரண்ட (நெறிதவறிய)மதங்களை சரிசெய்து நபிமார்களின் புராதன கால ஓரிறைக்கொள்கையின் பால் மீள வழிகாட்டுகிறது.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் : "நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ

மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும் , ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்; "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்' என்பதே - இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது - தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் - (அவனை) முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர்வழி காட்டுகிறான்". ஸூறதுஸ்ஷூறா

ஆகவே இஸ்லாம் ஏனைய மதங்களைப் போன்ற மதமல்ல. மாறாக அதுவே மதங்களின் அடிப்படையாகும்.

## 18- இஸ்லாம் என்றால் என்ன?

பதில்: இஸ்லாம் என்பது சரணடைதல், கீழ்படிதல்,அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.

அல்லாஹ் இது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறான் "எவர் அல்லாஹ்வுக்கு முற்றிலும் தன்முகத்தை பணியவைத்து இஸ்லாத்தில் உறுதியானவராக இருந்து, நன்மையும்செய்து, இப்றாஹீமுடைய (நேரான) மார்க்கத்தையும் பின்பற்றுகிறாரோ அவரைவிட அழகான மார்க்கத்தை உடையவர் யார்?) இன்னும் அல்லாஹ் இப்றாஹீமை உற்ற நண்பராக எடுத்துக் கொண்டான்.)(125)".) அத்தியாயம் : அந்நிஸா (பெண்கள்) 160.

' அஸ்லம வஜ்ஹஹு லில்லாஹ்' 'அல்லாஹ்வுக்கு தனது முகத்தை அடிபணியச் செய்வது' என்பதன் அர்த்தம் அல்லாஹ்விடம் சரணடைந்து அவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகும். எங்கள் இரட்சகன் மிகப்பரிசுத்தமானவனாகி விட்டான் .இவ்வாறானவர்தான்; மார்க்த்தில் மிகவும் சிறந்தவராவார்.

மேலும் அல்லாஹ் கூறுகிறான் (உண்மையாக) வணங்கப்படத் தகுதியான உங்கள் இரட்சகன் ஒரே ஒருவன்தான். ஆகவே அவனுக்கே நீங்கள் கட்டுப்படுங்கள். பணிந்து நடப்போருக்கு (நபியே) நீர் நன்மாறயம் கூறுவீராக. ஸூறதுல் ஹஜ்:
(பலஹு அஸ்லிமூ) அதாவது அவனுக்கே கட்டுபடுங்கள் என்பதன் அர்த்தம் அவனது தீர்ப்புக்கு கட்டுப்படுங்கள் என்பதாகும்.

எனவே இந்த வசனங்கள் யாவும் இஸ்லாம் என்பது அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடப்பதுடன் அவனுக்கு கீழ்படிவதுமாகும்.மேலும் அவனுடைய சட்டதிட்டங்கள்; மற்றும் வழிமுறையை மனம்விரும்பி முழுமையான சம்மதத்துடனும் ஏற்றுக்கொள் வதுடன் கடைப்பிடிப்பதுமாகும். இதுவே இஸ்லாத்தின்அடிப்படையும் (சாரம்சமும்) யதார்த்தமுமாகும்.

ஆகவே இஸ்லாம் என்பது தீர்ப்பிலும் சட்டதிட்டத்திலும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதாகும்.

இஸ்லாம் மனிதர்கள் அனைவரினதும் மார்க்கமாகும். இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் (அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும் )(19) ஸூறா ஆலி இம்ரான் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வதில்லை (இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்")(85) ஸூறா ஆலி இம்ரான்

அனைத்து இறைத்தூதர்களுக்கும் தீர்தரிசிகளுக்கும் அல்லாஹ் கொடுத்தனுப்பிய மார்க்கம் இஸ்லாமாகும். இந்த வகையில் தீர்கதரிசிகள் அனைவரினதும் மார்க்கம் ஒன்றே,அது இஸ்லாம் மார்க்கமாகும்.

மேலும் அனைத்து தீர்;க்கதரிசிகளும் அவர்களின் சட்டதிட்டங்கள் வித்தியாசப்பட்டாலும் அவர்கள் அனைவரும் கொண்டுவந்த மார்க்கம் ஓரிறைக்கொள்கையே!

அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுறான் (நிச்சயமாக, என்னைத் தவிர(உண்மையாக) வணங்கப்படத்தகுதியானவன் வேறுயாருமில்லை. எனவே என்னையே வணங்குங்கள் என நபியே நாம் உமக்கு முன்னர் எந்தத் தூதருக்கும் வஹி அறிவிக்காமல் அவரை நாம் அனுப்பியதில்லை)(25) அத்தியாயம்: அல் அன்பியா (நபிமார்கள்)
இஸ்லாத்தைதவிர ஒரிறைக்கொள்கையில் வேறு எந்த மார்க்கமும் நிலைபெறவில்லை.

இந்தப்பூமியல் தற்போதிருக்கும் ஒரே ஒரு ஓரிறை மார்க்கம் இஸ்லாம் மார்க்கம் ஆகும்.

அதே வேளை ஏனைய கொள்கைகளை பின் பற்றுவோரிடம் இணைவைப்பு (பல தெய்வக் கொள்கை சிறியளவிளோ அல்லது பெறியளவிலே காணப்படுகிறது. தீர்க்கதரிசிகளின் மரணத்தின் பின் ஓரிறைக்கொள்கையை விட்டுவிட்டு காலவோட்டத்தில் பலதெய்வக்கொள்கையை எடுத்துக் கொண்டனர். எனவே தீர்க்கதரிசிகள் கொண்டுவந்த தூய ஓரிறைக்கொள்கையில் இஸ்லாத்தைத்தவிர வேறு எந்த மார்க்கத்தையும்; இன்று காணமுடிவதில்லை.

### 24- நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் ஏன் இந்த உலகில் இருக்கிறோம்? நாம் இறுதியாக எங்கு செல்லவுள்ளோம் எனும் பதிலளிப்பதற்கு முடியாது பகுத்தறிவைக் தடுமாற்றத்தில் ஆழ்த்தும் கேள்விகளுக்கு இஸ்லாத்தில் பதில் உள்ளதா?

இந்த கேள்விகளுக்கான பதிலை இஸ்லாம் அல்குர்ஆனில்

ஒரு வசனத்திலிருந்து மாத்திரம் பதிலளிக்கிறது. எமது இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் . (என்னைப் படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்) அத்தியாயம்: யாஸீன்
நான் எங்கிருந்து வந்தேன்?; என்ற கேள்விக்கு அல்லாஹ் என்னைப் படைத்தான் என்பதே இதற்குரிய பதிலாகும். இதனை அல் குர்ஆன் (அல்லதீ பதரனீ) அவன் என்னைப் படைத்தவன் என்று குறிப்பிடுகிறது
நான் எங்கு செல்லவிருக்கிறேன்? என்பதற்கான பதில்: எனது செயல்பாடுகள் குறித்த விசாரணைக்காக அல்லாஹ்விடம் செல்லவுள்ளேன். இதனை அல்குர்ஆன் (வஇலைஹி துர்ஜஊன்) அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள் என்று குறிப்பிடுகிறது.

இவ்வுலகிற்கு எதற்காக வந்தேன்? அல்லாஹ்வை வணங்கவும் நான் பரீட்சிக்கக்கப்படுவதற்குமாகும்.

ஏன் நான் அல்லாஹ்வை வணங்க வேண்டும்? என்னைப்படைத்தவனான அல்லாஹ்வை வணங்குவதே இயல்பான விடயமாகும் இதுதான் அடியானுக்கும் இரட்சனுக்குமிடையிலான இயல்பான தொடர்பாகும். எனவே அடியான் தனது இரட்சகனும் படைப்பாளனுமாகிய அல்லாஹ்வை வணங்கவேண்டும். (என்னைப் படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்) மனிதர்ளை தினர வைக்கும் மூன்று கேள்விகளுக்குமான பதிலை ஒரு வசனமே உள்ளடக்கியுள்ளது! (என்னைப் படைத்தவனை நான் வணங்காதிருக்க எனக்கென்ன நேர்ந்துவிட்டது? அவனிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்) அத்தியாயம்: யாஸீன்

## 25- முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என்பதை எப்படி அறிந்து கொண்டீர்?

பதில்:பல்வகை அற்புத ஆதார சான்றுகள் யாவும் இவற்றிற்கான முக்கிய ஆதாரங்களாகும்.இவைகள் யாவும் கருத்தியல் ரீதியான ஏகோபித்த நிலைப்பாட்டையும் முழுமையான உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றன.

அரிஸ்டாட்டில் அவருடைய மொத்த படைப்புகளின் அடிப்படையில் ஒரு தத்துவஞானி ஆவார். மாறாக அவர் கூறிய ஒரு வார்த்தையினாலோ அல்லது அவர் மேற்கொண்ட ஒரு தத்துவ ஆய்வின் மூலமோ அல்ல.
ஹிப்போகிரட்டீஸ் என்பவர் அவரது மொத்த மருத்துவத் திட்டங்களின் அடிப்படையில் ஒரு மருத்துவர் ஆவார். மாறாக அவர் மேற்கொண்ட ஒரு அறுவை சிகிச்சையின் மூலம் அல்ல.

அவ்வாரே நபியவர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற பல்வகை அற்புத ஆதாரச் சான்றுகளும்; கருத்தியல் ரீதியான ஏகோபித்த நிலைப்பாடுகளும் சந்தேகமற்ற மிக உறுதியான விடயங்களும் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே நீர் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்கை வரலாற்றை அவதானித்தால் அவர்களை உண்மை பேசுபவராக(நேர்மையானவராக) கண்டுகொள்வீர். இப்பண்பினால் அவர்களது விரோதிகள் கூட அவர்களை ஏற்றுக்கொள்ளுமளவிற்கு அவர்கள் பிரபல்யம் பெற்றிருந்தார்கள்.மேலும் பொய் மற்றும் ஒழுக்கக்கேடு போன்ற இழிகுணங்களால் அவர்கள் பழிசுமத்தப்படவில்லை. இவைமட்டுமல்ல அவர்கள் மறைவானவற்றை அறிவிப்பார்கள் அவை

அவர்கள் அறிவித்தது போன்றே நிகழ்ந்து விடும். இவற்றுக்கு அப்பால் இவர்கள் அழைத்த ஓரிறைக் கொள்கை, அனைத்து நபிமார்களின் கொள்கையுடன் ஒத்துப்போகிறது. இவர்களின் வருகைக்கு பல நூறு வருடங்களுக்கு முன்னரே இவர்களின் வருகைப்பற்றி தீர்கதரிசிகளும் புனித வேதநூல்களும் முன்னறிவுப்புச்செய்து விட்டன. இவையெல்லாம் நபியவர்களின் தூதுத்துவம் உண்மையானது என்பதற்கான (மரபுசார்) கருத்தியல் சார் ஏகோபித்த முடிவாகவும் மறுக்கமுடியா உறுதியான சான்றாகவும் காணப்படுகிறது.

அவர்கள் கொண்டு வந்த மிகப்பெரும் அத்தாட்சியான அல்குர்ஆன் குறித்து என்ன நினைக்கிறீர்;?

அல்குர்ஆன் மூலம் அல்லாஹ் இலக்கிய விற்பன்னர்களிடம் அதைபோன்ற ஒன்றை அல்லது அதிலிருக்கும் ஒரு அத்தியாயத்தையேனும் கொண்டு வாருமாறு சவால் விடுத்தான்.ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை

மகத்துவமிக்க அல்லாஹ் கூறுகிறான் (நீங்கள் செய்யாவிட்டால் உங்களால் ஒரு போதும் செய்யவே முடியாது.)(24) ஸூறதுல் பகரா

அதன் கருத்தாவது அதனை ஒரு போதும் செய்யவும் முடியாது.அதற்கு சக்தி பெறவும் மாட்டார்கள்.

இணைவைப்பாளர்களான நாவன்மைமிக்கோரிடத்திலும், இலக்கிய விற்பன்னர்களிடத்திலும் அல் குர்ஆன் தொடர்ந்தும் இந்த சவாலை முன்வைத்த வண்ணமே இருந்தது. ஆனால் அறபு இலக்கியத்தில் கொடிகட்டிப்பபறந்த அவர்கள் இதனை எதிர்ப்பதற்கு தயங்கினார்கள் இதனைப் போன்ற ஒன்றை படைப்பதற்கு பின்வாங்கினார்கள். இயலாமையை ஏற்றுக்கொண்டார்கள்.

கலாநிதி அப்துல்லாஹ் தராஸ் ரஹிமஹுல்லா அவர்கள் குறிப்பிடும்போது இந்த சவால் அவர்களின் இலக்கிய ஆர்வத்தைத்

(வெறியைத்) தூண்டிவிடுமோ என்று இறைத்தூதர் பயப்படக்கூடியவராக இருக்கவில்லையா?

அவ்வாறு இந்த சவாலை எதிர்கொள்வதற்கு மிக எச்சரிக்கையோடு தயாராகி அவர்களில் உள்ள மிகத்திறமைவாய்ந்த இலக்கிய விற்பன்னர்கள் ஒன்றுசேர்ந்து அந்தக் குர்ஆனை ஒத்த சில வார்த்தைகளை அல்லது அதன் சில பகுதகளில் உள்ளவற்றிற்கு ஒப்பான சில விடயங்களை கூறியிருந்தால் அவர் என்ன செய்திருப்பார்! அவருடைய காலததில் வாழ்ந்தோருக்கு இந்தத் முடிவை (சவாலை) முன்வைப்பதற்கு அவருடைய மனம் விரும்பியிருப்பின் எதிர்கால சந்ததியினருக்கு இந்த சவாலை முன்வைப்பதற்கு அவர் எந்தளவு அவரின் மனம் விரும்பியிருக்கும் ?

இது ஒரு துணிகரமான செயலாகும் இதனை செய்வதற்கு தனது தகுதியை நன்கறிந்த இறை உதவியைபெறும் ஒருவரால் தான் இச்சவாலை முன்வைக்க முடியும். இதனை அவர் உலகிற்கு இவ்வாறு முன்வைத்த போது அதனை எதிர்ப்பதற்கு எவராலும் முடியவில்லை அவ்வாறு எதிர்த்தோர் தலைகுணிந்து தோற்றுப்போனதே வரலாறாகும். (18)

இந்த இணைவைப்பாளர்கள் நபியவர்களை எதிர்ப்பதற்காக படைகளை ஒன்றுதிரட்டி குழுக்களை அமைப்பது அல்குர்ஆனை எதிர்த்து அதன் சவாலை ஏற்றுக்கொள்வதைவிட மிக இலகுவானது என அவர்கள் கருதினார்கள். இதுவும் அவர்களுக்கு எல்லையற்ற சிரமத்தையே அளித்தது .அல்லாஹ் அவர்களின் இந்நிலை குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான். (நீங்கள் அல்குர்ஆனுக்கு செவிதாழ்த்தாதீர்கள். (அது ஓதப்படும் போது) அதில் இடையூறு செய்யுங்கள் இதன் மூலம் நீங்கள் வென்றுவிடலாம் என நிராகரித்தோர் கூறினர்.)(26) ஸூறது புஸ்ஸிலத்

அனைத்து அரபுகளும்,சவால்விடுக்கப்பட்ட சமூகங்களும் நாத்திகர்களையோ மற்றவர்களையோ திருப்திபடுத்தும் முறையில் எந்த ஒன்றையும் வழங்க வில்லை.என்பதே யதார்த்தமாகும்.

அலூஸீ ரஹிமஹுல்லா அவர்கள் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் இன்று வரையில் இந்த சவாலை ஏற்று எவரும் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை என்று குறிப்பிடுகிறார்'

ஜுபைர் இப்னு முத்இம் அவர்கள் அவர்கள் இஸ்லாத்தை ஏற்க முன் நபி யவர்களிடம் செவிமடுத்த விடயத்தை பின்வருமாறு அறிவிக்கிறார்கள் : நான் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மஃரிப் தொழுகையில் அத்தூர் என்ற அத்தியாயத்தை ஒதக் கேட்டேன். (எப்பொருளுமின்றி அவர்கள் படைக்கப்பட்டனரா? அல்லது அவர்களே படைக்கின்றவர்களா?(35) அல்லது வானங்களையும் பூமியையும் இவர்கள் படைத்தார்களா? மாறாக, (இவற்றை எல்லாம் படைத்தவன் அல்லாஹ்தான். அவனை) இவர்கள் நம்புவதில்லை.(36) அல்லது உமது இரட்சகனி;ன் பொக்கிஷக் கருவூலங்கள் அவர்களிடம் இருக்கின்றனவா? அல்லது அவற்றின் மீது அவர்களே ஆதிக்கம்; செலுத்துபவர்களா?(37)எனும் இந்த வசனங்களை அடைந்த போது அத்தியாயம்: அத்தூர் (தூர் மலை)

என் இதயம் பயத்தால் பறந்துவிடப்பார்த்தது என்றார்கள் (19)

ஆகவே அல்குர்ஆன் மனித ஆன்மாவுக்குள் ஊடருத்துச் செல்லும் பல அதிசயமான மர்மங்களை கொண்டிருக்கிறது.

குறைஷி ஆண்கள் பயந்து திடுக்கிடும் அளவிற்கு இணைவைக்கும் பெண்கள் அபூபக்ர் அவர்கள் அல் குர்ஆனை ஓதும் போது அதனால் கவரப்பட்டு தாக்கமடைந்ததினால் அவரின் வீட்டைச் சூழ

ஒன்றுகூடி கூட்டமாக இருந்ததனை சற்று சிந்தித்துப்பாருங்கள் (20)

அதனால்தான், அல் குர்ஆனைக் கேட்கக் கூடாது என்றும், அவர்களது குடும்பத்தினருக்கு அதைக் கேட்பதற்கு இடமளிக்க கூடாது என்றும், இதுவே இறைநிராகரிப்பில் இருப்பதற்கான ஒரே வழி என்று அரபு குழுக்கள் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர;

அல் குர்ஆனின் அதிசயங்களில் ஒன்றுதான் அதில் காணப்படுகின்ற அதிசயங்கள் எவையும் தீர்ந்துவிடுவதில்லை. கலாநிதி அப்துல்லாஹ் தராஸ் அவர்கள் அல் குர்ஆன் பல்வேறுபட்ட சந்தர்;ப்பங்களில் இறங்கியது குறித்து குறிப்பிடும் சந்தர்ப்பத்தில் ' நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சில வசனங்களை ஸூறாக்களில் குறிப்பிட்ட சில இடங்களில் வைக்குமாறும் வேறு சில வசனங்களை சில சூராக்களுக்கு மத்தியில் வைக்குமாறும் கட்டளைப்பிரப்பித்தார்கள். இவ்வாறு ஒழுங்குபடுத்தியதன் பின் ஒவ்வொரு அத்தியாயமும் (ஸூறாவும்) தனியான ஒரு கட்டிடம் போன்று தோற்றம் பெற்றது. மேலும் அவர் குறிப்பிடுகையில் அல் குர்ஆன் இறங்கும் போது சில இடங்களில் வசனங்கள் ஒன்றை ஒன்று தூரமாக காணப்பட்டது. அது படிமுறை அடிப்படையில் இறங்கியபோது ஒவ்வொரு இடத்திற்கும் பொருத்தமானவகையில் இறை ஆணையின் அடிப்படையில் ஜிப்ரீலிடம் பெற்று நபியவர்களினால் சேர்க்கப்பட்டது.

நாம் அல்குர்ஆன் வசனங்கள் இறங்கிய வரலாற்றை கருத்திற்கொண்டால், இந்த வேதவெளிப்பாடானது(வஹீ) பொதுவாக குறிப்பிட்ட சூழ்நிலைகள்,சந்தர்ப்பங்களுடன் இணைந்ததாகக் காணப்படுவதை அவதானிக்கலாம். இவை ஒவ்வொரு ஸூறாவையும் தனித்தனி அலகாக ஒழுங்கமைக்கும் செயல்முறை நடந்த காலத்தைப் பற்றி விசாரணைக்கு உட்படுத்துவதற்கு தூண்டுகிறது.

அல்குர்ஆனின் வசன மற்றும் அத்தியாய ஒழுங்கமைப்பானது ஒரு பழங்கால கட்டிடத்தில்; இலக்கமிடப்பட்டு சிதரிய பல பகுதிதிகளாக இருந்தது போன்று வைத்துக்கொள்ளமுடியும். ஆகவே அதை மீண்டும் அதே வடிவத்தில் மற்றொரு இடத்தில் மீண்டும் அதே வடிவத்தில் மீள் ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை காணப்பட்டது இல்லையெனில் அதிகமான அத்தியாயங்களுடன் தொடர்பான ஒரே நேரத்தில் நிகழ்ந்த முறையானதும்,உடனடியானதுமான இந்த ஒழுங்குபடுத்தல் குறித்து எவ்வாறான வியாக்கியானத்தைக் கொடுக்க முடிகிறது?

ஆனால் எதிர்கால நிகழ்வுகள், அவற்றின் சட்டரீதியான தேவைகள் மற்றும் அவற்றுக்குத் தேவையான தீர்வுகள்,குறிப்பிட்ட அந்தத்; தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டிய மொழியியல் வடிவம் மற்றும் குறிப்பிட்ட அத்தியாயத்துடன் பொருந்தக்கூடிய தன்மைக்கு அப்பால் குறித்த அத்தகைய திட்டத்தை உருவாக்கும் போது ஒரு மனிதன் எவ்வாறான வரலாற்று உத்தரவாதத்தை பெற முடியும்?

அல் குர்ஆன் இவ்வாறான முறையில் ஓழுங்கு படுத்துவதற்கான திட்டமும் எதிர்பபார்க்கப்பட்ட வடிவில் அது நிறைவுபெற்றறமையும் மகத்தான படைப்பாளனாகிய அல்லாஹ்வின் பங்களிப்பினால் அல்லவா? அவனிடமே இவ்வாறான துல்லியமான ஒருங்கிணைப்பை நிறுவுவதற்கான ஆற்றல் உள்ளது ? (21)

எனவே அல்குர்ஆன் நபியவர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்தும் ஒரு தனித்துவமான அற்புதமாகும்

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூலம் ஆயிரத்திற்கும் அதிகமான அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.அவை நிகழ்ந்த காலம் சமீபமானது.இந்நிகழ்வுகளை அறிவித்தோர் மனிதர்களிளே மிகவும் உண்மைபேசுவோரும்

உண்ணதமானவர்களுமாவர்

இவ்வற்புதங்களை எங்களுக்கு அறிவித்தோர் மிகவும் சாதாரண விடயங்களில் கூட பொய்கூறுவதை அனுமதிக்காத இவர்கள் நபியின் மீது எப்படி பொய்யுரைக்க முடியும்? யார் தண்ணிச்சையாக நபியவர்களின் மீது பொய்கூறுகிறார்களோ அவரின் இருப்பிடத்தை நரகத்திலிருந்து எடுத்துக் கொள்ளட்டும். என்ற நபியின் எச்சரிக்கையை நன்கறிந்திருந்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சில அற்புதங்களை அவரை சூழவிருந்த பல்லாயிரக்கணக்கான நபித் தோழர்கள் நேரடியாகப் பார்த்தார்கள்.அவற்றில் சிலவற்றை நூற்றுக்கணக்கான தோழர்கள் அறிவித்துள்ளனர்.ஆகவே விவகாரம் இவ்வாறிருக்க இந்த விடயங்கள் அனைத்திலும் அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து எவ்வாறு பொய்யுரைக்க முடியும்?

பெருந்திரலான மக்கள் கலந்து கொண்டு நேரடியாகப் பார்த்த அவர்களின் அற்புதங்களுக்கான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக மரக்குற்றியின் முணங்கள் பற்றிய ஹதீஸ். இந்த ஹதீஸானது மிகப்பிரபல்யமானதும் மற்றும் பெரும்பாலான மக்களால் அறிவிக்கப்பட்டதுமாகும். அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஒரு மரக்குற்றிற்கு மேலிருந்து உரை நிகழ்த்துபவர்களாக இருந்தார்கள்.பின்னர் அவர்களுக்கான உரை நிகழ்த்துவதற்குரிய மேடை செய்து கொடுக்கப்பட்டது. அதிலே அவர்கள் ஏறி உரைநிகழ்த்தியபோது அந்த மரக்குற்றியானது விம்மியது. சிறு குழந்தை முணங்குவது போன்று முணங்கிக் கொண்டிருந்தது. இவ்வாறு தொடர்ந்தும் முணங்கிக் கொண்டிருந்த போது நபியவர்கள் அதனை அணைத்துக்கொண்டார்கள்.அப்போது அம்மரக்குற்றியானது அமைதியடைந்தது.

இந்த ஹதீஸை ஸஹாபாக்களில் அனஸ் இப்னு மாலிக், ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், அப்துல்லாஹ் இப்னு உமர், உபை இப்னு கஃப், அபு ஸஈத், ஸஹ்ல் இப்னு ஸஃத் ஆயிஷா பின்த் அபீபக்கர்,உம்மு ஸலமா போன்றோர் அறிவித்துள்ளனர்.

இப்பெரும் தொகையான ஸஹாபாக்கள் ஒன்றிணைந்து இது போன்ற செய்திகளை அறிவிப்பதில் பொய்யுரைப்பார்களா?

அது மாத்திரமின்றி நபியவர்களின் சில அற்புதங்களை ஆயிரக்கணக்கான ஸஹாபாக்கள் நேரடியாகப்பார்ததுள்ளனர் இதற்கான எடுத்துக்காட்டாக நபியவர்களின் சங்கைமிகு விரல்களின் இடையிலிருந்து நீர் ஊற்றெடுத்தமையைக் குறிப்பிட முடியும். அதிலிருந்து (1500) ஆயிரத்து ஐனூறு ஸஹாபாக்கள் வுழு செய்தது மாத்திரமின்றி அந்நீரிலிருந்து பருகினார்கள். இந்த ஹதீஸ் முதவாதிரான பெருந்திரலான நபர்களால் அறிவிக்கப்டும் செய்தியாகும். ஆதாரம் புஹாரி முஸ்லிம்

மிகப்பெரும் படைக்கு உணவளிப்பதற்கு குறைந்த உணவை அதிகப்படுத்திக்கொடுத்தமை. இது குறித்தும் ஆதாரபூர்வமான அதிகமான செய்திகள் அதிகமான ஸஹாபாக்கள் வழியாக வந்துள்ளது.நபியவர்கள் மூலம் உணவு அதிகரிக்கப்பட்ட நிகழ்வுகள் குறித்து ஐந்து இடங்களில் இமாம் (பேரறிஞர்) புஹாரி அவர்கள் தமது ஆதாரபூர்வமான ஹதீஸ் தொகுப்பில் குறிப்பிட்டள்ளார்.(22)

உண்மைக்கான சான்றுகள் உறுதியாக இருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தூதுத்துவத்திற்கான அற்புதங்கள் நிறைந்து காணப்படுகின்றபோது புத்தியுள்ள (பகுத்தறிவுள்ள) ஒருவர் இவை அனைத்தையும் எப்படித்தான் பொய்யெனக் குறிப்பிட முடியும்?
மேற்குறிப்பிடப்பட்ட நபியவர்களின் அற் புதங்களுக்கான இன்னும் சில

எடுத்துக்காட்டுகள் இதோ:

ஒரு நாள் இரவு மிகக்கடுமையான புயல் காற்று வீசும் என அறிவித்தது மாத்திரமன்றி மக்கள் எழுந்து நிற்பதையும் தடைசெய்தார்கள. ஒரு மனிதர் இத்தடையை பொருட்படுத்தாது எழுந்தார் அப்போது அப்புயல்காற்றானது அவர் இருந்த இடத்திலிருந்து அவரை வெகு தொலைவில் எறிந்து விட்டது.(23)

அதே போன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நஜாஷி மன்னர் மரணித்த நாளை அறிவித்து அவருக்காக நான்கு தக்பீர்கள் கூறி தொழுகை நடாத்தினார்ள். (24)

மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருவோர் சாதாரணமாக மக்கள் மரணிப்பது போலன்றி வீரமரணம் எய்து மரணம் அடைவார்கள் என்று அறிவித்தார்கள் அவர்களுள் உமர், உஸ்மான்,அலி ,தல்ஹா அஸ்ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹும் குறிப்பிடத்தக்கவர்கள்.இவர்கள் நபியவர்கள் குறிப்பிட்டது போன்று தியாகிகளாக மரணமடைந்தார்கள்

ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அபூபக்கர் உமர் உஸ்மான் அலி தல்ஹா அஸ்ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோரும் மலைக்கு ஏறினார்கள்.அப்போது அப்பாறை (பாறாங்கல்) அசைந்தது. உடனே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மலையை நோக்கி அசையாது இருப்பீராக! உன்மீது நபியும் உண்மையாளரும் உயிர்தியாகியும் இருக்கிறார்கள் என்று கூறினார்கள்; (25)

எனவே தனக்கு நுபுவ்வத்தை (நபித்துவம்) கொண்டும் அபூபக்கருக்கு

வாய்மை எனும் பண்பைப் பெற்றவர் என்றும் ஏனையோருக்கு உயிர்த்தியாகிகள் என்றும் தீர்ப்பளித்தார்கள்;. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அறிவித்தது போன்றே இவை நிகழ்ந்தன.

மேலும் மக்கள் பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பிரார்த்தனை செய்து உடனே அல்லாஹ் பதிலளித்த நிகழ்வுகள் பற்றிய 150 ஹதீஸ்கள் காணப்படுகின்றன. (26

ஒரு முறை மக்காவாசிகள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவரக்ளிடம் ஒரு அத்தாட்சியைக் காண்பிக்குமாறு கேட்டனர்.உடனே சந்திரனை இரு பகுதிகளாக பிளந்த நிலையில் அதனூடாக ஹிரா மலையைப் காணுமளவிற்;கு அவர்களுக்கு காட்டினார்கள். இந்த ஹதீஸ் முதவாதிர் வகையைச்சேர்ந்ததாகும். அதாவது பெருந்திரலான மக்களால் அறிவிக்கப்பட்ட செய்தியாகும. உறுதியான தகவல்கள் என்பதில் உச்ச நிலையில் காணப்படும் தகவலாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்; தமது நபித்துவம் உண்மை என்பதற்கான ஆதாரத்தை முன்வைப்பதற்காக, சந்திரன் பிளந்த அற்புதம் இடம்பெறும் அத்தியாயமான அல் கமரை மக்கள் செவிமடுக்கவேண்டுமென்பதற்காக மக்கள் அதிகமாக ஒன்று கூடும் ஜும்ஆ மற்றும் பெருநாள் தொழுகைகளில், ஔதக்கூடியவராக இருந்தார்கள்.

(உயிருள்ள படைப்பினங்களில் ஆதம் அவர்கள் இறுதியானவர் என்பதை அறிவித்தர்கள் :ஜும்ஆ தினத்தில் அஸருக்குப்பின் இறுதிப்படைப்பாக )ஆதத்தை அல்லாஹ் படைத்தான்)(27)

இந்த உண்மையானது அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.அறிவியலானது உயிரினங்களில்

மனித இனம்தான் இறுதியாக இந்தப் பூமியில் தோன்றியதாக உறுதிப்படுத்தியுள்ளது. தாவரமும் மிருகமும் தோன்றியதன் பின் தான் மனித இனம் இப்புவியில் தோன்றினார்கள் என்பதை எவ்வாறு அறிந்திருந்திருந்தார்கள்?

அல்லாஹ்வின் பின்வரும் வசனத்தை அவதானித்துப்பார் (இரவையும் பகலையும் இரு அத்தாட்சிகளாக்கினோம்.இரவின் அத்தாட்சியை நீக்கி பகலின் அத்தாட்சியை ஒளிபொருந்தியதாக ஆக்கினோம்)(12) ஸூறதுல் இஸ்ராஉ

பமஹவ்னா ஆயதல் லைல்லி. இரவின் அத்தாட்சியை நீக்கினோம் என்பது சந்திரனைக் குறிக்கிறது. அது இரவின் அத்தாட்சி பிரகாசம் கொடுக்கக்கூடியதாக இருந்து அதன் பிரகாசம் நீக்கப்பட்டுவிட்டது

உண்மையில் இந்த வசனத்திற்கு நபித்தோழர்கள் இவ்வாறே விளக்கம் கொடுத்தார்கள். இந்த வசனம் தொடர்பாக இமாம் இப்னு கஸீர் அவர்கள் தனது அல்குர்ஆன் விளக்க உரையில் இப்னு அப்பாஸ் ரழி அவர்களின் வியாக்கியானத்தை பதிவு செய்துள்ளார்கள்:'சந்திரனும் அது இரவின் அத்தாட்சி என்ற வகையில் சூரியனைப்போல் பிரகாசம் தந்து கொண்டிருந்தது. பின்னர் சந்திரனின் பிரகாசம் நீக்கப்பட்டது.

மிக ஆச்சரியமான விடயமென்னவென்றால் தற்கால அறிவியலானது இதே முடிவுக்கு வந்திருப்பதுதான். நாஸா தனது உத்தியோக (அதிகார) பூர்வ இணையதளத்திலும்,மற்றும் அதிகார பூர்வ அலைவரிசையிலும் , சந்திரனின் ஆயுளின் முதல் சகாப்தம் ஒளிரக்கூடியதாகவும் எரியக்கூடியதாகவும் இருந்தது என்ற செய்தியை பிரசுரித்துள்ளது.(28)

நபியவர்கள் மூலம் அத்தாட்சிகள் நிகழ்ந்தமை, மறைவான விடயங்கள் மற்றும் வானங்களினதும் பூமியினதும் மர்மங்கள் பற்றிய பல நுணுக்கமான விடயங்களைக் கூறியமை மற்றும் அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டமை போன்றன மிக உறுதியான ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் அவர்களுக்கு முன்னிருந்த நபிமார்கள் கொண்டுவந்த மார்க்கத்தை போதித்தார்கள் இதற்கு ஆதரவாக அல்லாஹ்விடமிருந்து உதவிகிடைத்தது. மேலும் அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தை முழுமைப்படுத்தியதன் பின்னரே அவர்கள் மரணித்தார்கள். ஆகவே இவைகள் அவர்கள் ஒரு தீர்க்கதரிசி என்பதை மிக உறுதியா நிரூபிப்பதுடன் சீரிய பகுத்தறிவும் ஏற்கும் விடயமல்லவா!

மேலும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மறைவான (அத்தாட்சிகள்)அற்புதங்கள் ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளன

இவ்வற்புதங்களை அவரின் மரணத்திற்குப் பிறகு அறிவித்தோர்; மனிதர்களில் மிகவும் சிறந்த உண்மைபோசுவோரான அவர்களின் உற்ற தோழர்களே!

அற்புதங்களைக் காண முன்னரே அவர்களின் மூத்த தோழர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது அதிசயமான(விசித்திரமான) விடயமாகும். காரணம் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையாளர் அவர்கள் ஒரு போதும் பொய் சொல்லியதில்லை என்றும் அறிந்தே அவர்கள் இஸ்லாத்தை தழுவினார்கள்.

மூத்த தோழர்களின் இந்த நிலைப்பாடு ஒரு சீரிய புத்திசாலித்தனமான நிலைப்பாடாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸலம் அவர்களின் உண்மை பேசும் பண்பொன்றே அவர்களின் தூது உண்மையென்பதை நிரூபிக்க சுயாதீனமான

போதிய ஆதாரமாகும். இதற்குக் காரணம் ஒரு நபர் தான் ஒரு தீர்க்கதரிசி என்று உறுதியாக கூறுவதற்கு மனிதர்களில் மிகவும் உண்மைபேசும் உத்தமராக இருக்க வேண்டும் அந்த வகையில் (நபி) தீர்க்கதரிசி என்பவர் மனிதர்களில் மிகப்பெரும் உண்மைபேசும் உத்தமராக இருக்க வேண்டும்.

அல்லது குறிப்பிட்ட ஒரு நபர் மிகவும் உன்னதமான விடயங்களில் பொய்யான கருத்தை இட்டுக்கட்டி கூறுவதால் அவர் மனிதர்களில் மிகப்பெரும் பொய்யராக இருப்பார்!

மிகவும் அறியாத மனிதர்களைத் தவிர வேறு எவறும் மனிதர்களில் மிகவும்; உண்மை பேசுபவரை பெய்பேசுபவருடன் குழப்பிக்கொள்ளமாட்டார் .(29)
புத்தியுள்ள ஒருவருக்கு மனிதர்களில் மிகவும் உண்மைபேசுபவரையும் பொய்பேசுபவரையும் வேறுபடுத்திக் கண்டுகொள்வது எவ்வளவு எளிதான விடயம் !

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தூதராக அனுப்பப்பட்டு தமது பிரச்சாரத்தை முன்வைத்த முதல் நாளில் இணைவைப்பாளர்கள் நபியவர்களை ஒரு பேதும் பொய் கூறாத உத்தமர் என்பதை ஏற்றுக்கொண்டனர். அவ்வேளை அவர்கள் நபியவர்களிடம் 'உன்னிடமிருந்து எந்தப் பொய்யையும் எமதனுபவத்தில் நாம் கண்டதில்லை (30) என்ற மிகப்பெரும் நற்சான்றை வழங்கினார்கள். (90) ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் எண் :4971

அபூஸுப்யான் அவர்கள் இஸ்லாத்தை ஏற்க முன் ஹிர்கல் தனது அவையில் நபியவர்கள் குறித்து அவரிடம் ' நீங்கள் , அவர் இவ்வாறு வாதிப்பதற்கு முன் அவர் பொய்சொல்லக் கூடியவர் என சந்தேகிக்கக்கூடியவர்களாக இருந்தீர்களா? என வினவினார்

அதற்கு அபூஸுஃப்யான் இல்லை என்று பதிலளித்தார்.

அதற்கு ஹிர்கல் மன்னன் : மனிதர்களிடம் பொய்பேசுவதை விட்டவர் அல்லாஹ்வின் மீது பொய்சொல்வதற்கு துணியமாட்டார் என்று கூறினார்.
பின் ஹிர்கல் அவரின் விசாரணையை முடித்த பின்னர் பின்வரும் புகழ்பெற்ற வாசகத்தை கூறினார் 'நான் அவர் அருகில் இருந்திருந்தால் அவரின் பாதங்களை கழுவிவிடுவேன்' என்றார்(31)

இறைநிராகரிப்பாளர்களால் நபியவர்களின் முழுவாழ்விலும் ஒரு பொய்யையேனும் எடுத்துக்காட்டுவதற்கு முடியவில்லை. இதனால்தான் நபியவர்கள் தூதராக அனுப்பட முன் அவர்கள் பற்றி இறைமறுப்பாளர்கள் நன்கறிந்திருந்தும் நபியவர்கள் கொண்டுவந்த தூதை ஏற்காததை அல் குர்அன் கண்டித்துப் பேசுகிறது.இது பற்றி எங்களின் இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான். (அல்லது தங்களிடம் வந்த தூதரை தாங்கள் அறியவில்லை என்பதாக(க் கூறி) அவர்கள் நிராகரிக்கின்றனரா?) (69) ஸூறதுல் முஃமினூன் (69)

ஆகவே நபியவர்களின் நிலையும் அவர்களின் வாழ்க்கை வரலாறும் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பதற்கான சுயாதீனமான-தனித்துவமான ஆதாரமாகும்.

அவரின் மீது அல்லாஹ் ஸலவாத்தும் ஸலாமும் சொல்வானாக உண்மைக்கான சான்றுகள் உறுதியாக இருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தூதுத்துவத்திற்கான அற்புதங்கள் நிறைந்து காணப்படுகின்றபோது புத்தியுள்ள (பகுத்தறிவுள்ள) ஒருவர் இவை அனைத்தையும் எப்படித்தான் பொய்யெனக் குறிப்பிட முடியும்?

நான் அல்லாஹ்வை விசுவாசிக்குமாறு கோரப்பட்டுள்ளேன் என்பதை தெரிந்து கொள்வது எவ்வாறு?

பதில்: உன்னையே நீ சிறிது அவதானிப்பதினூடாக, நீ சோதிக்கப்படுகிறீர்; என்பது உனக்குப் புரியும். அதாவது சரியானதைச் செய்ய வேண்டும், தவறு செய்யக்கூடாது என்ற உணர்வு உமக்குள் இருக்கிறதல்லவா?

உதாரணத்திற்கு உமக்கு முன்னால் பணம் இருக்கிறது அதன் உரிமையாளர் அவற்றைப் பொருட்படுத்தாது வேறு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம் அவ்வேளையில் உமக்குள்' இந்தப் பணத்தை எடுத்து பயன்படுத்து' என்ற உணர்வு தோன்றும் அல்லது இதற்கு நேர் எதிராக இந்தப் பணத்தை எடுக்காதே இது பெரும் குற்றம் என்ற உணர்வு தோன்றுமல்லவா இவை உனது வாழ்வில் எல்லா சூழ்நிலைகளிலும் நீ சோதிக்கப்படுகிறீர் என்ற ஒரு செய்தியை உனக்கு உணர்த்துகிறது.

அதாவது- இக்காரியத்தை செய் இதனை செய்யாதே- எனும் உணர்வானது உன்னில் இருப்பது உண்மையில் நீ சோதிக்கப்டுகிறீர் என்பதையும் நீ புறக்கணிக்கப்பட்டவரல்ல என்பதையும் காட்டுகிறது. எந்த ஒரு பெருமானமுமில்லாது இவ்வாறான உணர்வு இருக்க முடியாது.

அல்லாஹ் கூறினான் பின்னர், நிச்சயமாக நாம் அவனுக்கு நேரான வழியையும் அறிவித்தோம். எனினும், (அதைப் பின்பற்றி நமக்கு) நன்றி செலுத்துபவர்களும் இருக்கின்றனர். (அதை) நிராகரித்துவிடுபவர்களும் இருக்கின்றனர். அல்இன்சான் (மனிதன்)

ஆகவே மனிதனுள் காணப்படுகின்ற ஒரு காரியத்தை செய் செய்யாதே என்ற உணர்வானது அவனுடைய வாழ்வில்

ஒவ்வொரு கட்டத்திலும் அல்லது சூழ் நிலையிலும் அவனை நன்றி செலுத்துபவனாகவோ அல்ல நன்றி மறந்தவனாகவோ வாழ வழி செய்கிறது.

மாறாக மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிலும் நல்லதை செய்யவும் தீமையை செய்யவும் அவனுக்கு முடியும். அதாவது பள்ளிக்கு செல்வதற்கு அல்லது கேளிக்கைகளில் ஈடுபடுவதற்காக செல்லவும் அவனால் முடியும்

மகத்துவமிக்க அல்லாஹ் கூறுகிறான் ("ஜின்களையும், மனிதர்களையும் (அவர்கள்) என்னை வணங்குவதற்கே தவிர (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை.)(56) ஸூறதுத் தாரியாத்

ஏதாவது ஒரு வகையில் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதல் அல்லது அவனுக்கு கட்டுப்படாது மாறுசெய்தல் என்ற உணர்வை ஒவ்வொரு கட்டத்திலும் காண்பாய்.

எனவே யார் அல்லாஹ் ஏவியவற்றை செய்வதற்கான வாய்ப்பை பெறுகிறானோ அவன் வெற்றிபெறுவான் மேலும் யார் அல்லாஹ் ஏவியவற்றிற்கு மாறு செய்கிறானோ அவன் தவறிழைத்துவிட்டான்.

இத்தெரிவுரிமையின் விளைவாக மனிதன் அவன் புரியும் அனைத்துக்காரியத்திற்கும் விசாரணை உள்ளது என்பது தெளிவாகிறது. ஆக எம்மைப் படைத்ததன் நோக்கம் நாம் சோதிக்கப்டுவதற்கேயாகும். இந்த நோக்கத்திற்காகவே அல்லாஹ் தூதர்களை அனுப்பி வேதங்களையும் இறக்கியருளினான். (அல்லாஹ்வை வணங்குங்கள் மேலும் (அல்லாஹ் அல்லாது வணங்கப்படும் தாகூத்தை விட்டு விலகிக்கொள்ளுங்கள் எனக் கூறும் தூதரை ஒவ்வொரு சமூகத்திற்கும் அனுப்பினோம்) (36) ஸூறதுன் நஹ்ல்

மரணத்துடன் முடிவடையும் இப்பரீட்சையின் பின் அல்லாஹ்விடம் நாம் திரும்பிச் செல்வோம் (அவனிடமே நீங்கள் திரும்பிச் செல்வீர்கள்) என அல்லாஹ் குறிப்பிடுகிறான். (22) ஸூறா

நிச்சயமாக இறுதியில் சென்றடைவது உமது இறைவனிடம்தான்")(42). ஸூறதுன் நஜ்ம் (நிச்சயமாக உமது இரட்சகனிடமே மீளவேண்டியதாகவுள்ளது) (08) ஸூறதுல் அலக் எனவே நாம் முற்படுத்திய வினைகுறித்து விசாரிக்கப்படுவதற்கு அல்லாஹ்விடமே மீண்டும் செல்லவேண்டியவர்களாக உள்ளோம். (மேலும் நிச்சயமாக அவனது முயற்சி விரைவில் அவனுக்குக் காண்பிக்கப் படும்).(40) (பின்னர் அதற்குரிய நிறைவான கூலி அவனுக்கு வழங்கப்படும்.) (41) ஸூறதுன் நஜ்ம் நீ புரிந்த செயல்கள் காண்பிக்கப்பிக்கப்பட்டு அதற்கான விசாரணையும் இடம்பெறும் "ஆகவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர், (அங்கு) அதையும் கண்டுகொள்வார்".(7) ("எனவே எவன் அணுவளவேனும் தீமை செய்தாலும் அவன் அதனைக் கண்டுகொள்வான்")(8) ஸூறதுஸ்ஸல்ஸலா. (அதிர்வு)

## 27- நபிமார்களை நிராகரித்து (நம்பாது) அல்லாஹ்வை மாத்திரம் ஈமான் (ஏற்றுக்) கொள்வது மாத்திரம் போதுமா?

பதில் :இல்லை என்பதே அதற்கான பதிலாக அமையும்.

ஒரு மனிதர் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டு முஸ்லிமாகும் வரையில் தீர்க்கதரிசிகளை விசுவாசம் கொள்ளாது அல்லாஹ்வின் (இறைவனின்) இருப்பை ஏற்று நம்புவது மாத்திரம் போதாது. அதாவது அல்லாஹ்தான் படைப்பாளன் வாழ்வாதாரத்தை வழங்குபவன் திட்டமிடுபவன் என நம்பிக்கொண்டு அவனது இறைவெளிப்பாட்டையும் அவனின் தூதுவர்களையும் மறுப்பதன் அர்த்தம் என்ன?

இது மிகப் பெரும் இறைநிராகரிப்பாகும்.

மாறாக இறைச்செய்தியை மறுப்பவர்களில் இவர்களை விடவும் மிகப்பெரும் குற்றத்தை செய்தவர் வேறு யாரும் இருக்க முடியாது. இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் (நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் நிராகரித்து,அல்லாஹ்வுக்கும் அவனது தூதர்களுக்கும் மத்தியில் பாரபட்சம் காட்ட விரும்பி, தூதர்களில் சிலரை நம்பிக்கை கொள்வோம் மற்றும் சிலரை நிராகரிப்போம் என்று கூறி (நிராகரிப்பு நம்பிக்கை ஆகிய )இவற்றுக்கு மத்தியில் ஒரு பாதையை எடுத்துக்கொள்ள நாடுகிறாரோ அவர்கள் தாம் உண்மையான நிராகரிப்பாளர்களாவர். இந்நிராகரிப்பாளர்களுக்கு இழிவு தரும் வேதனையையே நாம் தயார் செய்து வைத்துள்ளோம். (151) அத்தியாயம் : அந்நிஸா (பெண்கள்) 160.

எனவே யார் அல்லாஹ்வை நம்பி தீர்க்கதரிசிகளை நிராகரிக்கிறாரோ அவர்தான் உண்மையான நிராகரிப்பாளர் ஆவார்.

ஆக யாராவது ஒருவர் தீர்க்கதரிசிகளில் எவரையாவது ஒருவரை நிராகரித்தால், (ஏற்காதிருந்தால்) அல்லாஹ்வின் வேதவெளிப்பாட்டை மறுத்ததன் காரணத்தினால் அவர் அல்லாஹ்வை நிராகரித்தவராகக் கருதப்படுவார்.இதற்காகவே முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவத்தை ஏற்காததின் காரணத்தினால் வேதக்காரரர்களான யூதர்களும் கிறிஸ்தவர்களுகம் இஸ்லாத்தை ஏற்காத நிராகரிப்பளர்களாக கருதப்படுகிறார்கள். (வேதத்தையுடையவர்களிலும் ,இணைவைப்பாளர்களிலும் எவர்கள் நிராகரித்தாளர்களோ அவர்கள் நரக நெருப்பில் இருப்பார்கள்.இவர்கள்தான் படைப்பினங்களில் மிகக் கெட்டவர்கள்)(6) அத்தியாயம்: அல்பய்யினா (தெளிவான சான்று)

அவர்கள் நரகத்தில் நுழைவது குறித்த அல்லாஹ்வின் எச்சரிக்கை உண்மையானது. இதனையே அல்லாஹ் ஸூறதுல் காபில் (14) எனது எச்சரிக்கை-வாக்கு- உறுதியாகிவிட்டது எனக் குறிப்பிடுகிறான்.

ஒரு மனிதன் அல்லாஹ்வை படைப்பாளன் வாழ்வாதாரத்தை அளிப்பவன் உயிர்ப்பிப்பவன் மரணிக்கச்செய்பவன் என்று வெறுமனே ஏற்றுக்கொள்வதனை இஸ்லாமாகவோ அவனுக்கான விமோசனமாகவோ கருதப்படமாட்டாது . மாறாக அவன் தூதர்களை ஏற்று விசுவாசித்திருப்பது மிக அவசியமான ஒன்றாகும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளும் போதே அவன் முஸ்லிமாக மாறி மறுமை விமோசனமும் கிடைக்கப்பெறுகிறான்.

அப்படியானால் அல்லாஹ்வின் இருப்பை மாத்திரம் ஏற்று தீர்க்கதரிசிகளை நிராகரிப்பது முஸ்லிமாக மாறுவதற்கு எந்த வகையிலும் போதாத விடயமாகும். அது மறுமையில் அவருக்கு அல்லாஹ்விடத்தில் எவ்விதப்பயனையும் பெற்றுத்தறாது. ஆகையால் அல்லாஹ்வை வணங்குவதானது அனைத்து தூதர்களையும் விசுவாசிப்பதில் தங்கியுள்ளது என்பதை புரிய வேண்டும்.

அவ்வாறு இறையிருப்பை மாத்திரம் நம்புதல் போதுமானது என்றிருந்தால் அல்லாஹ் தூதுவர்களை அனுப்பவோ, வேதங்களை இறக்கவோ எந்த தேவையும் இருந்திருக்காது. ஏனெனில் மனிதர்கள் அனைவரும் உள்ளுணர்வால் அல்லாஹ்வை அறிந்திருப்பதே இதற்கான காரணமாகும்.

எனவே அல்லாஹ்வின் தூதர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளினூடாக மார்க்கமாக அறிவித்துத் தந்ததின் அடிப்படையில் உன்னைப் படைத்து உனக்கு நேரான வழியை காட்டி வாழ்வாதாரத்தை அளித்த அல்லாஹ் ஒருவனை மாத்திரமே நீ வணங்கி வழிபடுவதற்கு தகுதியானவன்.

## 28- இறை நிராகரிப்பாளனுக்கு அவனின் நற்காரியங்களுக்காக அல்லாஹ்விடம் கூலி கிடைக்குமா?

பதில் : நற்காரியம் என்பது ஒரு இயற்கை உணர்வாகும். அப்பண்பை இயற்கையில் பெற்ற நிலையிலே அல்லாஹ் மனிதர்களைப் படைத்துள்ளான்.இதனால்தான் எந்த ஒரு மனிதனாக இருந்தாலும் அவன் இறை நிராகரிப்பாளனகவோ அல்லது பல தெய்வக்கொள்கையைக் கொண்டவனாகவோ இருந்தாலும் நற்காரியங்களை செய்வதை உம்மால் காண முடிகிறது.அந்த வகையில் எல்லா மனிதர்களும் அவர்கள் இயல்பில் இப்பண்பை பெற்ற நிலையில் படைக்கப்பட்டிருப்பதால் நல்ல காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாறாக அல்லாஹ்வின் திருமுகம் நாடி இதயசுத்தியோடு அவனின் கூலியை மாத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருப்பது நற்காரியம் ஏற்றுக்கொளள்ளப்படுவதற்கான நிபந்தனையாகும்
இதனடிப்படையில் அல்லாஹ்வுடன் பிற கடவுள்களை வணங்கும் பல தெய்வ நம்பிக்கையுள்ள அல்லாஹ்வை நம்பாதவனுக்கு;: உமது நற்செயல்களில் நீ; அல்லாஹ்வுடன் யாரை தொடர்புபடுத்தினீரோ அவர்களிடம் சென்று உனது வெகுமதியைப் பெற்றுக்கொள்வீராக என்று நாம் அவருக்குக் கூறுகிறோம் ஏனெனில் நீ உனது நற்காரியங்களில் அல்லாஹ்விடம் மாத்திரம் கூலியை எதிர்பார்த்து செய்யவில்லை.

உதாரணத்திற்கு ஒரு மனிதனை இவ்வாறு கற்பனை செய்து பாருங்கள். அவரின் குடும்பம் அவனை நல்ல முறையில் வளர்த்து, அவன் ஒரு வலிமைமிக்க வாலிபனாக வளரும் வரையில் அவனுக்கான அனைத்து செலவுகளையும் பொருப்பேற்று அவனை நல்ல முறையில் கவனித்ததன் பின்னர், அந்த வாலிபன் மற்றவர்களுக்கு சேவை செய்ய செல்கிறரர், அவரின் பணி முடிந்ததும அவன் தனது குடும்பத்தினரிடம்

திரும்பி வந்து நான் மற்றவர்களுக்கு சேவை செய்தமைக்கான எனது கூலியை தாருங்கள் என்று கேட்பதற்கு அவனுக்கு உரிமை இருக்கிறதா? அப்போது அவனின் குடும்பத்தினர்

நீ யாருக்கு பணி புரிந்தீரோ அவர்களிடம் சென்று உனது கூலியை பெற்றுக் கொள் என்று பதில் கூறுவார்கள்.

இவ்விடயத்தில் உயர் முன்மாதிரி இறைவனுக்கு (அல்லாஹ்வுக்கு) மாத்திரமே உண்டு

எனவே உன்னைப் படைத்து உனக்கான வாழ்வாதாரத்தை வழங்கி மேலும் எல்லா வகையான அருளையும் புரிந்த அல்லாஹ்வை வணங்குவதை விட்டுவிட்டு அவனிடம் உனது செயலுக்கான கூலியை (வெகுமதியை) எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது!?

மகத்துவமிக்க அல்லாஹ் கூறுகிறான் "(இன்னும், நாம் அவர்கள் (இம்மையில்) செய்த செயல்களின் பக்கம் முன்னோக்கி அவற்றை (நன்மை எதுவும் இல்லாது) பரத்தப் பட்ட புழுதியாக ஆக்கிவிடுவோம் (பயனற்றதாக ஆக்கி விடுவோம்)(23) : அல் புர்கான் (பிரித்தறிவித்தல்) மேலும் அல்லாஹ் கூறுகிறான் : எவர்கள் நிராகரிப்பவர்களாகி விட்டார்களோ, அவர்களுடைய செயல்கள் வனாந்தரத்தில் தோன்றும் கானலைப்போல் இருக்கின்றன. தாகித்தவன் அதைத் தண்ணீர் என எண்ணிக் கொண்டு அதன் சமீபமாகச் சென்றபொழுது ஒன்றையுமே அவன் காணவில்லை"(39) ஸூறதுன் நூர் (ஒளி)

அல்லாஹ்வை நிராகரிப்பவர்களின் செயல்கள் நேர்மையானதாக –நல்லதாக-இருந்தாலும் கூட, அவர்கள் காஃபிர்கள்-அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்பதால் அதற்கான கூலியை பெற்றுக்கொள்வதற்கு தகுதிபெறமாட்டார்கள். அவர்கள்; நற்செயலின்

மூலம் தங்கள் இறைவனின் கூலியைப் பெற வேண்டும் என அவர்கள் எண்ணவுமில்லை , மேலும் அந்த நற்செயலின் மூலம் தங்கள் படைப்பாளனின் திருப்தியை நாடவுமில்லை.

எனவே,நாம் அனைவரும் பல நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வைக் கொண்டிருப்பதால் இங்குள்ள பிரச்சினை வெறுமனே ஒரு நல்ல காரியம் மட்டுமல்ல. மாறாக, நீ ஏன் இந்த நல்ல காரியத்தை செய்கிறாய்;? யாருக்காகச் செய்கிறாய்? நீ அதை உன் சொந்த நலனுக்காக செய்கிறீரா? அல்லது முகஸ்துதிக்காக – பிறருக்கு காட்டுவதற்கு- செய்கிறீரா அல்லது அல்லாஹ் அல்லாத வேறு ஒருவருக்காக அந்தக் காரியத்தை செய்கிறீரா? என்பதே இங்குள்ள பிரச்சினையாகும்.

இவைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்காக செய்யப்பட்ட நற்காரியங்களல்ல. அதே போன்று அல்லாஹ்விடம் எதிர்பார்க்கப்படுகின்ற நற்செயலுக்கான கூலியையும் பெற்றுத் தரவும் மாட்டாது என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

## 29-இஸ்லாம்தான் உண்மை மார்க்கம் என்றிருந்தால், ஏன் அதில் சில சந்கேமான விடயங்கள் காணப்படுகிறன?

பதில்: சந்தேகம் என்பது ஒரு முஸ்லிம் தனது மார்க்கத்தில்; புரிந்து கொள்ளாத ஒரு பிரச்சினை. அதற்கான பதிலை தெரிந்து கொள்ளும் வரையில் அவனுக்கு அந்த விடயத்தில் தளம்பல் நிலை காணப்படும். (குழப்ப நிலை காணப்படும்)

மேலும், அசத்தியத்தை விரும்புபவர்கள் தங்கள் இறைவனுக்குக் கீழ்ப்படிவதை விட்டும் விலகிச் செல்வதற்காக அல்லாஹ், மார்க்கத்தில் சிறிய விடயங்களில்(கிளை அம்சங்களில்) சந்தேகத்திற்குரிய விடயங்கள்

இருக்க வேண்டும் என்று நாடியுள்ளான்.

மகத்துவமிக்க அல்லாஹ் கூறுகிறான் (அவன்தான் உம்மீது (இவ்) வேதத்தை இறக்கினான்.அதில் (கருத்துதெளிவுள்ள) விளக்கமான வசனங்களும் இருக்கின்றன. அவை தான் இவ்வேதத்தின் அடிப்படையாகும். மற்றவை (பல கருத்துக்களுக்கு இடம்பாடான) முதஷாபிஹாத் என்னும் வசனங்களாகும். எனினும் எவர்களுடைய உள்ளங்களில் வழிகேடு இருக்கிறதோ அவர்கள் குழப்பத்தை நாடியும்,இதன் தவறான விளக்கத்தைத் தேடியும் அதில் பல கருத்துக்களுக்கு இடம்பாடானவற்றைப் பின்பற்றுகின்றனர். அதன் உண்மையான விளக்கத்தை அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அறியமாட்டார்கள். அறிவில் முதிர்ச்சி பெற்றவர்களோ 'அவை அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து வந்தவைதான். நாங்கள் அதை நம்பிக்கை கொள்கிறோம்' என்று கூறுவார்கள். சிந்தனையுடையோரைத் தவிர மற்றவர்கள் இதைக்கொண்டு நல்லுபதேசம் பெறமாட்டார்கள்.)(07) ஸூறா ஆலி இம்ரான்

'எனினும் எவர்களுடைய உள்ளங்களில் வழிகேடு இருக்கிறதோ அவர்கள் குழப்பத்தை நாடியும்,இதன் தவறான விளக்கத்தைத் தேடியும் அதில் பல கருத்துக்களுக்கு இடம்பாடானவற்றைப் பின்பற்றுகின்றனர். இவ்வசனத்தின் கருத்தாவது யாரின் உள்ளத்தில் வழிகேடு இருக்கிறதோ அவன் குழப்பத்தை நாடியும் அல்லாஹ்வை விட்டு விலகிச்செல்வதை தேடும் அடிப்படையில் அவன் முதஷாபிஹாத் எனும் பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்களைப் பின்பற்றுவான் என்பதாகும்.

இந்த அடிப்படையில் அல்லாஹ்வின் ஞானத்தின்டி படி ஈமான் (இறை விசுவாசம்) இறை நிராகரிப்பு (குப்ர்) எனும் விடயங்கள் இருப்பதை நாடிவிட்டான் (எனவே உங்களில் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளாத காபிரும் (நிராகரிப்போரும் ) ஏற்றுக்கொண்ட நம்பிக்கை கொண்டோரும்

உள்ளனர்) (2) ஸூறதுத் தஃகாபுன்

எனவே இந்த சந்தேகங்களுடன் தொடர்புபட்டவர்கள் இறை நிராகரிப்பை விரும்புபவர்கள் மேலும் இதில் மூழ்கியிருப்பதனால் தனது மார்க்கம் தொழுகை மற்றும் ஈமான் இறைவிசுவாசம் போன்றவற்றிலிருந்து அவரைத் தூரப்படுத்திவிடுகிறது

இறைவிசுவாசியைப் பொருத்தவரை மார்க்கம் மற்றும் தூதுத்துவம் ஆகியவற்றின் உண்மையை உறுதிப்படுத்தும் தெளிவான ஆதாரங்களைப் பின்பற்றுவான்.அவனுக்கு அதில் ஏதாவது ஒரு விடயம் புரியவில்லையாயின் அவன் அந்த விடயம் குறித்து அறிந்தோரிடம் விசாரித்து தெரிந்துகொள்வான். மாறாக தனது மார்க்கம் குறித்து விளங்காத விடயங்களில் மூழ்கி மார்க்கத்தை விட்டும் தொழுகையை விட்டும் விலகிச்செல்லமாட்டான்.

தனக்கு புரியவில்லை என்பதற்காக மார்க்கத்தை விட்டு செல்கிறவனின் உள்ளத்தில் நோய் உள்ளது. (தனது உள்ளங்களில் நோயுள்ளோரும் நிராகரிப்பாளர்களும் இந்த உதாரணத்தின் மூலம் அல்லாஹ் எதனை நாடுகிறான் எனக் கூறுவதற்காகவும்,(இவ்வாறு நாம் ஆக்கினோம்) இவ்வாறே அல்லாஹ் தான் நாடுவோரை வழிகேட்டில் விட்டுவிடுகிறான்.மேலும் தான் நாடுவோரை நேர்வழியில் செலுத்துகிறான்) (31) ஸூறதுல் முத்தஸ்ஸிர் (போர்த்திக்கொண்டிருப்பவர்)

மேலும் இந்த சந்தேகங்கள் இருப்பதன் நோக்கத்தில் ஒன்றுதான் முதஷாபிஹாத்தான (பல கருத்துக்களுக் இடம்பாடான வசனங்களின் மூலம் அறிஞர்கள் மற்றும் அகப்பார்வையுடையோர் யார் என்பதை வித்தியாசம் காண முடியும்.அதேவேளை சந்தேகமான விடயங்களுக்குரிய பதிலை ஓர் அறிஞர் அறிந்து கொள்வதுடன் மார்க்கத்தை படிக்காத, ஆழமான அறிவைப்பெறாத ஒருவர் அவரிலிருந்து வேறு படுகிறார்

என்பதையும் தெரிந்து கொள்ள முடியும்.இவ்வடிப்படையில் தான் கற்றோருக்கான அந்தஸ்த்தை பல படித்தரங்களாக அல்லாஹ் உயர்த்தியுள்ளான்.

உண்மை மிகவும் தெளிவானது.ஆனாலும் ஒத்ததன்மை வாய்ந்த விடயங்கள் இருக்கும் அதன் காரணமாக ஆய்வு மேற்கொள்ளும் நிலை உருவாகிறது.

இறைவனின் படைப்பில் இறைவனின் சுன்னா (வழிமுறை) பொறுப்புச்சாட்டல் (ஆணையிடுதல்) ஆகும். அவனது வழிமுறையான பொறுப்புச்சாட்டலில் சில நுட்பங்கள் மறைந்துள்ளன. வெற்றி பெற்றவன் யாரெனில் தான் அறிந்த மறைவான மற்றும் துல்லியமான விடயங்களின் மூலம் ஆதாரத்தைத் தேடியவன். நஷ்டவாளி யாரெனில் தனது அறியாமையை தான் அறிந்தவற்றிற்கு ஆதாரம் கொள்வதற்கு திறையாகப் பயன்படுத்துபவனே!

## 30- அல்லாஹ் ஏன் தீமையைப் படைத்தான்? அல்லது இன்னொரு வகையில் கூறின் ஒரு முஸ்லிம் தீமையெனும் சிக்களுக்கு எவ்வாறு பதில் கூறப்போகிறார் ?

தீமை பற்றிய பிரச்சினை குறிப்பாக நாத்திகத்தின் மிகப்பெரும் காரணமாக வரலாறு நெடுகிலும் இருந்துவந்துள்ளது.

(இன்னும், மனிதர்களில் (உறுதியின்றி, சந்தேகத்தின்) விளிம்பின் மீதிருந்து (கொண்டு) அல்லாஹ்வை வணங்குகிறவனும் இருக்கிறான். எனவே, அவனுக்கு ஒரு நன்மை ஏற்படுமாயின் அதைக் கொண்டு அவன் திருப்தியடைகிறான். அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்படுமாயின் தலை கீழாக மாறிவிடுகிறான் (இத்தகையவன்) இம்மையிலும் மறுமையிலும் நஷ்டமடைந்து விட்டான், இதுதான் வெளிப்படையான நஷ்டமாகும். )(11)

ஸூறதுல் ஹஜ்:

சிலர் தமக்கு ஏற்பட்ட ஒரு பிரச்சினை (குழப்பம்), அல்லது சோதனை அல்லது இழப்பு காரணமாக அல்லாஹ்வை நம்பாது நிராகரிப்போரும் உண்டு.
; அடிப்படையில் ஏன் தீமை இருக்கிறது? என இங்கு சில வேளை நாத்திகனொருவன் கேட்கலாம்.

அதற்கான சாதாரண பதில் என்னவென்றால் நாம் அனைவரும் கடமைகளால் பொறுப்புச்சாட்டப்பட்டவர்கள்.

மற்றையது நாம் சோதனைக்கான ஒரு உலகில் இருக்கிறோம் என்ற வகையில் தீமையென்பது இவ்வுலகில் காணப்படும் ஒரு அம்சம்.

எங்கள் இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் . ( தீமையின் மூலமும் நன்மையின் மூலமும் உங்களை பரீட்சிப்பதற்காக நாம் சோதிப்போம்) ஸூறதுல் அன்பியா (35) அத்தியாயம்: அல் அன்பியா (நபிமார்கள்)

பொறுப்புக்களால் பணிக்கப்பட்டவன் என்ற வகையில் நன்மை தீமை என்பது இருக்கும். மேலும் பொறுப்புச்சாட்டப்படுவது உனது இருப்பின் இலக்காகும்.

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் ( உங்களில் அழகிய செயலையுடையவர் யார் என உங்களைச் சோதிப்பதற்காக அவனே வாழ்வையும் மரணத்தையும் படைத்தான் அவன் யாவற்றையும் மிகைத்தவன் மிக்க மன்னிப்பவன்.) (2) அத்தியாயம்: அல் முல்க் (ஆட்சி)
தீமையும், பிரச்சினையும், சோதனைகளும் இருப்பதானது மார்க்கம் என்பது உண்மையானது என்பதற்கும் நாத்திகம் தவறானது என்பதற்கும்

மிகப்பெரும் ஆதாரமாகும்.

நாம் பௌதீக உலகின் புத்திரர்களாக இருந்திருப்போமானால் நன்மையையோ தீமையையோ நாம் புரிந்து கொண்டிருக்கமாட்டோம்.

முழு பிரபஞ்சமும் அர்த்தமற்றதாக இருந்தால், அது அர்த்தமற்றது என்று முற்றிலும் எமக்கு தெரிந்திருக்காது.(32) ஏனென்றால், நாத்திகத்தின் பார்வையில் நாமெல்லாம் மிக இருக்கமான விளகிச்செல்ல முடியாத சடரீதியான அடிப்படைகளில் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.மேலும் இயற்கை விதிகள் எம்மீது செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த சூழலில், தீமையின் தன்மையையோ அல்லது தீமை என்ற வார்த்தையின் பொருளையோ நாம் புரிந்து கொள்ள முடியாதவர்களாக உள்ளோம்.

மிகவும் முன்னேற்றம் அடைந்த மிருகங்கள் தீமைபற்றிய சிக்கலை புரிந்து கொண்டுள்ளனவா?

எனவே தீமையைப் புரிந்துகொள்வது என்பது நாம் இந்த உலகத்தின் புத்திரர்கள் அல்ல என்பதையும் தீமை இருப்பதைப் பற்றிய நமது புரிதலை இருத்தலுக்கான டார்வினிய பொருள்முதல்வாதத்தின் அறிமுகம் அல்லாதஇன்னொரு முன்மாதிரியான அடிப்படையிலிருந்து பெறுகிறோம் என்பதுதான் இதன் அர்த்தமாக உள்ளது.

நாம் ஒரு பரலோக (வானலோக) முன்மாதிரியைச்; சேர்ந்தவர்கள் மாறாக நாத்திக பௌதீக சடத்துவ மாதிரியை பெற்றவர்கள் அல்லர். அதாவது தீமையை நாம் எவ்வகையில் புரிந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கான ஒரே விளக்கம் இதுதான்.

நாம் பொறுப்புச்சுமத்தப்பட்டோராக இருக்கும் காரணத்தினால் குழப்பமும் சோதனையும் இயல்பாக காணப்படும்.அதன் படி தீமையும்

இயல்பான ஒன்று என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஆக தீமையும் வாழ்க்கையில் சில துன்பங்களும்; பாவத்தைப் புரிவதற்கான இயலுமையும் இறைஆணையினதும் மனித விருப்பின் சுதந்திரத்திற்குமான இயற்கையின் தேவையாகவும் தெளிவான முடிவாகவும் உள்ளது.

தீமை, சோதனை, துன்பங்கள்; மற்றும் இச்சைகள் ஆகியவற்றின் இருப்பானது, ஒரு நல்ல மனிதனில் காணப்படுகின்ற மிகச் சிறந்ததையும், கெட்ட மனிதனில் காணப்படுகின்ற மிக மோசமானதையும் வெளிப்படுத்துகிறது.

தீமை இருப்பதன் காரணமாக நாத்திகர்கள் படைப்பாளனின் இருப்பை மறுக்கும்போது இந்த ஆய்வைப் பயன்படுத்துவது ஆச்சரியமாக இருக்கிறது:

1- தகப்பன் நல்லவராக இருந்து, தன் மகனின் நலனை விரும்புவராகவும் இருந்தால், நுண்ணுயிர்களுக்கு எதிராக வலிமிகுந்த ஊசி போடுவதற்கு அவர் ஏன் அனுமதித்தார்?

2- ஊசி போடும் போது மகனுக்கு வலி ஏற்பட்டதா?
3- அவ்வாறாயின் தந்தை இருக்கவில்லை என்பது அர்த்தமாகும் (33)
இது ஒரு பகுத்தறிவுரீதியான முடிவா?

அப்படியானால் நன்மை மற்றும் தீமை தொடர்பாக இறை ஞானத்தின் அனைத்து நுணுக்கங்களையும் நாம் புரிந்து கொள்ளாமல் இருப்பது இயற்கையானது.

அல் ஹில்ர் என்ற நல்லடியாரின் செயல்களில் உள்ளடங்கியுள்ள தத்துவத்தை அல்லாஹ் (மோசஸ்) மூஸா அலைஹிஸ்ஸலாம்

அவர்களுக்குத் தெளிவுபடுத்தினான். அச்செயல்கள் வெளிப்படையாக கண்டிக்கத்தக்கவையாகவும்,விரும்பத்தகாதவையாகவும் இருந்தும் கூட அவை மிகப் பெரும் நன்மைகளை –நலன்களை- கொண்டிருந்தன. அத்துடன் (மோசஸ்) மூஸா மற்றும் அல்-ஹில்ரின் சம்பவமானது அல் குர்ஆனில் நடந்ததை நினைவு கூறுவதற்கோ கதைகூறுவதற்கோ குறிப்பிடபடவில்லை. மாறாக சிந்தித்தல், மனித ஆன்மாவின் குறைபாடுளையும் அதன்,அவசர தீர்ப்புகளையும் ஒப்புக்கொள்ளல் ஆகியவற்றை விவரிப்பதையே இலக்காகக்; கொண்டுள்ளது.

தீமை பற்றிய விவகாரத்தில் மிக விசித்திரமான ஒரு செய்தி; உள்ளது அதுதான் : உலகில் தீமை இல்லை என்றிருந்தால், நான் பிறந்த இடத்தை விட்டு வெளியேற மாட்டேன்! அதாவது நன்மை மாத்திரம் உள்ள இடத்திலிருந்து நன்மையும் தீமையும் நிறைந்த இவ்வுலகிற்கு நாம் வந்துள்ளோம் என்பதே இதன் விளக்கமாகும்

எந்த நாகரீகமும் தோன்றியிருக்காது நகரங்களும் தொழிற்சாலைகளும் வீடுகளும் நிர்மானிக்கப்பட்டிருக்காது மனிதர்கள் எந்தத் தொழில் செய்யவும் தேவைப்பட்டிருக்காது மேலும் மனிதர்கள் நோயை எதிர்க்கவோ பிரச்சினைக்கு தீர்வு தேடவோ நிம்மதியைப் பெற்றுத்தரும் புத்தாக்க கருத்துக்கள் குறித்தோ சிந்தித்திருக்கமாட்டார்கள்.

மேலும் மனிதன் தான் பிறந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு செல்வதற்கான தேவையும் ஒருபோதும் இருந்திருக்காது.
; அவ்வாறாயின் எவ்விதத் தீமையோ , கஷ்டமோ, சோதனையோ,சோர்வோ இருக்கக கூடாது அதே போல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தேடுவதும் கூடாது!

ஆகவே களைப்புறுவதும்; உறங்காது விழித்திருப்பதும் சிந்தனை செய்வதும் உழைப்பதும் எதற்காக?

எனவே தீமையென்பது உலக வாழ்வில் இன்றிமையாத ஒரு விடயமாகும்
எனவே இது குறித்து சிந்திப்பீராக!

நீ ஆணைக்குட்பட்டவன் (பொறுப்புச்சாட்டப்பட்டவன்) என்பதால் அல்லாஹ்வை பயந்து கொள்வீராக!

அதிகமான மனிதர்களுக்கு சோதனையும் தீங்கும் ஏற்படுகிறது உடனே அவர்கள் இறைவனை நோக்கி செல்கிறார்கள் அதனால் அவர்கள் உத்தமர்களாக மாறிவிடுகிறார்கள் (மகத்தான அல்லாஹ்வை புகழ்வதின் மூலம் துதிசெய்கிறேன்.

ஆகவே அல்லாஹ்வின் - இறைவிதி அனைத்திலும் பெரும் தத்துவமும் நன்மையும் உள்ளடங்கியுள்ளது.

எனவே ஒரு முஸ்லிமைப்பொருத்தவரை அவன் அல்லாஹ்வின் விதிகள் அனைத்தையும் நம்பிக்கை கொள்வது அவசியமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள். 'உனக்கு உஹுத் மலையளவு தங்கமிருந்து அவையனைத்தையும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தாலும் அல்லாஹ்வின் விதியை ஏற்றுக்கொள்ளும் வரை அதனை அவன் அங்கீகரிக்கமாட்டான். உமக்குக் கிட்டாமல் சென்றவைகள் உன்மீது விதிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொள்வீராக. உமக்குக் கிட்டியவைகள் உம்மைக் கடந்து சென்று விடும்படி விதிக்கப்படவில்லை. இதனை ஏற்காது யார் மரணிக்கிறானோ அவன் நரகம் நுழைவான். என்பதையும் அறிந்து கொள்வீராக (34)

இறைவிதியில் நல்லது தீயது எல்லாவற்றையும் ஒரு முஸ்லிம் திருப்தியோடு ஏற்றுக்கொள்வது கடமையாகும்.

இறைவிதிகள் அனைத்திலும் ஆழ்ந்த நுட்பமும் நன்மைகளும் நிறைந்து காணப்படுகிறது. வெளிப்படையில் அவற்றில் சிலதில் தீங்கும் நெருக்கடியும் தொந்தரவும் இருப்பதாக தென்பட்டாலும் இறுதியில் மிகப் பெரும் பாக்கியமும் ஆழமான இறை நுற்பமும் அதிலே சூழ்ந்திருக்கும்

## 31- ஒரு காலகட்டத்தில் பூமியில் ஆதிக்கம் செலுத்திய மதப் போர்களுக்கு மதம்தான் காரணமாக அமைந்ததா?

பதில் மனிதகுலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஏகத்துவத்தின் சட்டதிட்டங்களுடனும், நான்காயிரம் ஆண்டுகளாக முப்பெரும் நபி இப்ராஹீம் அலை அவர்களின் சட்டதிட்டங்களுடனும் வாழ்ந்தது. இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அது ஒரு போதும் மனித இனத்திற்கு நேரடியான எந்த அச்சுறுத்தலையும்; ஏற்படுத்தவில்லை. மாறாக இறைநம்பிக்கயாளனும்,நாத்திகனும் ஏற்றுக்கொள்ளும் விதமான உயர்ந்த தார்மீக விழுமியங்களை மனிதகுலத்திற்கு வழங்கியது மாத்திரமின்றி அடிப்படையான சிறந்த நாகரீகங்களுக்கான அடித்தளத்தையும் இட்டது. அதாவது இந்தப் பூமியில் காணப்படும் நலன்கள் அனைத்தும் நுபுவ்வத்தின் விளைவுகளே என்று குறிப்பிட முடியும். மார்க்கம் (மதமானது) நீதிமன்றங்களை ஆயிரக்கணக்கான வழக்குகளிலிருந்து விடுவித்துள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக மதம் பூமியில் மனித இருப்பின் இலக்கைக் கருத்திற்கொண்டு அறிவு, மற்றும் நடத்தை சார்; அடிப்படையை உருவாக்கியது. ஏகத்துவ சட்டங்களை ஏற்றுக்கொண்ட நாடுகள் கலாச்சார பன்முகத்தன்மையைக் கொண்டுள்ளன. அவை இக்கொள்கைக்கு முரணானோரை பாதுகாத்து, ஏகத்துவச் சட்டங்களின் கீழ் அவர்களின் உரிமைகளைப்பெற்று வாழ்வதற்கான ஒரு கூறையாகவும் அவைகள் திகழ்கின்றன.அதே வேளை ஒரு நூற்றாண்டு; இந்த நாத்திகவாதம் இந்நாடுகளுடன் சேர்ந்திருந்தால் மனித குலமே அழிவின் விழிம்பை நோக்கிச் சென்றிருக்கும். இவ்வாறான நிலையில் இருக்கும் நாத்திகக்

கோட்பாடானது மதம்; மக்களுக்கு ஆபத்தானது என்று கூறுவது எவ்வளவு அபத்தமான விடயம் ! நாத்தி;கத்தைவிடவும் மிகவும் அபாயகரமான எந்த கோட்பாட்டையும் மனித வரலாறு சந்திக்கவில்லை காரணம் நாத்திகம் இவ்வுலகில் மனித அழிவிற்கு பின்வரும் நிகழ்வுகள் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. முன்னாள் சோவியத் யூனியனில் நாத்திகவாதியான லெனினினால் ‘கோலேஜ்’ என்ற இடத்தில் படுகொலைகள்,மேலும் நாசிச ஜெர்மனியில் சிறுபான்மை இனத்தவர்களை அழித்தது மற்றும் நாத்திகர் போல் பாட் கம்போடியாவின் மக்கள்தொகையில் கால் பகுதியினரை காலி செய்தது மேலும் நாத்திகர் மா சேதுங்கின் மாபெரும் கலாச்சாரப் புரட்சியில் 52 மில்லியன் சீனர்கள் கொல்லப்பட்டமை, ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற இராணுவ தீவிரவாத நாத்திகர்களின் ஒன்றியத்தினால் அதிகார பூர்வமாக 42 ஆயிரம் மத நிறுவனங்கள் தேவாலயங்கள் மற்றும் மசூதிகள் மூடப்பட்டு பல்லாயிரக்கணக்கான மதவாதிகள் கொல்லப்பட்டமை நாத்திகக்கொள்கையின் கோர விளைவுகளாக அடையாளப்படுத்திட முடிகிறது. (35)இவைகளுடன் முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் நாத்திக வாதத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. அதாவது மனித இனங்கள் குறித்த நாத்திக கோட்பாடுகளாலும்; மற்றும் இனத் தூய்மைக்காக உழைத்தல் எனும் கருத்துக்கள் ஆளப்பட்டது. இதன் விளைவாக உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 5வீதத்தினர் போரால் அழிக்கப்பட்டனர் இப்போரில் வெற்றி யாளர்கள்தோற்கடிக்கப்பட்டோர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் நூற்றாண்டின் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் பின்னோக்கி நகர்த்தியது. இந்த அவலத்தை சித்தரிக்கும் விதமாக நாகரீகத்தின் முடிவைப் பிரதிபளிக்கும் வண்ணம் ஒரு சிறுநீர் கழிப்பிடத்தை தத்துவவாதிகள் பாரிஸின் மையத்தில் வைத்தனர் மேலும் நாத்திகப் போர்கள் முழு மனித இனத்தையும் பலமுறை அழிக்கப் போதுமான அணு ஆயுதங்களின் ஆலைகளை விட்டுச் சென்றுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த போர்கள் பற்றிய எளிய வாசிப்பு நாத்திகம் எவ்வளவு துயரம் நிறைந்தது என்பதைப் படம் போட்டுக்காட்டுகிறது. அத்துடன் எதிர்காலத்தில் நிகழும்

எந்தப் போரினாலும் சரி மனித இனம் அழிந்து போக வேண்டும் என்ற கருத்தையே நாத்திகம் விட்டுச் சென்றுள்ளது.இதுவே இவ்வுலகத்திற்கும் மக்களுக்கும் நடக்க வேண்டும் என நாத்திகம் எதிர்பார்க்கும் முடிவாகும்!?

## 32-மேற்குலகம் மிகவும் முன்னேறியிருக்கும் நிலையில் ஓரிறைக் கொள்கையை கொண்டிருக்கும் முஸ்லிமகள்; பின்தங்கிப் போனதேன்?

பதில்: இதுவா நாகரீகத்தின் கேள்வி!

இந்தக் கேள்வியை எதிர்கொள்வதில் நபிமார்களான தீர்க்கதரிசிகள் எவ்வளவு சாவால்களை –கஷ்டங்களை- எதிர்கொண்டனர் இதன் காரணமாக அவர்களை பின்பற்றியவர்கள் எத்தனை நபர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்?

நாகரீகத்தின் கேள்வி, காலங்காலமாக சமூகங்களின் இறை நிராகரிப்பிற்கு அடிப்படையாக இருந்து வந்துள்ளது.

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறினான் (எமது வசனங்கள் அவர்களிடம் தெளிவாக ஓதிக் காண்பிக்கப்பட்டால்,நிராகரித்தோர் இறை நம்பிக்கை கொண்டோரிடம் நம் இரு பிரிவினரில் யார் நல்ல நிலையில் உள்ளவர்கள்,யாருடைய அவைகள் மிககம்பீரமாக இருக்கின்றன என்பதைக் காட்டுங்கள் என்று கூறுவார்கள்) (73) ஸூறது மர்யம். மார்க்கத்தின் உண்மைத்தன்மையை தெளிவுபடுத்தும் சான்றாதாரங்ளையும் அடிப்படைகளையும் காட்டக்ககூடிய திருவசனங்கள் காபிர்களிடம்; ஓதிக்காண்பிக்கப்பட்டால் அவர்கள் தாங்கள் இறை நிராகரித்த சமூகத்தவரின் முன்னேற்றத்தை ஆதாரமாக காட்டுகின்றனர். (நம் இரு பிரிவினரில் யார் நல்ல நிலையில் உள்ளவர்கள்,யாருடைய அவைகள் மிக கம்பீரமாக இருக்கின்றன)

ஆய்வாளர் இப்ராஹிம் அல்-ஸக்ரான் - அல்லாஹ்; அவரைப் பாதுகாபபானாக – பின்வரும் கருத்தை கூறுகிறார்: 'இது (நபித்துவம்;)ஒரு வரலாற்று விதி மேலும் தொடர்ந்து வரும் ஒரு பிரபஞ்ச வழிமுறை. இதன் மிகப்பழமை வாய்ந்த வைப்பகக் காட்சியை சிந்திப்பதில் அதன் அதிசயம் தீர்ந்து விடுவதில்லை. நுபுவ்வத்தின் (நபித்துவத்தின்) துவக்கத்திலிருந்து அல்லாஹ்விடமிருந்து அவனது கட்டளைகளை எத்திவைத்தவர்கள் முதல் சமகால இஸ்லாமிய செயற்பாட்டில்; தற்சமயம் வரையில் செயற்படுவோர் யாவரும் தொடர்ந்தும் 'சடவாத சக்திகளை'அவர்களை மிஞ்சுமளவிற்கு எதிர்கொண்டுவருகின்றனர்.அந்த சக்திகள் நபிமார்கள் கொண்டுவந்த இறைச்செய்தியை மக்கள் பின்பற்றுவதில் பெரும் குழப்பத்தை விளைவிக்கின்றனர்.

தீர்க்கதரிசிகளின் அனுபவங்களைப் பாருங்கள், அவை அனைத்தும் 'இறைவெளிப்பாட்டின் பால் அழைப்பவருக்கும் 'சடவாத சக்தி ' என்ற பிரச்சினைக்கு மத்தியில் நின்று உறுதியாக போராடியவர்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள். அத்துடன் சடவாத சக்தியால் கவரப்பட்ட மக்கள் அவர்களின் மூளை தளர்வுட்டிருப்பதால் வேதவெளிப்பாட்டின் கட்டளைகளுக்கு அடிபணிவதை விட்டும் அவர்களை வேறு திசைக்கு திருப்பிவிடுகிறது.மார்க்க செயற்பாடுகளில் ஈடுபடுவோர் சடவாத தோற்றப்பாடுகளினால் கவரப்பட்ட மக்களால் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள்.முதல் இறைதூதரான நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சமூகம் பௌதீகரீதியான ஒரு நிலைப்பாட்டை அவர்களிடம் வெளிப்படுத்தியது. உன்னை எம்மில் இழிவானவர்கள் தவிர வேறு எவறும் பின்பற்றுவதை நாம் காணவில்லை.)(27) அத்தியாயம் ஹூத் அல்லாஹ்வின் தீர்க்கதரிசி, மோசே தூதராக வந்த போது கொடுங்கோன்மை மற்றும் சிவில் அதிகார ஆணவத்தின் நீட்சியானது இறைவெளிப்பாட்டிற்கு முன் மீண்டும் மீண்டும் வெளிப்படளானது. (இன்னும், எங்கள் இரட்சகனே" நிச்சயமாக நீ ஃபிர் அவ்னுக்கும், அவனுடைய பிரதானிகளுக்கும் அலங்காரத்தையும், இவ்வுலக வாழ்க்கைக்குரிய செல்வங்களையும்

கொடுத்திருக்கிறாய், ஆகவே, எங்கள் இரட்சகனே! அவர்கள் உன்னுடைய பாதையிலிருந்து மற்றவர்களை வழி கெடுத்து விடுவதற்காக (சோதனையாக நீ கொடுத்திருக்கிறாய்!) எங்கள் இரட்சகனே! அவர்களின் செல்வங்களை அழித்து, அவர்களுடைய இதயங்களையும் கடினமாக்கி விடுவாயாக! ஆகவே, துன்புறுத்தும் வேதனையை அவர்கள் காணும் வரையில் அவர்கள் விசுவாசங் கொள்ள மாட்டார்கள்" என்று மூஸா பிரார்த்தித்துக் கூறினார்.)88 ஸூறா யூனுஸ் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இது ஒரு புதிய விடயமாக இருக்கவில்லை. அவர்களுடைய நபித்துவத்தையும் அவர்களுடன் இருந்த வேத வெளிப்பாட்டையும் மறுத்தவர்கள், தம்மிடம் காணப்பட்ட பௌதீக ரீதியான வளப்பற்றாக்குறை காரணமாக நபியவர்களை புறக்கணித்தவர்கள் தமது கொள்கையில் உறுதியாக இருந்தனர். (மக்கா தாயிப் ஆகிய)இரு ஊர்களில் உள்ள எவறேனும் ஒரு பெரிய மனிதர் மீது இக்குர்ஆன் இறக்கப்பட்டிருக்கக் கூடாதா?என அவர்கள் கேட்கின்றனர்.) (அவ்வாறாயின் நாங்கள் அதை நம்பிக்கை கொண்டிருப்போம்) என்றும் கூறுகின்றனர்).(31) அத்தியாயம்: அஸ்ஸுஹ்ருப் (அலங்காரம்)

இப்ராஹீம் அஸ்ஸக்ரானின் கூற்று முற்றுப்பெறுகிறது

நபித்துவ வரலாறு முழுவதும் மனித குலமானது சடத்துவத்தின் மீதான மோகத்தை விட வேறு எந்த சோதனையினாலும் சோதிக்கப்படவில்லை
என்றாலும். முன்னேற்றத்திற்கும் உண்மைக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை

பௌதீக ரீதியான முன்னேற்றம் மற்றும் பின்னடைவு என்பது எவரிடம் சத்தியம் அல்லது அசத்தியம் உள்ளது என்பதற்கும் எந்த தொடர்பும் இல்லை

ஒரு மனிதன் சிறந்தவனாகவும் நல்லவனாகவும் இருப்பதற்கு அவன் முன்னேற்றம் அடைந்த நாகரீகமடைந்தவனாக இருக்க வேண்டிய தேவை கிடையாது.

இஸ்லாமிய கோட்பாடுகளை பின்பற்றி ஒழுகும் ஒரு மனிதன் அவன் சாமான்ய ஏழையாகவும் இருக்கலாம் அல்லது மிகவும் வசதி படைத்தவனாகவும் இருக்கலாம்

நாகரீகத்தில் உச்சத்தை அடைந்த எத்தனையோ சமூகங்கள் அல்லாஹ்வின் சட்டதிட்டங்கள்,மார்க்கம் மற்றும் அவனின் வேதவெளிப்பாடு ஆகியவற்றிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. (அவர்கள் பூமியில் பயணித்து தமக்கு முன்பிருந்தவர்களின் இறுதி முடிவு என்னவாயிற்று என்பதைப் பார்க்க வேண்டாமா? அவர்கள் இவர்களை விட மிகப்பலமிக்கவர்களாக இருந்தனர். மேலும் அவர்கள் பூமியைப் பண்படுத்தி இவர்கள் அதனை பராமரித்ததை விட அதிகமாகப் பராமரித்தனர்)(9) ஸூறதுர் ரூம் (99) ஆகவே சடரீதியான முன்னேற்றம் மற்றும் பௌதீக வளம் போன்றன ஒருவரது மார்க்கத்தை அளக்கும் அளவுகோளாக கொள்ளப்படுவதில்லை என்பதைக் கருத்திற் கொள்ளவும் ஆகவே, அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளுடன் வந்த போது, அவர்கள் தங்களிடமிருந்த கல்வியைக் கொண்டு பெரும் மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள், எனினும், அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்ததுவே அவர்களை சூழ்ந்து கொண்டது. ஸூறது ஃஹாபிர் (மன்னிப்பவன்)

எனவே, பௌதீக முன்னேற்றம் மாத்திரம் முழுமையாக வரவேற்கத்தக்க ஒன்றல்ல. அதே போல் கண்டிக்கத்தக்க விடயமுமல்ல. மாறாக, இந்த பௌதீகரீதியான முன்னேற்றத்தை தெய்வீக வெளிப்பாட்டை மதித்து மார்க்கத்தை நடைமுறைப்படுத்தி அல்லாஹ்வின் திருமுகம் நாடி மக்களின் நலனுக்காகவும் அவர்களின் நிலைமைகளை

சீர்படுத்துவதற்காகவும் எந்த அளவிற்கு பயன்படுத்துகிறீரோ அதன் அளவிற்கே வரவேற்கப்படுமே தவிர இல்லாவிட்டால் அது கண்டனத்துக்குரியதாக அமைந்து விடும்.

இம்மாதிரியான முன்னேற்றமே வேண்டப்படுவதாகும்.

மனிதர்களுக்கிடையேயான உண்மையான வேறுபாட்டிற்கான அளவுகோள் அவர்கள் அடைந்துள்ள பௌதீகரீதியிலான முன்னேற்றத்தில் கிடையாது. மாறாக அவர்களின்; இறையச்சம் மற்றும் செய்யும் நற்காரியம் ஆகியவையே வேறுபாட்டிற்கான அளவு கோளாக கொள்ளப்படும். மேலும் பௌதீக முன்னேற்றம் ஒரு சாதனமே தவிர அது இலக்காக கொள்ளப்படுவதில்லை. அல்லாஹ்வுக்காக மனிதர்களுக்கு பயனளித்து சேவை செய்வதற்கான ஒரு சாதனமாகவே பௌதீக முன்னேற்றம் கருதப்படுகிறது.

இறை வெளிப்பாட்டினால் நற்சான்று வழங்கப்பட்ட – அங்கீகரிக்கப்பட்டதாக பௌதீக முன்னேற்ற இருக்க முடியும். அதுவே வேண்டப்பட்ட முன்னேற்றமாகும

உண்மையான பௌதீக முன்னேற்றம் என்பது இப்புவியில் உண்மையான இறை பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்துவதிலேதான் தங்கியுள்து.அதாவது அல்லாஹ்வுக்கு முழுமையான அடிமைத்துவத்தை நிரூபித்து அவனுக்குக் கட்டுப்படுதல் மேலும் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இறைவிசுவசம் எனும் நற்சான்றினை பயன்படுத்துதல் போன்ற வற்றிலேதான் தங்கியுள்ளது. அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறான். இவர்கள் எத்தகையோர் என்றால், நாம் அவர்களுக்குப் பூமியில் வசதியளித்தால் தொழுகையைக் கடைப்பிடித்துத் தொழுவார்கள்; ஜகாத்தும் கொடுப்பார்கள்; நன்மையானவற்றை ஏவி, பாவமானவற்றைத் தடை செய்வார்கள். எல்லாக்

காரியங்களின் முடிவும் அல்லாஹ்விடமே இருக்கிறது. ஸூறதுல் ஹஜ் : ஒரு முஸ்லிம் தம்மீது கடமையானதை செய்தால் அல்லாஹ் இவ்வுலகில் மகிழ்ச்சிக்கும் நன்மைக்கும் முன்னேற்றத்திற்குமான அனைத்து வழிகளையும் இலகுபடுத்திக்கொடுத்துவிடுவான்.மேலும் மறுமையில் அவனின் அந்தஸ்த்தை உயர்த்தி அவனை வெற்றிபெறச்செய்வான் என்பதை அறிந்து கொள்வீராக. (உங்களில் எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) - நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரைப் பூமிக்கு) ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும், இன்னும் இவர்களுக்காக அவன் பொருந்திக் கொண்ட இவர்களின் மார்க்கத்தை உறுதிப்படுத்துவதாகவும் இவர்களுடைய அச்சத்தின் பின் பாதுகாப்பை ஏற்படுத்துவதாகவும் அல்லாஹ் வாக்களிக்கின்றான்.'அவர்கள் என்னோடு (எதையும், எவரையும்) இணைவைக்காது, என்னையே வணங்குவார்கள்;' இதன் பின்னர் (உங்களில்) எவர் மாறு செய்(து நிராகரிக்)கிறாரோ அவர்கள் பாவிகள்தாம்.) (55) ஸூறதுன் நூர் (ஒளி)

முஸ்லிம்கள் தங்களது மார்க்கத்தை வாழ்வில் நடைமுறைப்படுத்தியபோது அவர்கள் மார்க்கத்திலும் உலகிலும் முன்மாதிரிமிக்க தலைவர்களாக மாறினார்கள்.

இஸ்லாம் அவர்களின் மூலம்; 1200 ஆண்டுகள் மேல் நீடித்த ஒரு நாகரீகத்தை உலகிற்கு வழங்கியது. இக்காலப்பகுதியில் எந்த சிக்கலுமின்றி நீடித்த மிக நீண்ட நாகரீகமாக இது கருதப்படுகிறது.

எனவே இஸ்லாம் இஸ்லாமிய நாகரிகத்தின் பிறப்பிடமாகும்.

இந்த மார்க்கத்தின் மூலம் மாத்திரமே உருவான ஒரு நாகரீகம் இதுவாகும்.

ஏனைய மதங்கள் வேறு சில நாகரீகங்களை அரவணைத்துக்கொண்டன.

(தழுவிக்கொண்டன)

மேற்கத்திய நாகரீகம் கிறிஸ்துவ மதத்தையும், இந்திய நாகரீகம் இந்து மதத்தையும் தழுவிக்கொண்டதை நீங்கள் காண்கிறீர்கள்.

அந்த வகையில் நாகரீகத்தை உருவாக்கிய ஒரே மார்க்கம் இஸ்லாம் ஒன்று மாத்திரமே!

தங்களது மார்க்கம் குறித்த கடமைகளை முஸ்லிம்கள் அறிந்து செயற்பட்டபோது அவர்கள் இவ்வுலகை ஆன்மீக ரீதியாகவும் சடரீதியாகவும் வழிநடாத்தினார்கள்.

கி.பி 1453 இல் இஸ்லாம் கான்ஸ்டான்டினோப்பிலுக்குள் நுழைந்தபோது, ஐரோப்பாவின் இருண்ட யுகம் முடிவுக்கு வந்தது.

இஸ்லாம் ஐரோப்பாவில் நுழைந்த அதே ஆண்டில்தான் அதாவது 1453 ஆண்டுதான் ஐரோப்பாவின் இருண்ட யுகம் முடிவுக்கு வந்த தினமாகும்

ஐரோப்பாவில் இஸ்லாம் நுழைந்ததும் அறிவொளி பிரகாசித்தது.

அமெரிக்காவில் உள்ள கோங்கிரஸ் நூலகத்தில், மேற்கத்திய நாகரீகத்தின் முன்னேற்றத்தின் ஆதாரங்களைக் குறிக்கும் வகையில் நூலகத்தின் பிரதான மண்டபத்தின் மேல் தளத்தில் ஏழு வட்டங்கள் பொறிக்கப்பட்டுள்ளன, அந்த வட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே மதம் இஸ்லாம் ஆகும்.

அங்கு குறிப்பிடப்பட்டுள்ள மார்க்கமான இஸ்லாம் மாத்திரமே இயற்கை விஞ்ஞானத்தைப்பற்றி கவனம் செலுத்துகிறது.

ISLAM: PHYSICS

அதே வேளை ஏனைய வட்டங்களில் சில நாடுகளின் பெயர்களும் அந்த நாடுகளின் மொழி கலை இலக்கிய ரீதியில் புரிந்த -சாதனைகளும் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்லாம் உலகிற்கு அறிவியலை வழங்கியதுயது. இதன் விளைவாக 700 வருடங்களாக உலகில் அறிவியலுக்கான சர்வதேச மொழியாக அரபு மொழியே திகழ்ந்தது. (36)

எனவே முஸ்லிம் தங்கள் மார்க்கத்தை சீர்ப்படுத்திக்கொண்டால் அவர்களின் உலக விவகாரங்கள் சீர்பெற்று விடும்.

## 33-அல்லாஹ்வை வணங்குவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன?

பதில்: ஒரு மனிதன் தனது உள்ளுணர்வின் மூலம் மாத்திரம் தன்னை அறிய முடியாது. அதேபோன்று ஆன்மா அமைதியடைவதும் உள்ளத்தின் தனிமை உணர்வு நீங்கிவிடுவதும் அல்லாஹ்வை வணங்குதன் மூலம் மாத்திரமே ஏற்படுகிறது. (நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வை நினைவு கூறுவதன் மூலம் அமைதி பெறுகின்றன.அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வை நினைவு கூறுவதன் மூலமே உள்ளங்கள் அமைதிபெறுகின்றன) (28) அத்தியாயம்: அர்ரஃது (இடி) வணக்கத்தின் மூலம் உள்ளம் அமைதி பெறுகிறது. (நபியே! உம்மைப் பற்றி) அவர்கள் (கேவலமாகக்) கூறுபவை உமது உள்ளத்தை நெருக்குகிறது என்பதை நிச்சயமாக நாம் அறிவோம். (அதை நீர் ஒரு சிறிதும் பொருட்படுத்தாதீர்.)(97) நீர் உமது இறைவனைத் துதி செய்து புகழ்ந்து அவனுக்குச் சிரம் பணிந்து வணங்குவீராக;)98) உமது இரட்சகனை வணங்குவீராக) அத்தியாயம் அல்ஹிஜ்ர் (ஸமூத் கூட்டத்தாரின் வசிப்பிடம்)

உனது இரட்சகனை வணங்கு அதனால் உனது உள்ளம் ஆறுதல் பெறும்;

எனவே, இறையச்சமும், இறை சிந்தனையுடன் கூடிய இரண்டு ரக்அத்துகள், உள்ளத்தை வளப்படுத்தக் கூடிய பல மணி நேர உளவியல் அமர்வுகள் செய்யாததை மனித ஆன்மாவில் செய்து விடுகின்றது.

ஆக -இபாதத் -வணக்கத்தில் மனித ஆன்மாவுக்கான நிம்மதி உள்ளடங்கியுள்ளது. அல்லாஹ்வை நினைவு கூறுவதைவிட்டு விலகி இருக்கும் ஒவ்வொருவரின் உள்ளமும் ஒருவகை மன நெருக்கடிக்குள் உட்படும். அது மாத்திரமல்லாது எப்போதும் உலகம் பற்றியே ஏங்கிக்கொண்டிருப்பான் அவன் மனநிம்மதியையோ திருப்தியையோ கண்டுகொள்ள கொள்ளமாட்டான். (எவன் என் உபதேசத்தைப் புறக்கணிக்கின்றானோ நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியன வாழ்வு உண்டு) (124) அத்தியாயம் தாஹா

மனிதன் எவ்வளவு வாழ்க்கை வசதிகளுடன் இருந்தாலும் அவனிடம் இறைவிசுவாசம் இல்லையென்றிருந்தால் அவன் உள நெருக்கடிக்குள்ளும் ,தான் அறியாத ஒருவரை முந்தி விட வேண்டும் எனும் போட்டாபோட்டிக்குள்ளும் ஆட்பட்டவனாகவே வாழ்வான். இதனால் இவ்வாறானோர் எப்போதும் கலக்கத்தில இருப்பதை கண்டு கொள்வீர்
நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் (யாருடைய எண்ணம், உலகத்தை நோக்காக் கொண்டிருக்கிறதோ அவருடைய கண் முன் அல்லாஹ் ஏழ்மையை கொண்டு வருவான். அவருடைய காரியங்களை சிதறடித்து விடுவான் உலகத்தில் அவருக்கு விதிக்கப்பட்டது மாத்திரமே அவருக்குக் கிடைக்கும்;. யாருடைய எண்ணம் மறுமையை நோக்கி இருக்கிறதோ அவருடைய உள்ளத்தில் அல்லாஹ் போதுமென்ற நிலையை உருவாக்கிவிடுவான். அவருடைய காரியங்களை ஒன்று சேர்த்துவிடுவான் உலகம் அவரின்

காலடியில் சரணடைந்து விடும்.) (37)

வணக்கமானது மனிதனை உலகிற்கு சரணடைவதை விட்டு பாதுகாத்து அவனை சுதந்திர மனிதனாக மாற்றிவிடுகிறது.

இதனாலேதான் அல்லாஹ்வை உண்மையான முறையில் வணங்கும் முஸ்லிம் வாழ்வின் அர்த்தத்தையும் உலகின் பெறுமானம் குறித்தும் இவ்வுலக இருப்பின் இலக்கை பற்றியும் நன்கு புரிந்து கொண்டவன். அத்துடன் இவ்வுலகிற்கு தான் பரீட்சிக்கப்படுவதற்கும் தனது இரட்சகனை உண்மையான முறையில் அறிந்து வணங்கவும் வந்திருப்பதை நன்கு தெரிந்து கொண்டவன். மாறாக எவ்வித பயனுமின்றி கலக்கத்துடன் துன்பத்துடன் வாழ வரவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டவன். இதனை பின்வரும் அல்குர்ஆன் வசனம் குறிப்பிடுகிறது. உங்களில் மிகத்தூய்மையான அமல் செய்பவர்கள் யார் என்று சோதிப்பதற்காகவே, அவன் மரணத்தையும், வாழ்க்கையையும் படைத்திருக்கிறான்(அவன் (அனைவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்புடையவன் ஆவான்). அத்தியாயம்: அல் முல்க் (ஆட்சி)

### 34- அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதலின் வெளிப்பாடுகள் எவை? இன்னொரு வகையில் கூறினால் நீ அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்ட முஸ்லிம் என்பதை அறிந்து கொள்வது எப்படி?

அல்லாஹ்வுக்கு கட்டுபட்டிருப்பதற்கான அடையாளங்கள் நான்காகும் அவைகள் பின்வருமாறு :

முதாலாவது : உனது வாழ்வின் சிறிய பெரிய காரியங்கள் அனைத்திலும் அல்லாஹ்வுக்கு அடிமைப்பட்டிருப்பது (கட்டுப்படுவது) (எனது தொழுகை, எனது வணக்க வழிபாடுகள், எனது வாழ்வு,எனது மரணம் ஆகியவை அகிலத்தாரின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியது

என நபியே நீர் கூறுவீராக) (162) அவனுக்கு எவ்வித இணையுமில்லை. இதனைக்கொண்டே நாம் ஏவப்பட்டுள்ளேன்.நான் கட்டுப்பட்டோரில் முதன்மையானவன் ஆவேன்) (163) ஸூறதுல் அன்ஆம்

' எனது தொழுகை, எனது வணக்க வழிபாடுகள்,எனது வாழ்வு, எனது மரணம் ஆகியவை அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரியது' என்ற திருவசனத்தின் கருத்தாவது; அனைத்து விடயங்களையும் அல்லாஹுவுக்காகவே புரிகிறேன் என்பதாகும்.அதாவது நான் தொழுவதும் எனது பெற்றோருக்கு அடிபணிந்து நடப்பதும்,மக்கள் பயனடைவதற்காக நான் கற்பதும், மறுதினம் எனது இரட்சகனின் கட்டளைகளை ஏற்று நடப்பதற்கான சக்தியை பெற்றுக்கொள்வதற்காக தூங்குவதையும் அல்லாஹ்வுக்காகவே செய்கிறேன்.

இதுவே எல்லாக்காரியங்களிலும் அல்லாஹ்விற்கு அடிமைத்தனத்தை நிரூபிப்பது என்பதாகும் .அத்துடன் இதுதான் அல்லாஹ்விற்கு கட்டுப்படுதலின் அடயாளங்களின் ஒன்றாகவும் முக்கிய வெளிப்பாடுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது

அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டிருப்பபதற்கான இரண்டாவது அடையாளம்: அல்லாஹ் ஏவியவற்றை பின்பற்றுவதும் தடைசெய்தவற்றைவிட்டும் விலகியிருப்பதும் ஆகும் . இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். (நம்பிக்கை கொண்டோரே நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனின் தூதருக்கும் கட்டுப்படுங்கள். நீங்கள் போதனையை செவியேற்றுக் கொண்டே அவரைப்புரக்கணிக்க வேண்டாம்) அத்தியாயம்: அன்பால்(போரில் கிடைத்த பொருட்கள்) மேலும் அழ்ழாஹ்கூறுகிறான்(நம்பிக்கை கொண்டோரே நீங்கள் இஸ்லாத்தினுள் முழுமையாக நுழைந்து விடுங்கள்) அத்தியாயம்:அல்பகரா (பசுமாடு)

பிஸ்ஸில்மி என்பது அறபு மொழியில் இஸ்லாத்தில் என்ற

கருத்தைக் குறிக்கும்.

(உத்குலூ பிஸ்ஸில்மி காப்பதன்) இஸ்லாத்தினுள் முழுமையாக நுழைந்து விடுங்கள் என்பது அல்லாஹ் கட்டளையிட்ட அனைத்தையும் மிக உறுதியோடு பின்பற்றுங்கள் அவன் தடுத்தவற்றை தவிர்ந்து கொள்ளுங்கள் என்ற கருத்தைக் குறிக்கிறது.

அல்லாஹ் ஒரு விடயத்தை செய்யுமாறு கட்டளையிடுகிறான் அதை நான் ஏற்று செய்வதும், செய்யக் கூடாது எனத் தடுத்துவிட்ட ஒன்றை நான் தவிர்ந்து வாழுவதும் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு முழுமையாக சரணடைதல் என்பதன் அர்த்தமாகும்.

அல்லாஹ்வுக்கு கட்டுபடுதலின் மூன்றாம் அடையாளம் : அல்லாஹ் கடமையாக்கிய சட்டதிட்டங்களை தீர்ப்பளிப்பதற்கான அளவுகோளாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகவே அவனின் சட்டதிட்டங்களை மனத்திருப்தியுடன் ஏற்றுக் கொள்கிறோம்.

இறைசட்டங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வோம். உதாரணத்திற்கு அல்லாஹ் விதித்துள்ள தண்டனை தொடர்பான சட்டதிட்டங்களை மறுக்க மாட்டோம்;. மாறாக அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை திருப்தியோடு ஏற்று நடப்போம். காரணம் அல்லாஹ் தனது அடியார்களை சீர்திருத்தும் விடயங்களை அறிந்துள்ளதுடன் தண்டனைகள் சமூகத்தை தூய்மைப்படுதும் என்பதையும் நன்கறிந்துள்ளான்.(படைத்தவன் தனது படைப்பைப்பற்றி அறியமாட்டானா? அவன் நுட்பமானவன் நன்கறிந்தவன்) (14) ஸூறதுல் முல்க்.

மேலும் அல்லாஹ் கூறுகிறான் : ( அல்லாஹ்வை விட அழகிய முறையில் தீர்ப்புக்கூறுபவன் யார் இருக்கிறான்.) அத்தியாயம்: அல்மாஇதா

( உணவுத் தட்டு )

எனவே அல்லாஹ்தான் இவ்வுலகிலும் மறுஉலகிலும் மனிதனை சீர்படுத்தும் விடயங்களை அறிவான்.

அல்லாஹ்வின் சட்டத்தை அமுல்படுத்துவதானது மனிதர்களை தூய்மைப்படுத்தி அவர்களை பாதுகாப்பாக வாழ வைக்கிறது

அல்லாஹ்வையும் அவனது தூதரான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறக்கியருளப்பட்டவைகளையும் விசுவாசித்தவர் எனக் கூறிக் கொள்ளும் ஒரு மனிதர் ஒரு பிரச்சினை தொடர்பாக நபியவர்கள் தான் விரும்பாத ஒரு தீர்ப்பபை கூறிவிடுவார் எனப்பபயந்து நபியவர்களிடம் தீர்ப்புக் கோரி செல்லாது தான் எதிர்பார்க்கும் ஒரு தீர்ப்பை யூதரான கஃப் இப்னுல் அஷ்ரபிடம் பெற்றுக்கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பில் அவரிடம் சென்றார் அவ்வேளை பின்வரும் அல்குர்ஆன் வசனம் அவரைக் கண்டித்து இறங்கியது (நபியே!) உம் மீது இறக்கப்பட்ட (இவ்வேதத்)தையும், உமக்கு முன்னர் இறக்கப்பட்டுள்ள (வேதங்கள் யா)வற்றையும் நிச்சயமாகத் தாங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக எவர்கள் சாதிக்கின்றனரோ அவர்களை நீர் பார்க்கவில்லையா? புறக்கணிக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்ட ஒரு விஷமியையே அவர்கள் (தங்களுக்குத்) தீர்ப்புக் கூறுபவனாக ஆக்கிக்கொள்ள விரும்புகின்றனர். (விஷமியாகிய) அந்த ஷைத்தானோ அவர்களை வெகு தூரமான வழிகேட்டில் செலுத்தவே விரும்புகிறான். அத்தியாயம் : அந்நிஸா (பெண்கள்) 160.

நீ இஸ்லாத்தை கொள்கையாக ஏற்றுக்கொண்ட ஒரு முஸ்லிமாக இருந்தால் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு அவனின் சட்டதிட்டங்களை பின்பற்றி ஒழுகுவது கட்டாயக் கடமையாகும். அவ்விறைத்தீர்ப்புகள் உனது விருப்பத்திற்கு மாற்றமாக இருந்தாலும் அதனை ஏற்று நடக்க வேண்டும்

மாறாக உனது ஒரு பிரச்சினைக்கு திருப்திகரமான ஒரு தீர்ப்பை பெற இறை சட்டத்தை விட்டு விட்டு ஒரு யூதனிடம் செல்வது தடுக்கப்பட்ட விடயமாகும்

அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்:
[அல்லாஹ்வின் உத்தரவுப் படி மக்கள்) கட்டுப்பட வேண்டும் என்பதற்காகவே தவிர எந்தத் தூதரையும் நாம் அனுப்பவில்லை) அத்தியாயம்: அந்நிஸா நபிமார்கள் கொண்டு வந்த சட்டதிட்டங்களை கைவிட்டு மற்றவர்களிடம் தீர்ப்புக் கோருவதற்காக தூதர்கள் அனுப்பவில்லை.

மேற்படி சம்பவம் அது போன்றவைகளில் பெறும் பாடத்தை அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கு அடிபணிவதன் அவசியத்தைக் காட்டும் மிக முக்கியமான வசனத்தை மேற்கோள்காட்டி முடிக்கிறான். அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் "உமதிரட்சகன் மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில் உம்மை நீதிபதியாக நியமித்து நீர் செய்யும் தீர்ப்பை தங்கள் மனதில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலுமாக ஏற்காதவரை அவர்கள் (உண்மை) நம்பிக்கையாளர்களாக ஆகமாட்டார்கள்". ஸூறதுன் நிஸா (65) அல்லாஹ் வகுத்த சடட்திட்டங்களுக்கு முழுமையாக கட்டுப்படுவது அவசியமாகும். எனவே அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவது இஸ்லாத்திற்கு கீழ்பணிந்து நடப்பதற்கான அடையாளமாகும்.!

நான்காவது அடையாளம் : அல்லாஹ்வின் விதிகளுக்கு கட்டுப்படுவதாகும்.அல்லாஹ் அவனின் நுட்பத்தின் மூலம் விதித்தவை அனைத்து விடயங்களுக்கும் கட்டுப்படுவதாகும்.அத்துடன் முஸ்லிம் என்பவர் நன்மையான காரியங்களிலும் தீய காரியங்களிலும் இறை விதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதாகும்

முஸ்லிமுக்கு ஒரு மகிழ்ச்சியான விடயமொன்று ஏற்பட்டால்

அவன் அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவான் தீங்கு ஏற்பட்டால் அதற்காக பொறுமைகாப்பான்.

அல்லாஹ் உனக்கு உணவளித்து சிறந்த வாழ்வாதாரத்தையும் அழகான ஒருவீட்டையும் கல்வியில் வெற்றியையும் உடலில் ஆரோக்கியத்தையும் நல்ல குடும்பத்தையும் உனக்கு அளித்திருந்தால் நீ அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

முஸ்லிமுக்கு ஏதாவது ஒரு நோய் அல்லது வறுமை அல்லது பயம் அல்லது பெரும் சோதனை அல்லது துன்பம் ஏற்பட்டால் ஏற்பட்ட அந்த இடரை-சோதனையை பொறுத்துக்கொள்வதோடு அல்லாஹ்விடம் அத்துன்பத்திலிருந்து விடுபட உதவி கோருவான். இதுவே அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு வாழும் முஸ்லிமின் நிலையாகும்

அனைத்து விடயங்களும் இறைவிதியின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது.அதாவது ஆரோக்கியம் நோய் செல்வம் வறுமை போன்றன அனைத்தும் அவனின் ஞானம் மற்றும் விதி ஆகியவற்றின் அடிப்படையில் அமையப்பெற்றுள்ளன. அல்லாஹ் விதிகளை விதித்தவன் என்ற வகையில் ஒரு முஸ்லிம் விதிகளை முழுமையாக ஏற்றுக்கொள்வது அவசியமாகும்.

எங்கள் இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் . ( நிச்சயமாக நாம் எல்லாவற்றையும் குறிப்பிட்ட விதிமுறையின் படியே படைத்துள்ளோம்)?49 அத்தியாயம்: அல் கமர் (சந்திரன்) மேலும் அல்லாஹ் கூறுகிறான் அல்லாஹ் எமக்கு விதித்ததை தவிர வேறு எதுவும் எம்மைப் பீடிக்காது)(51) அத்தியாயம்: அத்தவ்பா (பாவ மன்னிப்பு)

அல்லாஹ் எதனை எம்மீது விதித்துள்ளானோ அதுவே நிச்சயம் நடைபெறும்.

மேலும் அல்லாஹ் குறிப்பிடுகிறான் (அல்லாஹ்வின் உத்தரவுப் பிரகாரம் நேரம் குறிக்கப்பட்ட விதியின் படியேயன்றி எந்தவோர் ஆன்மாவுக்கும் மரணிக்க முடியாது)(145) ஸூறா ஆலி இம்ரான்

ஆயுல்களை அல்லாஹ்வே நிர்ணயித்துள்ளான்.

பிரபஞ்சத்தில் நடக்கும் அனைத்தும், உலகில் அசையும் ஒவ்வொரு அணுவும், நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் அல்லாஹ்வின் அறிவு, நாட்டம், விதி, ஞானம் மற்றும் அவனின் வல்லமையினால் இடம்பெறுகிறது.
எங்கள் இரட்சகனான அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.(அவனே அனைத்தையும் படைத்து அதனை முறைப்படி நிர்ணயித்தான்)(2) : அல் புர்கான் (பிரித்தறிவித்தல்)

அல்லாஹ் தூய்மையானவன் அனைத்தையும் படைத்து அதனை முறைப்படி நிர்ணயித்துள்ளான். எனவே அவன் நாடியது நடக்கும் நாடாதது நடை பெறமாட்டாது.

எனவே நான் முஸ்லிம் என்பதனால் அல்லாஹ்வின் விதிகளுக்கு கட்டுபட்டு நடக்குமாறு வேண்டடப்பட்டுள்ளேன்
இதன் மூலம் ஒரு மனிதன் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டவனாக மாறிவிடுகிறான்

## இறுதியாக! நான் இஸ்லாத்தில் நுழைவது எப்படி ?

இஸ்லாம் மனிதர்கள் அனைவரினதும் மார்க்கமாகும். இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான் (அல்லாஹ்விடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும் )(19) ஸூறா ஆலி இம்ரான் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் அல்லாஹ்

ஏற்றுக்கொள்வதில்லை (இஸ்லாமையன்றி (வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படவே மாட்டாது. மறுமையில் அவர் நஷ்டமடைந்தவராகவே இருப்பார்")(85) ஸூறா ஆலி இம்ரான்

எனவே, ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் இஸ்லாத்தை தழுவ வேண்டும்.

இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்று வாழ்வதில் நரகத்திலிருந்து பாதுகாப்பும் அல்லாஹ்வின் திருப்பொருத்தமும் சுவர்க்கமும் கிடைக்கும்

இஸ்லாத்தை ஏற்று வாழ்வது மிகப்பெரும் அருளாகும் மாறாக உனது இருப்பிற்கான மிக முக்கிய விடயமுமாகும்.

யதார்தத்தில் இஸ்லாம் என்பது இயல்பூக்கம் பகுத்தறிவு ஆகியவற்றை நோக்கிய மீள்வருகையாகும்.

இஸ்லாத்தில் நுழைவது என்பது மிக இலகுவான காரியமாகும் அதற்கென்று சடங்குகளோ,முறையான கொண்டாட்டங்களோ கிடையாது. அவ்வாறாயின் எப்படி இஸ்லாத்தில் நுழைவது? சாட்சி கூறும் இரண்டு வார்த்தைகளை நாவால் மொழிந்துவிடுவதுதான் அந்த வார்த்தை இதோ! " அல்லாஹ்வைத்தவிர உண்மையாக வணங்கத்தகுதியானவன் வேறு யாருமில்லை என சாட்சி கூறுகிறேன் முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் எனவும் சாட்சி கூறுகிறேன்"

இவ்வாறு ஒருவர் கூறிவிடுவதால் அவர் முஸ்லிமாக மாறிவிடுகிறார்.

பின்னர் அவர் இஸ்லாமிய கடமைகளை செயற்பாடுகளை செய்யத் துவங்கி விடுவார்.

இஸ்லாத்தை வாழ்கை நெறியாக ஏற்றுக்கொண்ட புதிய முஸ்லிம், இஸ்லாத்தை வாழ்கையில் நடை முறைப்படுத்துவது குறித்து தெரிந்துகொள்ள தங்களது மொழியில்; இஸ்லாம் பற்றிய விளக்கத்தை கொண்டுள்ள இஸ்லாம் ஹவுஸ் வெப்தளத்தை பார்வையிடுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

வெப்தள இணைப்பு : https://islamhouse.com/ar/

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. நாத்திகத்திலிருந்து இஸ்லாத்தை நோக்கி | 03 |
| 02. நாத்திகம் என்பதன் கருத்து யாது? | 12 |
| 03. நாத்திகத்தில் எதனை நீங்கள் குறைகூறுகிறீர்கள்? | 12 |
| 04. படைப்பாளன் உண்டு என்பதற்கான ஆதாரம் என்ன? படைத்தல் -உருவாக்குதல் என்பதன் அர்த்தம் என்ன ? | 14 |
| 05. செயல் திறன் மற்றும் அவதானம் என்பதற்கான ஆதாரத்தின் அர்த்தம் யாது? | 15 |
| 06. மனிதர்களும் மற்றும் பிற உயிரினங்களும்;; மிகவும் சாதாரனமான முன்னோடி உயிரினங்களிலிருந்து உருவாகாதது ஏன்? | 20 |
| 07. செயல் திறனுடன் செய்தல் மற்றும் கரிசனை என்பதற்கான எடுத்துக்காட்டுகள்; யாவை? | 22 |
| 08. சில நாத்திகர்கள் கரிசனை குறித்து குறிப்பிடப்படும் ஆதாரத்தை விமர்சித்து நோய்கள் மற்றும நிலஅதிர்வுகள் -நடுக்கம் - போன்ற நிலையற்ற விடயங்கள் காணப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.? | 31 |

| | | |
|---|---|---|
| 09. | பிரபஞ்சத்தை உருவாக்கிய ஒரு பௌதீக காரணி இருப்பதில் என்ன தடை இருக்கிறது? இதற்கான உதாரணமாக: இன்னொரு நாகரிகம் அல்லது வேறு ஏதாவது? குறிப்பாக ஏன் நித்திய கடவுள் இருக்க வேண்டும் ? | 33 |
| 10. | பிரபஞ்சத்தை ஆளும் விதிகளைப் பற்றி நாம் அறிந்துள்ளோம் அத்துடன் நிலநடுக்கங்களுக்கான காரணத்தை நாம் நன்கு அறிவோம்.இவ்விதிகள் குறித்து நாம் அறிவோமானால்; நமக்கு படைப்பாளன்; தேவைப்படுவது ஏன்? | 35 |
| 11. | இப்பிரபஞ்ச உருவாக்கத்தின் அடிப்படை தற்செயல் நிகழ்வு என்று கூறுவதில் என்னதான் பிழை –தடை- உள்ளது ? | 37 |
| 12. | பிரபஞ்சம் (முடிவில்லாதது) நித்தியமானது என்று கூறும் நாத்திகனுக்கு பதிலளிப்பது எப்படி? | 38 |
| 13. | வினை விளைவுக் கோட்பாடு படைப்பாளனுக்கு ஏன் பொருந்துவதில்லை? அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால்: படைப்பாளனைப்; படைத்தது யார்? (குறிப்பு :ஒரு நிகழ்வு நேரடியாக மற்றொரு நிகழ்வுக்கு மூலமாக இருக்கும் என இரு நிகழ்வுகளுக்கிடையிலுள்ள தொடர்பைப்பற்றி விளக்குவது வினை விளைவுக் கோட்பாடு) | 40 |
| 14. | பிரபஞ்சம் மிகப்பிரமாண்டமானது. சிறிய அளவில் இருக்கும் நாம் இந்த மாபெரும் பிரபஞ்சத்தின் மையமாக எப்படி இருக்க முடியும்? | 41 |
| 15. | பல கிரகங்கள் உள்ளன, எனவே, நிகழ்தகவு கோட்பாட்டின் படி (Probability theory15), வாழ்க்கைக்கு ஏற்ற கிரகம் இருப்பது இயற்கையானது இந்த அனுமானம் சரிதானா? என சில நாத்திகர்கள் | 46 |

| | | |
|---|---|---|
| | கேட்கிறார்கள் | |
| 16. | தொன்றுதொட்டே உள்ள (ஆதியோ அந்தமோ இல்லாத)ஒரு கடவுளை விடவும் அதிக கடவுளர்கள் ஏன் இருக்க கூடாது? | 49 |
| 17. | மார்க்கம் எதற்காக? | 51 |
| 18. | மேலும் அற நெறி-ஒழுக்கமானது மூளையின் அல்லது சமூகத்தின் விளைவாக இருப்பதில் என்ன தடை உள்ளது? | 56 |
| 19. | உலக நாகரீகத்தில் அதிக கடவுளர்கள் இருக்கிறார்கள். அவ்வாறாயின் ஏன் குறிப்பாக அல்லாஹ்வை மாத்திரம் விசுவாசிக்க வேண்டும் எனக் கூறுகிறோம்? | 58 |
| 20. | தனக்குத் தேவையில்லாத ஒன்றை ஒருவன் செய்தால் அது வீணான விடயம்; என்போம். அல்லாஹ்வுக்கு- நம்மில் எது விதத் தேவையுமில்லை என்றால் அவன் ஏன் நம்மைப் படைத்திருக்க வேண்டும்? | 61 |
| 21. | நாம் அல்லாஹ்வை அறிந்து கொள்வது எவ்வாறு? | 65 |
| 22. | இங்கு அதிகமான மதங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு இருக்கும் போது ஏன் இஸ்லாத்தை ஏற்க வேண்டும்? | 71 |
| 23. | 18- இஸ்லாம் என்றால் என்ன | 72 |
| 24. | நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் ஏன் இந்த உலகில் இருக்கிறோம்? நாம் இறுதியாக எங்கு செல்லவுள்ளோம் எனும் பதிலளிப்பதற்கு முடியாது பகுத்தறிவைக் தடுமாற்றத்தில் | 74 |

| | | |
|---|---|---|
| | ஆழ்த்தும் கேள்விகளுக்கு இஸ்லாத்தில் பதில் உள்ளதா? | |
| 25. | முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என்பதை எப்படி அறிந்து கொண்டீர்? | 76 |
| 26. | நான் அல்லாஹ்வை விசுவாசிக்குமாறு கோரப்பட்டுள்ளேன் என்பதை தெரிந்து கொள்வது எவ்வாறு? | 90 |
| 27. | நபிமார்களை நிராகரித்து (நம்பாது) அல்லாஹ்வை மாத்திரம் ஈமான் (ஏற்றுக்) கொள்வது மாத்திரம் போதுமா? | 92 |
| 28. | இறை நிராகரிப்பாளனுக்கு அவனின் நற்காரியங்களுக்காக அல்லாஹ்விடம் கூலி கிடைக்குமா? | 95 |
| 29. | இஸ்லாம்தான் உண்மை மார்க்கம் என்றிருந்தால், ஏன் அதில் சில சந்கேமான விடயங்கள் காணப்படுகிறன? | 97 |
| 30. | அல்லாஹ் ஏன் தீமையைப் படைத்தான்? அல்லது இன்னொரு வகையில் கூறின் ஒரு முஸ்லிம் தீமையெனும் சிக்களுக்கு எவ்வாறு பதில் கூறப்போகிறார்? | 100 |
| 31. | ஒரு காலகட்டத்தில் பூமியில் ஆதிக்கம் செலுத்திய மதப் போர்களுக்கு மதம்தான் காரணமாக அமைந்ததா? | 106 |
| 32. | மேற்குலகம் மிகவும் முன்னேறியிருக்கும் நிலையில் ஓரிறைக் கொள்கையை கொண்டிருக்கும் முஸ்லிமகள்; பின்தங்கிப் போனதேன்? | 108 |

| | | |
|---|---|---|
| 33. | 33-அல்லாஹ்வை வணங்குவதால் கிடைக்கும் நன்மைகள் என்ன? | 115 |
| 34. | 34- அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதலின் வெளிப்பாடுகள் எவை? இன்னொரு வகையில் கூறினால் நீ அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்ட முஸ்லிம் என்பதை அறிந்து கொள்வது எப்படி? | 117 |
| 35. | இறுதியாக! நான் இஸ்லாத்தில் நுழைவது எப்படி? | 123 |